கேலக்ஸியின்

# விண்மீன்

மின்னிதழ்

செப்டம்பர் - 2026

இதழ் - 16

‘தாக்கத்தின் விளைவுகள்தான் எழுத்து’

- எழுத்தாளர்

## மகி ஆதிரன்

நேர்காணல்



நிஸ்வாவின் நிழலில்

## மண்ணும் ஜின்னும்!!!

-இளங்கோ ராமசாமி



ISBN 978-81-686259-5-2

9 788168 625952

www.vinmeenbooks.com

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

**பதிப்பாளர்**
பாலாஜி பாஸ்கரன்

**ஆசிரியர்**
பரிவை சே குமார்

**இணை ஆசிரியர்**
தேவதர்சினி நடராஜன்
இலக்கியா தவதுரைநாதன்

**வடிவமைப்பு**
சென் பாலன்
ஹரிபிரசாத்

**Vinmeen Books**
www.vinmeenbooks.com
+91 9597238858

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

ISBN 978-81-686259-5-2
9 788168 625952

## யார் சிறந்தவர்...!?

'இங்கே நாம் ஒருவரைச் சிறந்தவர் என எப்படி முடிவு செய்கிறோம்...? அவரின் திறமை, நேர்மை, குணம் இவற்றை வைத்துதான் பெரும்பாலும் முடிவு செய்கிறோம். இது எந்த வகையில் சரியானது...?ஒருவரைச் சிறந்தவர் என்று சொல்லும்போது அவர் எப்படிச் சிறந்தவர் ஆகிறார் என்பதையும் யோசிக்க வேண்டும் இல்லையா...!?

உதாரணமாக, ஓட்டப்பந்தயத்தை எடுத்துக் கொள்வோம். பதினைந்து பேர் ஓடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். எல்லோரும் திறமையானவர்களே... முதலாவதாய் வருபவருக்கும் அவருக்கு அடுத்து வருபவர்களுக்கும் இடையில் சில விநாடிகள் வித்தியாசமே இருக்கும்... அதிலும் இரண்டாம் இடத்தைப் பிடித்தவர் வேறொரு போட்டியில் முதல் இடம் பிடித்து சிறந்தவராய் வந்திருக்கக் கூடும், இங்கே இரண்டாம் இடம்... இப்போது அவர் சிறந்தவர் இல்லை என்றாலும் முன்னவர் சிறந்தவர் ஆக, அவருக்குப் பின்னே ஓடிவந்த பதினான்கு பேரும்தானே காரணம்.

இதேபோல் அரசியலை எடுத்துக் கொண்டால், தேர்தலில் பல்லாயிரம் வாக்குகள் பெற்று வெல்லும் ஒரு தலைவரின் 'சிறந்த ஆளுமை' என்பது, அவருக்கு எதிராக நின்று களம் கண்ட மாற்று வேட்பாளர்களின் பலத்தைப் பொறுத்தே மதிப்பிடப்படுகிறது. ஒரு பலவீனமான எதிரணியை வெல்வதை விட, மிக வலிமையான, சம பலம் கொண்ட எதிரணியை வீழ்த்திப் பெறும் வெற்றியே அந்தத் தலைவரை வரலாற்றில் சிறந்தவராக நிலைநிறுத்துகிறது. தோற்பவர்கள் உருவாக்கும் அந்த ஆக்ரோஷமான களமே வெற்றியாளரின் தகுதியைத் தீர்மானிக்கிறது.

சமூகப் படிநிலைகளிலும் இதுதான் நிதர்சனம். இன்று உலகப் பணக்காரர்கள் வரிசையில் முதலிடத்தில் இருக்கும் ஒரு நிறுவனரின் பின்னால், அந்த இடத்தை சாத்தியமாக்கிய லட்சக்கணக்கான தொழிலாளர்களின் உழைப்பும், சவாலாக நின்ற சக நிறுவனங்களின் போட்டியும் மறைந்துள்ளன. சந்தையில் மற்ற நிறுவனங்கள் கொடுக்கும் நெருக்கடிதான், ஒரு நிறுவனத்தை இன்னும் சிறந்த தயாரிப்புகளை நோக்கி ஓட வைக்கிறது.

குறிப்பாகச் சொல்லப்போனால், எல்லாத் துறைகளிலும் இதுதான் நிதர்சன உண்மை. ஒரு தனிமனிதனின் உச்சகட்ட திறமை வெளிப்படுவதற்கு, அவரோடு களம் காணும் ஒட்டுமொத்த கூட்டத்தின் பங்களிப்பு அவசியமாகிறது. எனவே, வெற்றி என்பது ஒரு தனிநபர் சொத்து அல்ல; அது ஒட்டுமொத்த போட்டியாளர்களின் கூட்டு உழைப்பால் உருவாவது. முதலிடத்தைப் பாராட்டும் அதே வேளையில், அந்த முதலிடத்தை சாத்தியமாக்கிய ஒட்டுமொத்தக் களத்தையும் கொண்டாடுவதே முதிர்ச்சியான சமூகத்தின் அடையாளம்.

பரிவை சே குமார்

# இதழில்....


**சிறுகதைகள்:**

எது சரி? எது தவறு? - என்.நாகராஜன்

செங்கதிர் - கு.மணி

வட்டம் - அப்பு சிவா

சிலோன் வைத்தியர் - முரா. இரக்ஷன் கிருத்திக்

**நேர்காணல்:**

'தாக்கத்தின் விளைவுகள்தான் எழுத்து': மகி ஆதிரன் - சித்ரா சிவன்

**சரித்திரத் தொடர்:**

சிலேடையில் சிக்கிய சோழம் (பகுதி - 3) - கங்கா

**தொடர்கதை:**

இந்தியர் வீதி (அத்தியாயம் – 2) - கண்ணன் விஸ்வகாந்தி

**கட்டுரைகள்:**

எது நகைச்சுவை? - பாலாஜி பாஸ்கரன்

சொல்லின் சுவை அறிந்த தமிழ்த் தேனீ - பா.நூருல்லாஹ்



விண்மீன் மின்னிதழ்



**கட்டுரைத் தொடர்:**

நிஸ்வாவின் நிழலில் (பகுதி - 14) - இளங்கோ ராமசாமி

**திரைப்பார்வை:**

மண்டாடி - பரிவை சே.குமார்

**கவிதை:**

கமலா. ரா

# எது சரி? எது தவறு?

**என்.நாகராஜன்**



வங்கி மேலாளர் கூட்டத்தில் சங்கரநாராயணனும் செங்குட்டுவனும் அருகருகே உட்கார்ந்திருந்தார்கள். அந்த வருடத்தின் வரவு செலவு, நிலுவைக்கடன், நிகர லாபம் என எல்லாவற்றையும் கணக்கிட்டு எந்தெந்தக் கிளைகள்மிக நன்றாக செயல்பட்டிருக்கின்றன என ஆராய்ந்து கொண்டிருந்தது சேர்மன் குழு.

அந்தக் கூட்டம் முடிந்து மதிய உணவுக்கு வெளியே வரும்போது “ஏதோ ஆறு மாசத்துக்கொருதரம் இந்த மாதிரி மீட்டிங் இருக்கறதால நாம பாத்துக்க முடியுதல்ல...” என்றார் செங்குட்டுவன்.

“ஆமா, நான் மெயினா இந்தக் கூட்டத்திற்கு வர்றதே உன்னை மாதிரி ஃப்ரண்டைப் பாத்துப் பேச சந்தர்ப்பம் கிடைக்குங்கிறக்காகத்தான்...” பதிலிறுத்தார் சங்கரநாராயணன்.

சங்கரநாராயணனும் செங்குட்டுவனும் கல்லூரியில் ஒன்றாகப் படித்து ஒரே வங்கியில் வேலைக்குச் சேர்ந்தார்கள். அன்றிலிருந்து கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் ஒன்றாகவே பயணம் செய்திருக்கிறார்கள். இருவரின் திருமணங்களிலும் ஒருவருக்கொருவர் மிகுந்த ஒத்தாசையாக இருந்தார்கள். குழந்தைகள் என்றானபின்னும் இரு குடும்பங்களும் முக்கியமான விழாக்களில் கலந்துகொள்வார்கள். மேலாளர் பதவி உயர்வில் இருவரும் வேறு வேறு ஊர்களுக்கு மாற்றலாகிப் பிரிய வேண்டியதானது. அதற்குப் பிறகு இந்த மாதிரிக் கூட்டங்களில் சந்தித்துக்கொள்வார்கள்.

“ஆமா, போன முறை மீட்டிங்க்கு நீ வரலியே...?” சங்கரநாராயணன் கேட்டார்.

“அமெரிக்காவில வசிக்கிற என் பையனைப் பாக்க நானும் என் மனைவியும் போயிருந்தோம். அதான் வர முடில... ஆமா, உன் பையனும் அங்கதான இருக்கான். நீயும் போய்ட்டு வரலாமே...?”

“எங்கப்பா? ஒய்ஃப் இருந்தப்பப் போனோம். இப்பத் தனியா போகப்பிடிக்கலே... தவிர கடைசிப் பையனுக்கு ரெண்டு வருஷம் முந்திதானே கல்யாணம் ஆச்சு. இப்பதான் ஒரு குழந்தை. அவனுக்கும் சப்போர்ட்டா இருக்கணுமல்ல...?”

“ஆமா, அவன்தானே நா போனமுறை உன் வீட்டுக்கு வந்திருந்தபோது என்னை ரயிலேத்தி விட வந்தான். அன்னிக்கு ட்ரெயின் ரெண்டு மணி நேரம் லேட். பரவாயில்லே நீ போ தம்பி நான் போய்க்கிறேன் என்றபோதும் பரவாயில்லீங்க அங்கிள் என்று சொல்லி விடாப்பிடியாக இருந்து என்னை அனுப்பிச்சிட்டுத்தான் போனான்... ரொம்ப தங்கமான பையன்.”

“என்ன பிரயோஜனம்? அவங்க அண்ணனுங்க மாதிரி படிச்சிருந்தான்னா எனக்குப் பிரச்சினையே இருந்திருக்காது...” ஆயாசத்துடன் சொன்னார் சங்கரநாராயணன்.

சங்கரநாராயணனுக்கு மூன்று ஆண்பிள்ளைகள். மூத்தவன் லண்டனில் எஃப்..ஆர்.சி.எஸ் முடித்துவிட்டு அங்கேயே குடும்பத்துடன் செட்டிலாகிவிட்டான். அதற்கடுத்தவன் அமெரிக்காவில் கூகுளில் ஸாஃப்ட்வேர் எஞ்சினியர். கடைக்குட்டிக்கு மட்டும்படிப்பு காத தூரம் விலகி நின்றது.

“ஆமா, சின்னவந்தான் சரியா படிக்கலேன்னு அடிக்கடி சொல்வீங்க... இப்ப எப்பிடியிருக்கான்...?”

“பி.காம். முடிக்கவே ரொம்பக் கஷ்டப்பட்டான். நானும் ஒரு நப்பாசைல சிஏ, ஐசிடபிள்யுஏன்னு கோச்சிங்ல சேர்த்துவிட்டேன். நோ யூஸ். எனக்கு இதெல்லாம் வராதுப்பான்னு சொல்லிட்டான். அப்புறம் நானா தெரிஞ்சவங்ககிட்ட ஒரு வேலைக்கு சேர்த்துவிட்டேன். மாசம் பத்தாயிரம் வாங்கி குடும்பத்தை ஓட்டிட்டிருக்கான். ஏதோ நா இருக்ககறதால என் சம்பளத்துல கொஞ்சம் சௌகரியமா இருக்கான்.”

”சரி விடுப்பா, படிப்பு இருந்தாத்தான் வாழ்க்கைல முன்னேற முடியுமா, என்ன?... என் ரெண்டாவது பையனைப் பாரு பிஸ்னஸ்ல கொடிகட்டிப் பறக்கிறான்... தவிர நீ இருக்கியல்ல சப்போர்ட்டுக்கு? அப்புறமென்ன?” செங்குட்டுவன் வாயிலிருந்து அந்த வார்த்தைகள் வெளிப்பட்டாலும் நண்பனின் மனக்குறையை எண்ணி நிறையவே வருத்தப்பட்டார்.

“ஆமா, அண்ணன்மாருங்க நல்ல நிலைமைலதானே இருக்காங்க... ஒரே தம்பிக்கு ஏதாவது வழி பண்ண உதவலாமல்ல...?”

“நீ வேற... இங்கிருக்கிற சொத்துல கூட அவங்க பங்கை எதிர்பாக்கிறாங்க... அவனுக்கு படிப்பு கஷ்டம்னு தெரிஞ்சும் அவனை சிஏ, ஐசிடபிள்யுஏக்கு நல்லா ட்ரெயினிங் எடுத்துட்டு எக்ஸாம்ல பாஸாக வையுங்கன்னு சொல்றாங்க... இல்லப்ப அவனால முடியலேன்னு சொன்னாலும் அதெப்பிடி நாங்க பிறந்த வயித்தில்தான அவனும் பொறந்தான்... இப்படியெல்லாம் சோம்பேறியா இருந்தான்னா எங்களால் ஒண்ணும் பண்ண முடியாதுன்னுட்டாங்க...”

மரு.சரவணன் என்ற கவிஞர் வாட்ஸப்பில் பகிர்ந்தது செங்குட்டுவன் நினைவுக்கு வந்தது.

‘நான்கு பேர் கொண்ட குடும்பத்தில் மூன்று பேர் லட்சங்களில் சம்பாதிப்பர். ஒருவன் வயிற்றுக்கே வழியின்றி வாழ்வான். அவனும் தங்களைப் போலவே முன்னேற வேண்டுமென நினைப்பாரே தவிர, அவனையும் சேர்த்துக்கொண்டு பகிர்ந்து வாழமாட்டார். வீடளவில் பகிர்தல் தெரியாத மனித புத்தி நாடளவிலா விரியும்...’ தனக்குள் சிரித்துக் கொண்டார்.

“இந்த வருஷத்தோடு ரெண்டு பேரும் ரிட்டயராறோம்... என்னை மறந்துடாத, என்ன? அப்பப்ப வந்துட்டுப் போய்ட்டிரு...” சங்கரநாராயணன் சொல்லவும் செங்குட்டுவன் கண்கலங்கி நண்பனின் கையைப் பிடித்துக்கொண்டார்.

ஆனால் அதற்குப் பிறகு மூன்று வருடங்கள் சந்தித்துக்கொள்ளவேயில்லை.

*

ஒருநாள் தன் இன்னொரு நண்பர் மூலமாக சங்கரநாராயணனைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆடிப்போனார் செங்குட்டுவன். சங்கரநாராயணனுக்கு தலையில் இரத்தக்கசிவினால் பக்கவாதம் வந்து எமனுடன் போராடி இப்போது ஓரளவுக்குப் பரவாயில்லை என்று சொன்னார் அந்த நண்பர். அடுத்த கணமே சங்கரநாராயணனின் ஊரை நோக்கிப் புறப்பட்டார்.

‘சே, என்ன மனுஷன் நான்! எத்தனை தடவை பாக்கப்போலாம்னு நெனைச்சும் ஏதோ காரணத்தினாலே தள்ளி தள்ளிப் போட்டு இப்ப இந்த நிலையில அவனைப் பாக்கப்போறேனே...’ எனத் தன்னையே நொந்துகொண்டார்.

“வாப்பா, இப்பத்தான் வழி தெரிஞ்சுதா...?” கண்களில் கண்ணீரோடு வரவேற்றார் சங்கரநாராயணன்.

“என்னை மன்னிச்சிடுப்பா... வரணும்னு நெனைச்சுட்டே இருந்தேன். என்னவோ முடியல... சரி, இப்ப உடம்பு நல்லாத்தானே இருக்கு... ஒரு ப்ராப்ளமும் இல்லியே?”

“அதையெல்லாம் தாண்டி வந்தாச்சு...” சொன்னவர் மருத்துவமனியில் சேர்த்ததிலிருந்து வெளியே வரும் வரை நடந்தவற்றை வரிசைக்கிரமாக விளக்கினார்.

“பரவாயில்லே... எப்பிடியோ ஆண்டவன் புண்ணியத்தில மீண்டு வந்துட்டே... பயப்படாதேப்பா, உன் நல்ல மனசுக்கு ஆண்டவன் ஒரு குறையும் வைக்க மாட்டான்...”

“மாமா, இந்தாங்க காஃபி எடுத்துக்குங்க...” என்று அந்தப் பெண் தட்டை இருவருக்கும் நீட்டினாள்.

"இது உன் கடைசி மருமகதானே" என்று கேட்ட செங்குட்டுவன் “நல்லாயிருக்கியாம்மா...?" என்றார். புன்னகையுடன் தலையாட்டினாள் அந்தப் பெண்.
“செங்குட்டுவா, இவதான் என்னை அப்பா மாதிரி பாத்துக்குறா. ஆஸ்பத்திரிலே சேர்த்ததிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகும்வரை என் கடைசிப் பையனும் அவன் பொண்டாட்டியும் என்னை அப்பிடி கவனிச்சிட்டாங்க... பணம் செலவழிச்சதென்னவோ நாந்தான்... ஆனா, என் பையன் ஆஸ்பத்திரில இருந்த நாள் பூரா என் கட்டில் தலைமாட்லயே இருந்து பாத்துட்டான்.

அவன் பொண்டாட்டியும் தினம் மூணு நாலு தடவை சாப்பாடு காஃபின்னு சுமந்தாள்…" சங்கரநாராயணனுக்குச் சொல்லும்போது கண்களில் கடகடவென கண்ணீர் ஓடியது.

"மாமா, இப்ப எதுக்கு அழறீங்க? அதான் நாங்க இருக்கோம்ல… டாக்டர் உங்களை உணர்ச்சி வசப்படக்கூடாதுன்னு சொல்லியிருக்காங்க…" செல்லமாகக் கடிந்தாள் மருமகள்.

"ஆமாம்பா, எத்தனை பேருக்கு இந்த மாதிரி பாக்கியம் கிடைக்கும்?" ஆதரவாகப் பேசினார் செங்குட்டுவன். மருமகள் காஃபி கொண்டு வந்த தட்டை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

"ஆமா, உன் மத்த ரெண்டு பசங்களும்…" இழுத்தார் செங்குட்டுவன்.

"வந்தாங்க, வந்தாங்க… மகன்க மட்டும் வந்தாங்க… மருமகள்க குழந்தைகளைப் பாத்துக்கணும்னு வரலே… அவங்களும் ஒரு வாரம் இருந்துட்டு லீவ் இல்லப்பா மனைவி குழந்தைகள் தனியா இருக்காங்கன்னு சொல்லிட்டுக் கிளம்பிப் போய்ட்டாங்க…" அவர் குரலில் துயரம்.

விண்மீன் மின்னிதழ்

"விடப்பா, அவங்களும் பொழப்பைப் பாக்கணுமல்ல…"

"ரெண்டு பசங்களையும் ஃபாரினுக்கு அனுப்பிப் படிக்க வைக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன்… இதோ, இந்த இளையவனுக்கு நா எதுவுமே பண்ணல…" விம்மினார்.

"சங்கரா, கடவுள் கணக்கு சரிதான்பா… நாமதான் எல்லாத்தையும் பிழையா பாக்கிறோம்… எது சரி, எது தவறுன்னு சொல்ல முடியாது. இன்னிக்கு சரின்னு தோணறது நாளைக்குத் தவறா தெரியலாம்…. அன்னிக்கு மூத்தவங்க ரெண்டு பேரால பிரச்சினை இல்லை, நல்லாப் படிச்சு ஃபாரின்லே செட்டிலாய்ட்டாங்கன்னு பெருமையா சொன்னே… சின்னவனுக்குத்தான் படிப்பு வரலே இப்படி ஆய்ட்டான்னு வருத்தப்பட்டே… இப்ப யோசிச்சுப்பாரு… இந்தப் பையனும் நல்லாப் படிச்சுட்டு ஆஸ்திரேலியா, ஜெர்மனின்னு போயிருந்தான்னா உன் நிலைமை என்னாயிருக்கும்…"

நினைத்துப் பார்க்கவே பயமாயிருந்தது சங்கரநாராயணனுக்கு. மூத்த மகன்கள் போகும்போது பேசியது நினைவுக்கு வந்தது.

"அப்பா, சொல்றோம்னு தப்பா எடுத்துக்காதீங்க… இப்பவே நீங்க யார் யாருக்கு என்ன தரணும்னு உயில் எழுதிட்டீங்கன்னா பின்னாடி சண்டை சச்சரவு வராது…"

இந்த உலகில் எல்லாருக்கும் எல்லாமும் இருக்கிறது, ஆனால் ஒரு பேராசைக்காரனுக்கு அது போதாது. அது தன் மூத்த மகன்கள் விஷயத்தில் எப்படிக் கச்சிதமாகப் பொருந்துகிறதென்று எண்ணி வியந்தார். கோடி கோடியா வெளிநாட்டில் சம்பாரித்தாலும் இங்கு இருக்கிற சில லட்சங்களுக்கு இன்னும் ஆசை. ஒரு முடிவுக்கு வந்தவராக வக்கீலை வரவழைத்து உயில் தயார் செய்தார். தன் சுய சம்பாத்தியத்தில் உருவான வீடு, சேமிப்பு அனைத்தும் தன் கடைசி மகனுக்கு மட்டுமே சேரவேண்டுமென்று எழுதினார். மகனிடம் காட்டினார்.

"அப்பா, இந்த உயில் வேண்டாம். நாங்க மூணு பேரும் உங்க புள்ளைகதான்… அவங்களுக்கும் எல்லா வகையிலும் உரிமை உண்டு…."

"அப்போ என்னை இந்த நிலைமைல விட்டுட்டு ஏம்பா போனாங்க? என்னைப் பாத்துக்கிறதில அவங்களுக்குக் கடமை இல்லியா?"

"அப்பா, இந்த சேவை எனக்குக் கிடைச்ச பாக்கியம். என் அப்பாவைக் கடைசிவரைப் பாத்துட்டோம்கிற திருப்தியே எனக்கும் என் மனைவிக்கும் பெரிய சொத்து. அளவான பணத்தோடு நாங்க சந்தோஷமாவே இருக்கிறதை நீங்க பாத்திங்கள்ல? என்ன, என் குழந்தையை கான்வெண்ட்ல சேர்த்து படிக்க வெக்க முடியாது. சரி, கார்ப்பரேஷன் ஸ்கூல்ல சேர்த்துட்டுப் போறேன். அப்துல் கலாம் ஐயா கான்வெண்ட்லியா படிச்சார்? பணம் இன்னிக்கு வரும்; நாளைக்குப் போகும். ஆனா, பாசம் என்னைக்கும் மாறாது. இப்ப நான் அண்ணன்களுக்குரிய பங்கையும் சேர்த்து வாங்கிட்டன்னா அது பண்டமாற்று முறையாயிடும். 'எல்லார்கிட்டியும் சும்மாவா எங்கப்பாவைப் பாத்துட்டான்? அவர் பணத்துக்காத்தானே செஞ்சான்னு சொல்வாங்க…' எனக்கு அந்த அவப்பெயர் வேண்டாம். எனவே, இந்த மேட்டரை இதோட விட்ருங்க…" மகன் கறாராகப் பேசினான். மருமகளும் கணவனை ஆமோதித்துப் பேசினாள்.

இரண்டாவது முறையும் தான் பிழையாகவே யோசித்ததை எண்ணி வெட்கப்பட்ட சங்கரநாரயணன் தன் இளைய மகனையும் மருமகளையும் பெருமையாகப் பார்த்தார்.

# “சொல்லின் சுவை அறிந்த தமிழ்த் தேனீ “ சாலமன் பாப்பையா

**பா.நூருல்லாஹ்**

**த**மிழ் என்பது வெறும் மொழியல்ல, அது தலைமுறைகளின் நினைவையும், பண்பாட்டின் உயிரையும், மனித வாழ்வின் அனுபவங்களையும் சுமந்து செல்லும் பேராறு. அந்தப் பேராற்றில் இருந்து இலக்கியத் தேனைத் தேடி எடுத்து, அதை எளிய தமிழில் மக்களுக்குப் பருகக் கொடுத்தவர்களில் தனித்துவமானவர் சாலமன் பாப்பையா. அவரது பேச்சைக் கேட்டவர்கள் இலக்கியத்தைப் புரிந்துகொண்டதோடு மட்டுமல்லாமல், இலக்கியத்தை ரசிக்கவும் கற்றுக்கொண்டார்கள்.

விண்மீன் மின்னிதழ்



ஒரு மனிதரின் இலக்கியத் தொடர்பை அவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கையால் மட்டும் அளந்துவிட முடியாது.அவர் இலக்கியத்தை எவ்வாறு வாழ்வோடு அணைத்தார்; எத்தனை மனிதர்களின் உள்ளங்களில் அதை விதைத்தார் என்பதில்தான் அவரது இலக்கியப் பங்களிப்பின் உண்மையான அளவு இருக்கிறது. அந்த வகையில் சாலமன் பாப்பையாவின் இலக்கியப் பயணம் தனித்துவமானது.

## இலக்கியத்தின் மீது கொண்ட தீராத தாகம்:

“தாகம்” என்ற சொல்லுக்கு ஒரு சிறப்பு உண்டு. தாகம் கொணடவன் நீரைப் பருகியவுடன் தாகம் தீர்ந்துவிடும். ஆனால் இலக்கியத் தாகம் அப்படியல்ல.

படிக்கப் படிக்க மேலும் படிக்க வேண்டும்.

அறிய அறிய மேலும் அறிய வேண்டும்.

ஒரு கருத்தை உணர்ந்தவுடன் அதற்குள் மறைந்திருக்கும் இன்னொரு கருத்தைத் தேட வேண்டும். சாலமன் பாப்பையாவின் இலக்கியத் தாகமும் அத்தகையதே.

தமிழின் தொன்மையான இலக்கியங்களிலிருந்து, நவீன வாழ்க்கை வரையிலான பல்வேறு அனுபங்களை அவரது பேச்சில் காண முடிந்தது. இலக்கியம் என்பது நூலக அலமாரியில் வைக்கப்பட வேண்டிய பொருள் அல்ல. அது வீட்டிலும், தெருவிலும், பள்ளியிலும், சமூகத்திலும் பேசப்பட வேண்டியஉயிருள்ள அறிவு என்பதை பேச்சு உணர்த்தியது. அவரது பட்டிமன்ற மேடை இதற்குச் சிறந்த சான்று. பட்டிமன்றத்தை வெறும் வாதம்-எதிர்வாதம் நடைபெறும் அரங்கமாக அவர் அணுகவில்லை. கருத்துகளை மக்களின் அன்றாட

வாழ்க்கையோடு இணைத்து, நகைச்சுவையையும் நயத்தையும் கலந்து, இலக்கியத்தின் ஆழமான கருத்துகளை எளிமையாக எடுத்துச் சென்றார்.

### சங்க இலக்கியத்திலிருந்து சமகால வாழ்வுக்கு:

தமிழ் இலக்கியத்தின் பெருமை அதன் தொன்மையில் மட்டும் இல்லை. அது இன்றைய மனிதனின் வாழ்க்கைக்கும் பொருந்தக்கூடியதாக இருப்பதில்தான் உள்ளது. சங்கப் பாடல்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டிருந்தாலும், அவற்றில் பேசப்படும் அன்பு, பிரிவு, வீரம், நட்பு, அறம், மனிதநேயம் ஆகியவை இன்றும் நம்மோடு பேசுகின்றன. இந்த உண்மையை மக்கள் எளிதில் உணரச் செய்ததில் சாலமன் பாப்பையாவின் பேச்சுக்கு முக்கிய இடமுண்டு.

கடினமான இலக்கியச் சொற்களைச் சேர்த்து, கேட்பவரை அச்சப்படுத்தும் பாணிக்கு மாறாக, அவர் அன்றாட வாழ்க்கையின் எடுத்துக்காட்டுகளைக் கொண்டு இலக்கியம் படித்தவர்களின் சொத்தாக மட்டும் இல்லாமல், பொதுமக்களின் உரையாடலாகவும் மாறியது.

ஒரு நல்ல ஆசிரியர் பாடத்தை மாணவரின் மனநிலைக்கு ஏற்ப எளிமைப்படுத்துவார். அதுபோல சாலமன் பாப்பையா இலக்கியத்தை மக்களின் மனநிலைக்கு ஏற்ப எடுத்துரைத்தார். இதனால்தான் அவரது பேச்சில் தமிழ் இருந்தது. அதே நேரத்தில் வாழ்க்கையும் இருந்தது.

### திருக்குறளோடு கொண்ட நெருக்கம்:

தமிழ் இலக்கிய உலகில் திருக்குறளுக்கு இருக்கும் இடம் அளப்பரியது. அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பெரும் வாழ்க்கைத் தளங்களையும் இரு அடிகளில் சொல்லும் வள்ளுவரின் மேதைமை உலகையே வியக்கச் செய்கிறது.




திருக்குறள் போன்ற உயர்ந்த இலக்கியத்தை மக்களிடம் கொண்டு செல்லும்போது, வெறும் உரைநடையில் அதன் பொருளைச் சொல்வது மட்டும் போதாது. அதன் வாழ்க்கைப் பயன்பாட்டையும் விளக்க வேண்டும்.இந்தப் பணியை சாலமன் பாப்பையா தனது தனித்துவமான பேச்சு நடையில் செய்தார். வள்ளுவர் கூறிய கருத்துகளை குடும்பம், உறவு, நட்பு, பண்பு, சமூக வாழ்க்கை போன்றவற்றுடன் இணைத்து பேசும்போது, திருக்குறள் பழைய நூல் என்ற எண்ணம் மறைந்து, திருக்குறள் இன்றும் நமக்காகப் பேசும் வாழ்க்கை நூல் என்ற உணர்வு உருவானது.

அவரது உரைகளில் குறள் ஒரு மேற்கோளாக மட்டும் வரவில்லை. அது வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் கருவியாக மாறியது.

### பட்டிமன்றம் – அவருக்கு ஒருமேடை மட்டுமல்ல:

சாலமன் பாப்பையாவின் பெயரைச் சொன்னவுடன் பலரது நினைவிலும் முதலில் வருவது பட்டிமன்றமே. ஆனால் அவரது பட்டிமன்றப் பங்களிப்பை வெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சியாகக் குறைத்துப் பார்க்க முடியாது. பட்டிமன்றம் என்பது கருத்துப் பரிமாற்றத்திற்கான தமிழ் மரபின் நவீன வடிவமாக அவரிடம் வெளிப்பட்டது. கருத்து வேறுபாடுகளை சிரிப்போடு எதிர்கொள்ளலாம். எதிராளியை மதித்தபடியே கருத்தை எதிர்க்கலாம். கடினான விஷயங்களையும் பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் பேசலாம். அறிவும் நகைச்சுவையும் ஒன்றாகப் பயணிக்கலாம். இவற்றை அவர் தனது மேடைப் பணியின் வழியாக நிரூபித்தார்.

அவரது பேச்சில் நகைச்சுவை இருந்தது. ஆனால் அது வெறும் சிரிப்புக்காக மட்டுமே பயன்படுத்தப்படவில்லை. சிரிப்பின் வழியாக ஒரு சிந்தனையை விதைப்பதே அவரது தனிச்சிறப்பு. சில நேரங்களில் ஒரு நீண்ட உரையால் சொல்ல முடியாத கருத்தை ஒரு சிறிய நகைச்சுவைத் துணுக்கு மக்களின் மனதில் ஆழமாகப் பதித்துவிடும். அந்த உத்தியை அவர் இயல்பாகக் கையாண்டார்.

### எளிய மொழியில் எட்டிய உயர்ந்த இலக்கியம்:

இலக்கியத்தின் மிகப்பெரிய சவால் அதன் ஆழத்தை இழக்காமல் எளிமைப்படுத்துவதாகும். மிக எளிய மொழியில் பேசுபவர் ஆழமற்றவர் என்றும், கடினமான சொற்களைப் பயன்படுத்துபவர் மட்டுமே அறிவாளி என்றும் நினைப்பது தவறு.

உண்மையில், ஆழமான கருத்தை எளிமையாக எடுத்துச் சொல்லக்கூடியவரே சிறந்த பேச்சாளர். சாலமன் பாப்பையாவின் பேச்சில் இந்த ஆற்றல் காணப்பட்டது.

அவரது மொழிநடை மக்கள் பேசும் தமிழோடு நெருக்கமாக இருந்தது. அதனால் அவர் மேடையில் பேசும்போது தொலைவில் நிற்கும் ஒரு அறிஞராக அல்லாமல், நம் வீட்டில் அமர்ந்து பேசும் ஒரு அறிவார்ந்த பெரியவரைப் போன்ற உணர்வை ஏற்படுத்தினார். இதுவே அவரது இலக்கியப் பரப்பின் மிகப்பெரிய பலமாக அமைந்தது. தமிழ் இலக்கியத்தைப் பற்றி பேசும்போது தமிழறிஞர்களிடம் மட்டுமே பேசாமல், இலக்கியத்தை அதிகம் படிக்காதவர்களிடமும் பேசினார். இதனால் பலருக்கு இலக்கியத்தின் கதவு திறந்தது.

## இலக்கியமும் மனிதநேயமும்:

தமிழ் இலக்கியத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்று மனிதநேயம்.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற சிந்தனை, மனிதர்களுக்கிடையிலான எல்லைகளைத் தாண்டி உலக சகோதரத்துவத்தைப் பேசுகிறது. திருக்குறள் அறத்தை முன்னிறுத்துகிறது. சங்க இலக்கியம் மனித உணர்வுகளின் பல்வேறு பரிமாணங்களைப் பதிவு செய்கிறது. இந்த மனிதநேயப் பார்வையை மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இணைப்பதும் சாலமன் பாப்பையாவின் பேச்சின் முக்கிய அம்சமாக இருந்தது. இலக்கியம் என்பது தேர்வுக்காக மனப்பாடம் செய்ய வேண்டிய பாடப்பகுதி அல்ல. நல்ல மனிதனாக வாழ வழிகாட்டும் வாழ்க்கைப் பாடம் என்ற உணர்வை அவரது உரைகள் ஏற்படுத்தின.
ஒரு குறளைப் படிப்பது அறிவு.

அதன் பொருளைப் புரிந்து கொள்வது தெளிவு.

அதை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது பண்பு.

இந்த மூன்றையும் இணைக்கும் பாலமாக அவரது பேச்சு செயல்பட்டது.

## நகைச்சுவையின் வழியாக அறிவை விதைத்தவர்:

நகைச்சுவை என்பது ஒரு கலை. ஆனால் நகைச்சுவையின் பின்னால் சிந்தனை இருக்கும்போது அது இன்னும் உயர்ந்த கலையாகிறது. சாலமன் பாப்பையாவின் நகைச்சுவையில் வாழ்க்கையின் நுணுக்கங்களைப் பார்க்க முடிந்தது. குடும்ப உறவுகள், கணவன்-மனைவி உறவு, பெற்றோர்-பிள்ளைகள் உறவு, நண்பர்கள், சமூகப் பழக்கவழக்கங்கள் என அன்றாட வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகளை அவர் நகைச்சுவையுடன் அணுகினார். ஆனால் அந்தச் சிரிப்புக்குப் பின்னால் ஒரு கருத்து இருந்தது. சிரித்துவிட்டு மறந்து விடும் நகைச்சுவைக்கும், சிரித்த பிறகு சிந்திக்க வைக்கும் நகைச்சுவைக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. அவரது சிறந்த பேச்சுகள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவை. அதனால்தான் அவரது பேச்சைக் கேட்டவர்கள் சிரிப்பதோடு நின்றுவிடாமல், அவர் சொன்னதில் ஒரு உண்மை இருக்கிறதே! என்று சிந்திக்கத் தொடங்கினர்.

## இளைஞர்களிடம் இலக்கியத்தை எடுத்துச் சென்ற பணி:

இன்றைய தலைமுறையை இலக்கியத்தோடு இணைப்பது எளிதான காரியமல்ல. வேகமான தகவல் உலகம், சமூக ஊடகங்கள், குறுந்தகவல்கள் ஆகியவற்றின் காலத்தில் நீண்ட இலக்கிய நூல்களை வாசிக்கச் செய்வது பெரும் சவால். இந்தச் சூழலில் இலக்கியத்தைப் பேசக்கூடிய மொழியில் மக்களிடம் கொண்டு செல்வது மிக முக்கியம். சாலமன் பாப்பையாவின் பேச்சு இதற்குப் பயன்பட்டது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் முதல் பொதுமக்கள் வரை பல தரப்பினரும் தமிழ் இலக்கியக் கருத்துகளை அவரது வாயிலாகக் கேட்டனர். இலக்கியம் என்பது பயப்பட வேண்டிய பாடமல்ல. ரசிக்க வேண்டிய அனுபவம் என்பதை அவரது மேடை உணர்த்தியது.

ஒரு மாணவன், முதலில் ஒரு குறளை அவரது பேச்சில் கேட்கலாம். பின்னர் அதன் பொருளைத் தேடலாம். அங்கிருந்து திருக்குறளைப் படிக்கலாம். அதிலிருந்து சங்க இலக்கியத்திற்குச் செல்லலாம். இப்படிப் பார்த்தால், ஒரு பேச்சு ஒரு வாசகரை உருவாக்கும் தொடக்கப்புள்ளியாக மாறுகிறது.

## இலக்கியத்தை மக்கள் இயக்கமாக மாற்றிய குரல்:

தமிழ் இலக்கியத்தின் வரலாற்றில் பல அறிஞர்கள் தங்கள் ஆய்வுகளால் பெரும் பங்களிப்புகளைச் செய்துள்ளனர். பல எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளால் வாசகர்களை உருவாக்கியுள்ளனர். பல பேச்சாளர்கள் மேடையின் வழியாக சிந்தனைகளைப் பரப்பியுள்ளனர். சாலமன் பாப்பையாவின் தனிச்சிறப்பு – இந்த மூன்று



உலகங்களுக்கிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தியதுதான்.

விண்மீன் மின்னிதழ்

அறிஞர்களிடம் இருக்கும் கருத்தை அவர் பொதுமக்களிடம் எடுத்துச் சென்றார். பொதுமக்களின் வாழ்க்கை அனுபவத்தை இலக்கியத்தோடு இணைத்தார். இலக்கியத்தன் உயரத்தையும் மக்களின் இயல்பான மொழியையும் ஒரே மேடையில் சந்திக்கச் செய்தார். அதனால் அவரது பட்டிமன்றங்கள் வெறும் நிகழ்ச்சிகளாக இல்லாமல், ஒரு வகையான மக்கள் இலக்கியப் பள்ளிகளாக அமைந்தன. சொற்களை மட்டும் பேசவில்லை. சொல்லின் பின்னால் இருந்த வாழ்வைப் பேசினார். ஒரு நல்ல இலக்கியப் பேச்சாளர் சொற்களின் பொருளை விளக்குவார். ஒரு சிறந்த பேச்சாளர் அந்தச் சொல்லுக்குள் மறைந்திருக்கும் வாழ்க்கையை விளக்குவார். சாலமன் பாப்பையாவின் பல உரைகளில் இந்த இரண்டாவது பண்பை உணர முடிந்தது.அன்பு என்ற சொல்லைச் சொன்னால், உறவுகளை நினைக்கச் செய்தார்.

அறம் என்ற சொல்லைச் சொன்னால் மனிதப் பொறுப்பை நினைக்கச் செய்தார்.

நட்பு என்ற சொல்லைச் சொன்னால் நம்பிக்கையை நினைக்கச் செய்தார்.

குடும்பம் என்ற சொல்லைச் சொன்னால் மனித உறவுகளின் மதிப்பை நினைக்கச் செய்தார். இதுவே இலக்கியத்தின் உண்மையான பயன்.

நூலில் இருக்கும் சொல் வாழ்க்கைக்குள் வரும்போது அது இலக்கியமாக மட்டும் இருப்பதில்லை. அது பண்பாடாகிறது. அந்தப் பண்பாட்டை மக்களிடையே உயிரோடு வைத்திருக்க சாலமன் பாப்பையாவின் குரல் உதவியது.

**ஒரு தலைமுறையின் நினைவில் நிற்கும் குரல்:**

ஒரு கலைஞரின் புகழ் அவர் வாழும் காலத்தோடு முடிவடையாது. அவர் உருவாக்கிய தாக்கம் அடுத்த தலைமுறையிலும் தொடரும்போது மட்டுமே அந்தப் புகழ் நிலைத்ததாகிறது. சாலமன் பாப்பையாவின் பேச்சைக் கேட்ட தலைமுறையினர், அவரது குரலில் தமிழின் இனிமையைக் கேட்டனர். அவரது நகைச்சுவையில் வாழ்க்கையின் உண்மையைக் கண்டவர். அவரது இலக்கியச் சுட்டுக்களில் தமிழ் நூல்களின் பெருமையை உணர்ந்தனர். அதனால் அவரது குரல் ஒரு தனிநபரின் குரலான மட்டுமே இல்லாமல், தமிழ் இலக்கியத்தை மக்களிடம் கொண்டு சென்ற ஒரு காலத்தின் குரலாகவும் நினைவில் நிற்கிறது.

## இலக்கியத் தாகம் – என்றும் தீராத பயணம்:

ஒரு மனிதரின் வாழ்வில் சில பயணங்கள் இலக்கை அடைவதற்காகத் தொடங்கப்படுகின்றன. ஆனால் இலக்கியப் பயணம் அப்படியல்ல. அது இலக்கில்லாத தேடல். இன்று ஒரு நூலைப் படித்தால் நாளை இன்னொரு நூல் அழைக்கும். ஒரு குறளைப் புரிந்துகொண்டால் அதன் பின்னால் நிற்கும் வாழ்க்கை அழைக்கும். ஒரு சங்கப் பாடலை ரசித்தால் அதன் காலத்தையும் பண்பாட்டையும் அறிய வேண்டும் என்ற ஆர்வம் உருவாகும். இந்தத் தீராத தேடலே இலக்கியத் தாகம்.

சாலமன் பாப்பையாவின் வாழ்க்கையிலும் இந்தத் தாகம் அவரது பேச்சின் வழியாக வெளிப்பட்டது. தமிழ் இலக்கியத்தைப் பற்றி பேசுவது மட்டுமல்ல. அதை மக்கள் ரசிக்கும் வகையில் மாற்றுவது அவரது தனித்துவமாக இருந்தது. அவர் இலக்கியத்தை மக்களிடம் கொண்டு சென்றார். மக்கள் இலக்கியத்தைத் தங்கள் வாழ்க்கையோடு இணைத்துக் கொள்ளும் சூழலை உருவாக்கினார்.



## நிறைவுரை:

சாலமன் பாப்பையாவைப் பற்றி எழுதும்போது, ஒரு பட்டிமன்றப் பேச்சாளரைப் பற்றி மட்டுமே எழுத முடியாது. ஒரு தமிழ்ப் பேச்சாளரைப் பற்றி மட்டுமே எழுத முடியாது. இலக்கியத்தை நேசித்த ஒரு மனிதரைப் பற்றியும் மட்டும் எழுதிவிட முடியாது. அவர் இலக்கியத்துக்கும் மக்களுக்கும் இடையே அமைந்த ஒரு உயிர்ப்பாலம். புத்தகங்களின் பக்கங்களில் உறங்கிக் கொண்டிருந்த பல இலக்கியக் கருத்துகளை அவர் மேடைகளின் வழியாக மக்களின் காதுகளுக்குக் கொண்டு சென்றார். அந்தக் கருத்துகள் காதுகளில் நின்றுவிடாமல், சிரிப்பாக மாறின. சிந்தனையாக மாறின. சில நேரங்களில் வாழ்க்கைப் பாடமாகவும் மாறின.

தமிழ் இலக்கியத்தின் பெருமையைப் பேச பல அறிஞர்கள் இருந்தார்கள். ஆனால் அந்தப் பெருமையைப் பாமரனும் ரசிக்கும் மொழியில் சொல்லியவர் சாலமன் பாப்பையா.

அவரது குரல் நின்றுவிட்டாலும், அவர் நேசித்த தமிழ் நிற்காது. அவரது மேடை அமைதியானாலும், அவர் விதைத்த இலக்கியச் சிந்தனைகள் அமைதியாகாது. அவரது உரை முடிந்தாலும், அவர் எழுப்பிய சிந்தனை முடிவடையாது. ஒரு நல்ல பேச்சாளர் மறைந்தால் ஒரு குரல் மறைகிறது. ஒரு நல்ல இலக்கியவாதி மறைந்தால் ஒரு சிந்தனைப் பயணம் தொடர்கிறது.

ஆனால் இலக்கியத்தை மக்களின் இதயத்துக்குள் கொண்டு சென்ற ஒருவர் மறைந்தால், அவர் பேசிய ஒவ்வொரு தமிழ்ச் சொல்லும் அவருக்குப் பதிலாகப் பேசத் தொடங்குகிறது. சாலமன் பாப்பையாவின் இலக்கியத்தாகம் அப்படிப்பட்டது. அது ஒரு மனிதனின் தாகமல்ல. தமிழைத் தேடிய ஒரு தலைமுறையின் தாகம். அவர் பருகிய தமிழ் தேன், அவர் பேசிய தமிழ்ச் சொல், அவர் விதைத்த இலக்கியச் சிந்தனை இவை தலைமுறைகள் கடந்தும் தமிழின் நெஞ்சில் வாழட்டும்.

சொல் முடிந்தாலும் சுவை முடியாது.

குரல் ஓய்ந்தாலும் தமிழ் ஓயாது.

சாலமன் பாப்பையாவின் இலக்கியப் பயணத்தை நினைவுகூரும் ஒவ்வொரு தருணத்திலும், நம் உள்ளத்தில் ஒலிக்க வேண்டிய ஒரே உண்மை. தமிழை நேசிப்பது என்பது தமிழைப் பேசுவது மட்டும் அல்ல. தமிழின் இலக்கியச் செல்வத்தை அடுத்த தலைமுறையின் கைகளில் ஒப்படைப்பதும் ஆகும். அந்தப் பணியைத் தன் வாழ்நாள் முழுவதும் செய்த சாலமன் பாப்பையாவுக்கு தமிழின் சார்பில் ஒரு தலைவணக்கம்.

# ‘தாக்கத்தின் விளைவுகள்தான் எழுத்து’ - எழுத்தாளர் மகி ஆதிரன்

**சித்ரா சிவன்**



**மகி ஆதிரன்**, சமகாலத் தமிழ் இலக்கியச் சூழலில் இயங்கிவரும் எழுத்தாளர். சிறுகதை, நாவல் மற்றும் நவீன கவிதையியல் குறித்த சிந்தனைகளில் தனது தனித்துவமான பார்வையை முன்வைத்து வருபவர். ‘மாயக்கண்ணி’ சிறுகதைத் தொகுப்பும் ‘அலறல்’ நாவலும் அவரது படைப்புலகின் முக்கியமான படைப்புகளாகக் குறிப்பிடலாம். மனிதர்களின் அகஉலகம், சமூக உறவுகள், காலத்தின் மாற்றங்கள், நவீன வாழ்வின் உளவியல் சிக்கல்கள் ஆகியவற்றை இலக்கியத்தின் வழியாக அணுகும் அவரது எழுத்து, சமகால வாழ்வனுபவங்களுடன் உரையாடுகிறது.

கவிதையின் இயல்பு, செயற்கை நுண்ணறிவு யுகத்தில் கவிதையின் எதிர்காலம், கவிதையின் சமூகப் பங்கு போன்றவற்றையும் அவர் நவீன கவிதையியல் சார்ந்த கட்டுரைகளில் விவாதித்து வருகிறார். குறிப்பாக, மனிதப் படைப்பாற்றலுக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான உறவு குறித்து அவர் எழுப்பும் கேள்விகள், இன்றைய இலக்கியச் சூழலில் கவனிக்கத்தக்கவை.

காவல்துறையில் துணை காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றவர். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற தேனி நகர் கிளைச் செயலாளராக செயல்படுகிறார். இதுவரை ‘இடர்களின் தட்பம்’, ‘கொரியாலிஸ் விளைவு’, ‘கனைத்துக்கொண்டே இருக்கும் நார்சிஸ குதிரை’, ‘கள்ளக்காதல்’ கவிதைத் தொகுப்புகளும் ‘மாயக்கண்ணி’ எனும் சிறுகதைத் தொகுப்பும் வெளிவந்திருக்கிறது.

தற்போது எதிர் பதிப்பகம் வழியாக ‘அலறல்’ எனும் நாவல் வெளிவரவிருக்கிறது. கேலக்ஸி விண்மீன் இதழுக்காக நேர்கண்டபோது மிகச் செறிவான மொழியில் மகி ஆதிரன் அளித்த செவ்வி...

**‘மாயக்கண்ணி’ என்ற தலைப்பே வாசகருக்குள் பல்வேறு எதிர்பார்ப்புகளை உருவாக்குகிறது. இந்தத் தலைப்பைத் தேர்ந்தெடுத்ததின் பின்னணி என்ன?**

முதலில் இந்த நேர்காணலுக்காக பதில் சொல்லும் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த சித்ரா சிவன் ஆகிய உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது எனக்கு வாழ்வின் முதல் செவ்வி. மகிழ்ச்சியும் நன்றியும்.

‘மாயக்கண்ணி’ என்ற தலைப்பில் நான் எழுதிய சிறுகதை எனது மனதுக்கு நெருக்கமான ஒரு கதை. அனைத்துக் கதைகளும் நெருக்கமானவைதான். இருந்தாலும் இது சற்று அதிகமானது என்பேன். எனக்கு காலம்/ வெளி (Time & Space) என்கிற புலம் குறித்த ஆழமான இயற்பியல் கலந்த தத்துவார்த்தத்தின் அடிப்படையிலான மனச்சிக்கல் எப்பொழுதும் உண்டு. இந்த பூமியில் அமைந்திருக்கும் வெவ்வேறு நாடுகளின் இடையில் வெவ்வேறு ‘நேரம்’ இயங்குகிறது. அப்படியான வெவ்வேறு நேரங்களில் நிகழும் வெவ்வேறு சம்பவங்கள் ‘வெளியில்’ ஒன்றாகவே நிகழ்கிறது.




விண்மீன் மின்னிதழ்

ஒரே காலத்தில் நிகழும் வெவ்வேறு நிகழ்வுகள் நேரத்தால் எப்படி பிரிக்கப்படுகின்றன என்பதே நான் புரிந்துகொள்ள சிரமப்படும் தத்துவச் சிக்கலாக இருக்கிறது. இதை எளிமையாக புரிந்துகொள்ள 'தூரம்' என்கிற ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். இந்த மாயநிகழ்வுதான் மனிதனின் புரியாத இருப்பைக் கட்டுப்படுத்துகின்றன என்பதை நான் புரிந்துகொள்ள விழைகிறேன். இந்த சிக்கலை நாம் எப்படிப் புரிந்து கொள்கிறோம் என்பது ஒவ்வொருவருக்கும் தனித்தனிப் புரிதல்களாக இருக்கிறது என்று அறிவியலாளர்கள் குறிப்பாக உளவியல் ஆய்வாளர்கள் விவாதிக்கிறார்கள்.

நேரத்தில் இயங்கும் மனிதனின் இருப்பு உண்மையாகவும் காலத்தின் வெளியில் (ஸ்பேஸ்) இயங்கும் மனிதனின் இருப்பு அபத்தமாகவும் இருக்கிறது என்கிற விவாதத்தை தத்துவவாதிகள் தொடர்ந்து விவாதிக்கிறார்கள். சரிதவறு என்பதைத் தாண்டி எனக்கு இவ்வகை விவாதங்கள் மிகுந்த விருப்பத்தைத் தருகிறது. இலக்கியச் செயல்பாடுகளில் இந்தத் தத்துவ ஊடுபாடுகள் ஒருவகை கண்ணுக்குத்தெரியாத கண்ணி. நான் அதில் மாட்டிக் கொண்டாலும் வெளியேற விருப்பமில்லாமல் இருக்கிறேன். இந்தக் கண்ணியில் நான் இருக்கிறேன் என்பதை சொல்ல முயலுபவைதான் எனது புனைவுகள். நான் எழுதும் கதைகளில் இவ்வகைக் கண்ணிகள் பாவிக்கிடக்கின்றன என்பதை சொல்ல நினைத்ததால்தான் இந்தத் தலைப்பை எனது சிறுகதைத் தொகுப்பிற்கு வைத்திருக்கிறேன்.

**இந்தச் சிறுகதைத் தொகுப்பு உருவாகத் தொடங்கிய தருணம் எது? 'மாயக்கண்ணி' தொகுப்பாக வேண்டும் என்ற எண்ணம் எப்போது ஏற்பட்டது?**

இரண்டாயிரத்து பத்தொன்போதில் நான் சென்னையில் பணி புரிந்து கொண்டிருந்தேன். நண்பர்கள் வசுமித்ர, வெயில் மற்றும் அழகு சுப்பையா ஆகியோர் எனக்கு மிகுந்த உத்வேகம் அளித்த நிகழ்வு இது. எனக்கு எனது சிறுகதைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிடும் சிந்தனைகூட இல்லை. நான் கடைசியாக எழுதிய சிறுகதை அனேகமாக இரண்டாயிரத்து பத்து என்று நினைக்கிறேன். பிறகு ஏறக்குறைய எட்டாண்டுகள் நான் எந்த சிறுகதையும் எழுதவில்லை. இன்றுவரையும் கூட. இந்தப் புத்தகச் செயல்பாடு நண்பர்களினால் மட்டுமே உண்டானது. மிகவும் உணர்வுப்பூர்வமான நிகழ்வாக அது எனக்கு இருக்கிறது.

ஒருவழியாக இந்தக்கதைகளைத் தொகுத்த பிறகு இந்தப்புத்தக வெளியீடு எனக்கு தனிப்பட்ட வகையில் ஏதோவொரு மனதிருப்தியை அளித்தது. நமக்கிடையான இந்த சிறு உரையாடலில் **புலம்** பதிப்பாளர் லோகநாதனுக்கும் புத்தகத்திற்கு மதிப்புரைகள் எழுதிய நாவலாசிரியர் பிரியா விஜயராகவன் மற்றும் பேராசிரியர் நவீனா அமரனுக்கும் நன்றியைத் தெரிவிப்பது தவிர்க்கமுடியாத ஒன்று.

**எழுத்திற்கு எட்டாண்டு இடைவெளி ஏன்?**

பணி நிமித்தம் என்று சொன்னாலும் உண்மை என்னவென்றால் முகநூல் அறிமுகம்தான். பிளாக் ஸ்பாட்-டும் முகநூலும் வசீகரமாய் என்னுள் நுழைந்தது. நான் சிறுகதைகள் எழுதுவதற்காக எழுதிவைத்திருந்த நிறைய குறிப்புகளைச் சிறுசிறு கவிதைகளாக மாற்றிப் பதிவேற்றத் தொடங்கினேன். அது ஒருவகை போதையாக மாறியது. முதலிலேயே கவிதைகளை எழுதும் ஆசை எனக்குள் இருந்தது. நானும் வசுமித்ர-வும் சேர்ந்து இரண்டாயிரத்துப் பத்து வாக்கில் ‘கள்ளக்காதல்’ என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருந்தோம்.

கவிதை எனும் செயல்பாடு எனக்குள் கடும் சிக்கலாகிக் கிடந்த காலம் அது. அந்த நேரத்தில் இந்த முகநூல் ஊடகத்தில் நான் வாசித்த அனேகப் பதிவுகளும் கவிதைகளும் எனது தீவிர வாசிப்பினை முடக்கத் தொடங்கியிருந்ததை இப்போது உணர்கிறேன். இந்த எளிமையான கவிதை செயல்பாடு எனது சிறுகதை எழுதும் திறனை மிகவும் பாதித்தது என்றே சொல்லுவேன். உண்மையில் இந்த சோம்பேறித்தனம் வலுவாக என்னை உட்கொண்டது. எதையுமே கவிதைகளாக எழுதிவிடலாம் என்று எனது மனம் குருட்டுத் தனமாக நம்பியிருந்தது என்பதை நான் புரிந்துகொள்ள பத்து வருடங்கள் ஆகியிருந்தன.

கவிதை எழுதுவது என்பது எளிமையானது என்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். இன்றும் நான் கவிதைகள் தான் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஆனால் கவிதைகள் குறித்த புரிதல் மிக ஆழமான வடுக்களாக மாறத் தொடங்கிவிட்டன என்பேன். பிறகு ஒரு தருணத்தில் அனேகமாக இரண்டாயிரத்து இருபத்து இரண்டில் நாவல் ஒன்று எழுதவேண்டும் என்று முடிவு செய்தேன். அந்த முயற்சி இன்று வரை தொடர்கிறது. சொல்லப்போனால் சிறுகதைகள் எழுதி எட்டாண்டுகள் இல்லை கிட்டத்தட்ட பதினாறு வருடங்கள் ஆகிவிட்டன.

**கவிதைகள் குறித்து பின்னர் விவாதிக்கலாம். முன்னதாக உங்கள் கதைகளில் சாதாரணமாகத் தோன்றும் மனிதர்களுக்குள் இருக்கும் அசாதாரணமான மன உலகத்தை பதிவு செய்யும் முயற்சி இருப்பதாகத் தோன்றுகிறது. இது திட்டமிட்ட அணுகுமுறையா?**

திட்டமிட்ட அணுகுமுறையா என்றால் ஓரளவு உண்மைதான். ஏனென்றால் என்னைப் பொறுத்த வரை எளிய அல்லது சாதாரண மனிதன் என்று ஒருவரும் இல்லை. சூழலுக்குத் தக்கவே மனிதரின் இருப்பு. நாம் சூழல் குறித்து பேசப்பேச எளிய மனிதர்களின் செயல்பாடுகள் அசாதாரணமாக மாறி விடுகிறதை புரிந்துகொள்கிறோம். எனக்கு இந்த பூமியில் இருக்கும் ஒவ்வொரு உயிரும் அதனதன் நுண்ணறிவைப் பெற்றிருக்கிறது என்கிற அறிவியல் உண்மை பிரமாண்டமாகப் படுகிறது.

பொதுவாக பார்வைக்கு வெளிப்படையாகத் தெரியாத இந்த நுண்ணறிவு ஒவ்வொரு மனிதனின் மன உலகத்திலும் – முக்கியமாக பெண்களின் – தன்னியல்பாக நிகழ்த்துகலையாக செயல்படுவதை நான் ஒரு எழுத்தாளனாக உணர்கிறேன். இந்த பிரமாண்டமான நிகழ்வுப் போக்கின் தரவுகளை மொழிகளின் மூலம் வெளிப்படுத்துவது ஒரு திட்டமிட்ட செயல்பாடுதான். ஒரு நீண்ட பயிற்சியின் மூலம் இந்த எழுத்தாக்கம் சிறிதுசிறிதாக தன்னை கூர்மைப்படுத்திக் கொள்கிறது என்பதே எனது புரிதல்.

**உங்கள் எழுத்துமொழி தனித்துவமாக இருக்கிறது. கதைகளின் மொழிநடை குறித்து நீங்கள் அதிகம் சிந்திப்பீர்களா? கதை சொல்லும்மொழி இயல்பாக வருகிறதா, அல்லது (அதற்காக மெனக்கெடுகிறீர்களா) ஒவ்வொரு சொல்லையும் செதுக்குகிறீர்களா?**

நன்றி. உண்மையில் எனக்கு கதை சொல்லும் மொழி இயல்பாக வரவில்லை. பொதுவாக நான் நிறைய படிக்கவில்லை என்றாலும் தேர்ந்தெடுத்துப் படிப்பதில் கவனம் செலுத்துகிறேன். உண்மையில் என்னுடைய மொழிநடையை நான் எழுத்தாளர் கோபிகிருஷ்ணனின் உத்தியின் மூலம் உருவாக்கிக் கொண்டேன். கூடவே ஆரம்பத்தில் ஜெர்மன் மற்றும் ரஷ்ய இலக்கியங்களில் இருந்து ஒருசில விசயங்களை என்னுள் உள்வாங்கியிருக்கிறேன் என்பதை உணர்கிறேன்.

பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எழுதுவதில் ஒரு

குறிப்பிட்ட இலக்கணத்தை நானே எனக்குள் உருவாக்கிக் கொண்டேன். அது என்னவென்று துல்லியமாக சொல்ல ஆங்கில வாக்கியம் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அது 'Not a word more; not a word less' என்பது சரியாக இருக்கும். பிறகு மொழிநடை குறித்து தனிப்பட்ட சிந்தனையை தவிர்த்துவிட்டேன். பொதுவாக என் எழுத்தின் மொழி இயல்பாக இருப்பதைப் பழகிக் கொண்டேன். பிறகு நான் மெனக்கெடுவது இல்லாமல் போய்விட்டது. எழுதுவதன் இயல்பு எளிமையாகப் பழக்கமாகி விட்டது. எனது எழுத்துமொழி தனித்துவமாக இருக்கிறது என்று சொல்கிறீர் அல்லவா... அதற்கு மிக்க நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒரு நல்லசிறுகதைக்கு மொழி முக்கியமா, கதை முக்கியமா, அல்லது சொல்லப்படாத இடைவெளிகள்தான் முக்கியமா?**

என்னைப் பொறுத்தவரையில் ஒரு சிறுகதைக்கு இந்த மூன்றுமே நிச்சயமாகத் தேவை என்பதில் மாற்றுக் கருத்துகள் எதுவுமில்லை. முக்கியமாக சிறுகதைகளில் புலத்தில் சொல்லப்படாத இடைவெளியில் அதன் மூலக்கதை பாவியிருக்கிறது என்பது எனது புரிதல். போலவே ஒரு புனைவின் மொழி என்பது பல்வேறு புரிதல் வகைமைகளை உருவாக்குகிறது எனலாம்.

நீங்கள் குறிப்பிட்ட மூன்று நிலைகளும் சிறுகதையில் தனித்தனியாகவும் அதேசமயம் ஒன்றுடன் ஒன்று இணைந்தும் செயல்படுகிறது. ஒரு சிறுகதையில் மூன்றையும் தனித்தனியாக புரிந்து கொள்வது சரியான தன்மையை உண்டாக்குவது இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். எனது சிறுகதைகளிலும் கவிதைகளிலும் வாசகர்களுக்கு இந்த மூன்றையும் (மொழி, கதை, இடைவெளி) நேரடியாக புரிந்துகொள்ள ஒருவித உத்தியை முடிந்தவரை உபயோகிக்கிறேன்.






**'அலறல்' என்ற நாவலுக்கான கரு உங்களுக்குள் எப்போது, எப்படித் தோன்றியது? 'அலறல்' என்ற தலைப்பே வாசகருக்குள் ஒரு பதற்றத்தையும் கேள்வியையும் உருவாக்குகிறது. இந்தத் தலைப்பைத் தேர்ந்தெடுத்ததின் பின்னணி என்ன?**

உண்மையில் 'அலறல்' என்ற எனது புனைவுக் கதையை நாவல் என்று சொல்ல முடியாது என்பேன். எனக்கு அது நெடுங்கதை மட்டுமே. எனது பணி நிமித்தமான சூழலில் பலவகைச் செயல்பாடுகளை நேரடியாக அனுபவித்திருக்கிறேன். இது அப்படியான ஒரு நிகழ்வை ஒரு பெண் கதாப்பாத்திரத்தில் நுழைத்து கற்பனையில் எழுதிய கதையாகும். நான் இப்படியான நிகழ்வின் பதற்றம் ஒன்றை முழுமையாக அனுபவித்திருக்கிறேன். அதன் சிக்கலை முடிந்தளவிற்கு ஒரு எளிமையான சரடாகத் திரித்து எழுத முயன்றிருக்கிறேன்.

இந்தக் கதையயை எழுதுவதற்கான ஆழமான மற்றும் நீண்ட ஆய்வுகளை செய்யவில்லை. ஒரு குறிப்பிட்ட உணர்வுச் சிக்கல் நிலையை விவாதிக்க வேண்டிய வகையிலான புனைவாக மட்டுமே எழுதியிருக்கிறேன். என்றாலும் உளவியல் ரீதியான சிக்கலான உண்மை ஒன்றை விவாதித்திருக்கிறேன் என்று மட்டும் உறுதி சொல்லமுடியும். இங்கு இந்த புத்தகத்தை பதிப்பித்த 'எதிர்' பதிப்பகத்திற்கும் எழுத்தாளர் கார்த்திகைப்பாண்டியனுக்கும் இந்த புத்தகத்திற்கு மதிப்புரைக் குறிப்பு எழுதித் தந்த உங்களுக்கும் (சித்ரா சிவன்) எனது நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

இருக்க, என்னைப் பொறுத்தவரை அலறல் என்பது ஒரு மனிதரின் – குறிப்பாக ஒரு பெண்ணின் – வாழ்க்கைச்சூழலில் உண்டாகியிருந்த கடுமையான மனஅழுத்தத்தினால் மனதளவில் கதறியலறும் செயல்பாடு ஆகும். இது, ஒரு பெண்ணுக்கு குடும்பச்சூழல் மற்றும் காவல்பணிச்சூழல் ஆகியவற்றின் மூலமாக தாங்கமுடியாத அக/புற வலி ஏற்பட்டிருந்தது குறித்தும் அந்தப்பெண் இந்த கடுமையான சிக்கலைப் புரிந்து கொண்டு தனது புறச்சூழலில் உண்டான மாற்றங்களை ஏற்றுக் கொண்டு தனது வாழ்க்கையை சரியான வகையில் தகவமைத்துக் கொள்ளும் வலிமையை உருவாக்கிக் கொண்டது குறித்தும் வெளியில் சொல்லமுடியாத அவளின் அலறலைக் குறித்தும் விவரிக்கும் ஒரு கதை ஆகும். இந்தக் கதையில் வரும் பெண்ணின் கடுமையான வலியினை வாசகர்கள் புரிந்து கொள்ள அலறல் என்ற சொல் உதவும் என்பது எனது நம்பிக்கை ஆகும்.



**உங்கள் கதாபாத்திரங்கள் நல்லவர்–கெட்டவர் என்ற எளிய இருமைக்குள் சிக்காமல், பல்வேறு உளவியல் அடுக்குகளுடன் இயங்குகின்றன. இதை உருவாக்குவதில் உங்களுடைய அணுகுமுறை என்ன?**

ஒரு நல்ல கேள்வி இது. 'நல்லவர் - கெட்டவர்' கோட்பாடு என்பது சமூக வளர்ச்சி நிலைப்பாடுகளுக்கான ஒரு வசதியான கருத்தாக்கம் ஆகும். குழந்தை வளர்ப்பு முதல் சட்டம் சார்ந்த விழிப்புணர்வு வரையிலான சமூக ஒழுங்குமுறை உற்பத்தியாக்கத்தின் ஒரு அங்கமாக இந்த இருமை வளை இயங்குகிறதை நாம் பார்க்கிறோம். இல்லையா? சமூகத்தின் வளர்சிதை மாற்றத்தில் தனிமனித ஒழுக்கத்தைக் கறாரான நிபந்தனை விதிகளுடன் இந்த 'நல்லவர் - கெட்டவர்' கோட்பாடு முன்னெடுக்கிறது. மாறாக, உளவியல் சார்ந்த சமூக வளர்ச்சி நிலைப்பாடுகளின் அடிப்படையில் தனிமனிதனைச் சீர்தூக்கிப் பார்த்தால் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல நல்லது கெட்டது என்கிற இயல்பு செயல்படுவது நிதர்சனமாக இருக்கிறது.

ஆக, உளவியல் என்கிற பூதக்கண்ணாடி வழியாகப் பார்த்தால் நல்லவர் – கெட்டவர் என்கிற இருமை எதுவும் இல்லாமல் போய்விடுவதை உணர்கிறேன். இந்த நிலைப்பாட்டை உங்கள் கேள்வியில் உள்ள வாக்கியமே எளிமையாகச் சொல்லிவிட்டது. கதைகளில் இதை உருவாக்குவது - கதாப்பாத்திரங்களின் இயக்கம் சார்ந்த உருவாக்கம் - என்பது இலக்கியத்தின் அடிப்படை செயல்பாடு ஆகும்.

ஒவ்வொரு எழுத்தாளனும் தனது அரசியல் சார்பின் அடிப்படையில் இந்த அணுகுமுறையை உபயோகிப்பதைப் பார்க்கலாம். இதனடிப்படையில் எனது அணுகுமுறை என்பது பொருளியல் சார்ந்த உளவியல் அணுகுமுறை என்று உறுதியாகச் சொல்வேன். எளிமையாக சொல்வதானால், புனைவுகளில் யதார்த்த வகைமையில் அழகியலை இணைத்து எழுதும் யுக்தியை நான் உபயோகிக்கிறேன்.

**உங்களின் புனைவுகளை வாசிக்கும்போது சில இடங்களில் வெளிப்படையாகச் சொல்லப்படாத விசயங்களே அதிகமாகப் பேசுவதாகத் தோன்றுகிறது. 'சொல்லாமல் விடுதல்' என்ற பாணியை உங்கள் புனைவுகளில் எதற்காக உபயோகிக்கிறீர்கள்?**

ஒரு புனைவில் பொதுவாக அனைத்து உணர்வுகளையும் எழுதிவிடுவது போலவே உணர்கிறேன். அதை எழுதி முடித்த பிறகு குறைந்தது ஒருமுறையாவது திருத்துகிறேன். அப்படி திருத்தும் போது சில விசயங்களை சொல்வதும் சொல்லாததும் தன்னிச்சையான இயல்பாகவே இருக்கிறது. நீங்கள் சொல்வது போல பல விசயங்களை என்னை அறியாமலேயே விட்டுவிடுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் இந்த விடுபடுதல் என்பது ஒரு 'பாணி' இல்லை என்றுதான் சொல்வேன். அது ஒரு இயல்பு. அவ்வளவே. நீங்கள் முன்னமே கேட்டது போல, புனைவில் மொழியும் கதையும் முன்னிருப்பது முக்கியமானதுதான். போலவே வெளிப்படையாகச் சொல்லாததும் ஒரு அழகியல் விசயம்தான் என்பது எனது புரிதலாக இருக்கிறது.

**சரி இப்போது கவிதைக்கு வருவோம். கவிதையின் வலிமைஅதன் மொழி, வடிவம், கற்பனை ஆகியவற்றில் இருக்கிறதா? அல்லது அதன் பின்னால் இருக்கும் வாழ்ந்த அனுபவத்தில்தான் இருக்கிறதா?**

இது ஒரு அடிப்படையான மற்றும் எளிமையான கேள்வி. கவிதை என்றால் என்ன என்கிற கேள்வியின் சற்று விரிவாக்கப்பட்ட வகை எனலாம். ஆனாலும் ஒவ்வொரு முறையும் இந்த கேள்வி நிச்சயமாகக் கேட்கப்படவேண்டும். அனைத்து கவிஞர்களும் ஒருமுறையேனும் இந்தக் கேள்விக்கு பதில் சொல்லவேண்டும் என்பது எனது விருப்பம். என் பங்கிற்கு நானும் சொல்கிறேன். கவிதையின் வலிமை என்பது மொழி, வடிவம் மற்றும் கற்பனை ஆகிய மூன்றிலும் இருக்கிறது. 'வாழ்ந்த அனுபவம்' என்பதில் மட்டும் நான் சற்று குழப்பமடைகிறேன்.

ஒரு கவிதை எனது சொந்த அனுபவத்தில் இருந்து வரலாம். ஆனால் பார்த்த அனுபவம், கேட்ட அனுபவம், படித்த அனுபவம் எல்லாமும் கவிதையாக்க முடியும். இல்லையா?

இப்படிப்பட்ட எந்தவொரு அனுபவமும்தான் கவிதையின் அடிப்படை. ஒரு கவிஞர் ஏதொவொரு வகையில் உணர்ந்த வலி, மகிழ்ச்சி, இழப்பு அல்லது தரிசனமே கவிதை பிறப்பதற்கான முதல் தூண்டுதல் என்பது அறிஞர்களின் விவாதம். அனுபவம் இல்லாத வெறும் சொற்கள், எவ்வளவுதான் நயம்பட எழுதப்பட்டிருந்தாலும், வாசகனின் மனதை ஆழமாகத் தொட முடியாது. அது ஒரு உயிரற்ற மெழுகுப் பொம்மையைப் போலத்தான் இருக்கும் என்றும் சொல்கிறார்கள்.

எனக்கும் இதில் உடன்பாடு இருக்கிறது. ஆனால் அனுபவம் மட்டுமே ஒரு கவிதையைச் சிறந்ததாக்கி விடாது. அந்த அனுபவத்தை எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதில்தான் கவிதையின் கலைத்தன்மை இருக்கிறது என்பதும் அடிப்படை. எனவே அனுபவமும் மொழிவடிவமும் இணைந்து உருவாகும் கவிதை என்பது சரியான தொடக்கம் மட்டுமாகும். அனுபவம் சார்ந்த அதன் ஆழமான பரிமாணம் கவிஞர்களில் பயிற்சியில் இருக்கிறது என்பேன். ஒரு மனிதன் தனக்குக் கிடைத்த அனுபவத்தை பல்வேறு பார்வைக்கோணத்தில் பரிசீலிக்க வேண்டியதிருக்கிறது. நாம் பார்க்கும் பார்வை வேறு பார்வைக்கோணம் (perceptions) வேறு அல்லவா?





**கவிதை குறித்த உங்கள் கட்டுரையின் தொடக்கத்திலேயே செயற்கைநுண்ணறிவு யுகத்தில் கவிதையின் சமூக மற்றும் உளவியல் பாத்திரத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது என்கிறீர்கள். இந்த மறுபரிசீலனை ஏன் இவ்வளவு அவசியமானதாகிறது?**

கடந்த வருடம் வேரல் பதிப்பகம் கன்னியாகுமரியில் நடத்திய கவிதை பயிலரங்கத்தில் வாசிக்க முயன்ற கட்டுரை இது. என்னால் முழுமையாக வாசிக்க இயலாமல் போய்விட்டது. நீங்கள் கேட்ட இந்தக் கேள்வி ஒரு பெரிய ஆய்வுக்குரிய விவாதம். எளிமையாக சொல்வது சற்று கடினம். நீங்கள் குறிப்பிட்ட எனது கட்டுரையை எழுத நான் குறிப்புகளுக்காக படித்த ஒரு புத்தககத்தின் சாரத்தை சொல்லுகிறேன். இந்த சாரம் நீங்கள் கேட்ட கேள்விக்கு என்னால் சொல்லப்படும் ஒரு சிறிய பதில் எனலாம்.

நீனா பெகுஷ் (Nina Beguš) எழுதிய 'ஆர்டிஃபிஷியல் ஹுமேனிட்டீஸ்' (Artificial Humanities) என்ற நூல், செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மொழியின் தன்மை, படைப்பாற்றல் மற்றும் மனித உணர்வுகளின் எதிர்காலம் குறித்து மிக ஆழமாக விவாதிக்கிறது. மனிதநேயத் துறைகளும் (Humanities) இலக்கியப் பின்புலமும் எஐ (AI) தொழில்நுட்பத்தின் வளர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கும், அதன் போக்கைக் வழிகாட்டுவதற்கும் எந்த அளவிற்கு இன்றியமையாதவை என்பதை இந்நூல் முக்கியமாக எடுத்துரைக்கிறது. இயந்திரங்கள் மனிதனைப் போலவே இலக்கணச் சுத்தமான, அழகான உரைகளையும் கவிதைகளையும் உருவாக்கும் திறனைப் பெற்றுவிட்ட போதிலும், அந்தச் சொற்களுக்குப் பின்னால் இருக்கும் மனிதனின் 'வாழ்ந்த அனுபவம்', சமூகச் சூழல் மற்றும் அசல் உணர்வுநிலை ஆகியவற்றை எஐ-யால் ஒருபோதும் முழுமையாகப் பிரதிபலிக்க முடியாது என்பதை ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

தொழில்நுட்ப வல்லுநர்கள் மட்டுமே எஐ-யின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்குப் பதிலாக, தத்துவவாதிகள், கவிஞர்கள் மற்றும் சமூகவியலாளர்களின் பார்வைகள் ஏன் தேவைப்படுகின்றன என்பதை விவரிக்கும் இந்நூல், எஐ-யால் உருவாக்கப்பட்ட படைப்புகள் மனிதனின் அக உலகையும் தத்துவார்த்தத் தேடல்களையும் எவ்வாறு சவாலுக்கு உட்படுத்துகின்றன என்பதையும், இத்தகைய சூழலில் மனிதனின் தனித்துவமான கற்பனைத்திறனை எப்படிக் காப்பாற்றுவது என்பதையும் தெளிவாகப் பகுப்பாய்வு செய்கிறது. இதனடிப்படையில் நீங்கள் கேட்ட இந்தக் கேள்வியின் ஆழம் மிகப் பெரியது இல்லையா...?

இது தொடர்பாகத் தனியாக பல்வேறு ஆய்வுகளை உருவாக்கி ஆய்வரங்கங்களை ஒருங்கிணைத்து நடத்தினால் நல்லது. தமிழ்நாட்டின் கவிஞர் குழாம் இதை முன்னெடுக்க வேண்டும் என்பது எனது விருப்பம். உலகமெங்கும் பெரும் பல்கலைக் கழகங்களில் தொழில்நுட்ப அறிஞர்களும் தத்துவ / மொழி / இலக்கிய ஆசிரியர்களும் இணைந்து நிறைய ஆய்வுகளை நடத்திக் கொண்டிருப்பதை பார்க்கிறேன். நமது தமிழகப் பல்கலைகழகங்களும் தமிழ் எழுத்தாளர்களும் இதுபோன்ற ஆய்வுகளைத் தீவிரமாக நடத்துவது அவசியமான காலமாக இருக்கிறது என்பதை இங்கு நான் பதிவு செய்கிறேன்.

**ஒரு இயந்திரம் தொழில்நுட்ப ரீதியாகக் குறைபாடற்ற கவிதையை நொடிகளில் உருவாக்க முடிந்தால், கவிஞரின் பங்கு என்ன?**

இயந்திர கதியில் உருவாகிய குறைபாடற்ற கவிதையில் அனுபவம் என்பது கிடையாது. கவிஞர்களின் அனுபவம் ஒருபோதும் இயந்திரத்திற்குக் கிடையாது. இணையப் புலத்தில் கிடைக்கும் கணக்கிலடங்காத தரவுகளின் இருப்பு எழுத்தாளருக்கு கிடையாது. இருந்தாலும் எதிர்காலத்தை எளிதில் யூகித்து விடமுடியாது. மனித அனுபவம் என்பது அனுபவத் தரவுகளின் நிகழ்தகவு என்று வைத்துக் கொண்டால் இயந்திரங்களின் தொகுக்கப்பட்ட தரவுகளின் நிகழ்தகவை மனித மூளை ஒருபோது நெருங்க முடியாது. என்றாலும் செயற்கை நுண்ணறிவை உருவாக்கியது இயற்கை நுண்ணறிவுதான்.

எனவே, எனது புரிதல் செயற்கை நுண்ணறிவைச் சரியான புரிதலோடு அணுகினால் எழுத்தாளர்களின் அனுபவமும் இயந்திரத்தின் தொழில் நுட்பமும் இணைந்து சிறப்பான கலையை உருவாக்க முடியும் என்பதுதான். ஆனாலும், இப்போதைய சிக்கல் என்பது கலைப்படைப்பின் நம்பகத்தன்மை (Authenticity) குறித்த புரிதல் என்பேன். இதுவும் மிக ஆழமான விவாதப்பொருள். இல்லையா? மேற்கு உலகமும் ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகளும் கொண்டிருக்கும் அறிவுலகம் எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது. தமிழ்ச்சமூகம் குறைந்தது ஐம்பது வருடம் பின்னால் கிடக்கிறது. வருத்தம்தான்.

**இன்றைய கவிஞருக்கு மார்க்சியச் சிந்தனை ஏன் இன்னும் தேவைப்படுகிறது?**

எளிமையாக சொல்கிறேன். ஒட்டுமொத்த உலகமும் நுகர்வுப் பண்பாட்டில் திளைத்துக் கொண்டிருக்கிறது. பூமியின் இயற்கைவளம் ஒளியின் வேகத்தில் அழிந்து கொண்டிருக்கிறது. வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தின் ஒட்டுமொத்த தாரக மந்திரம் என்பது 'பொறுப்பற்றத் தன்மை' என்பதாக இருக்கிறது. இந்த அழிவுச்சக்திக்கு மருந்தாக நம்மிடம் மார்ஸியம் தவிர வேறெந்த மாற்றும் இல்லை. கவிதைக்கும் இது பொருந்தும்.

**கருத்தியல் ரீதியாகச் சரியான கவிதை என்ற ஒன்று இருக்க முடியுமா? அல்லது "சரியான கவிதை" என்ற கருத்தேகவிதையின் இயல்புக்கு எதிரானதா?**

கவிதைகள் குறித்த அடிப்படைக் கேள்விகளில் இதுவும் ஒன்றுதான். கருத்தியல் என்ற பதத்திற்கு என்ன ஒரு சரியான வரைமுறை இருக்கிறது என்பதில் இந்த விவாதம் தொடங்கலாம். கருத்தியல் என்பது ஒரு தனிநபர், சமூகம் அல்லது அமைப்பு பின்பற்றும் கருத்துக்கள், நம்பிக்கைகள்,

கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பாக இருப்பதைப் பார்க்கிறேன். எளிமையாகக் கூறினால், மனிதர்கள் உலகத்தைப் புரிந்து கொள்ளும் விதம், அவர்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் சமூக அமைப்பை வழிநடத்தும் சிந்தனைச் சட்டகமே கருத்தியல் என்ற சொல்லுக்கு பாந்தமான விளக்கமாக் கொள்ளலாம்.

கருத்தியல், வெறும் கற்பனைச் சிந்தனையாக மட்டும் இல்லாமல், ஒரு சமூகம் எவ்வாறு இயங்க வேண்டும், மக்களிடையே அதிகாரமும் வளங்களும் எவ்வாறு பகிரப்பட வேண்டுமென்பதையும், சரி / தவறு என்பதைத் தீர்மானிக்கும் வழிகாட்டியாகச் செயல்படவேண்டும் என்பதையும் சமூக அறிவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். இதனடிப்படையில் சரியான கவிதை என்பது அதன் நோக்கத்தில் இருப்பதை பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் சரியான கவிதை என்ற கருத்து கவிதையின் இயல்பிற்கு எதிரானது இல்லை.

**ஒரு கவிதையின் அரசியல் நோக்கம் வலுவாக இருந்தாலும், அதன் கலைநயம் பலவீனமாக இருந்தால் அதை சிறந்த கவிதை என்று ஏற்றுக்கொள்ள முடியுமா?**

கலைநயம் என்பதை அழகியல் என்று புரிந்து கொள்கிறேன். அரசியல் நோக்கம் வலுவாக இருந்து அழகியல் இல்லை என்றால் அதைக் கவிதையென்று சொல்ல முடியாது. அழகியல் இல்லாத காத்திரம் மிக்க கருத்துமொழி வெறும் அறிக்கையாக நின்றுவிடும் என்பது எனது புரிதல். பொதுவாக அழகியல் இல்லாத எந்தவொரு கருத்தும் கவிதைக்குள் அடங்காது என்பதும் எனது வாதமே.

**சங்க இலக்கியம் முதல் நவீனக் கவிதை வரை மரபுக்கும் புதுமைக்கும் இடையிலான மோதல் தொடர்ந்து வருகிறது. AI காலத்தில் இந்த மோதல் புதிய வடிவம் பெறுகிறதா?**

மிகவும் முக்கியமான கேள்வி. இதற்கு ஒரு தீர்மானமான பதிலை சொல்லமுடியாத குறைந்த அறிவைக் கொண்டிருக்கிறேன். நிறைய படிக்கவேண்டும். இருந்தாலும் எனது புரிதலை சுருக்கமாக சொல்ல முயல்கிறேன். தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் முதல் நவீன காலம் வரை மரபுக்கும் புதுமைக்கும் இடையிலான உரையாடலும் மோதலும் தொடர்ச்சியாக நடந்து வரும் ஒன்றுதான். இல்லையா?

சங்க காலத்தின் இறுக்கமான அகப்பொருள்-புறப்பொருள் திணை இலக்கணங்கள், பிற்காலத்தில் பக்தி இயக்கப் பாடல்களின் எளிய வெளிப்பாட்டு முறையால் நெகிழ்வடைந்தன என்பதையும் பாரதியாரின் வருகை, மரபுக்கவிதையின் யாப்புச் சட்டகங்களை உடைக்காமல் எளிய மக்களுக்கான பாடுபொருளை அறிமுகப்படுத்தியது என்பதையும். அதைத் தொடர்ந்து புதுக்கவிதை இயக்கம் யாப்பிலக்கணங்களையே துறந்து, கட்டற்ற கருத்து வெளிப்பாட்டிற்கு வழிவகுத்தது என்பதையும் வல்லிக்கண்ணன், தி.சு.நடராஜன் போன்றவர்களிடமிருந்து தெரிந்துகொண்டேன்.

இவ்வாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் புதுமை என்பது வடிவத்திலோ அல்லது பாடுபொருளிலோ உருவெடுத்து மரபோடு மோதி, காலப்போக்கில் தானே ஒரு மரபாக மாறிக் கொண்டது எனலாம். இதனடிப்படையில், செயற்கை நுண்ணறிவு காலத்தில் இந்த மோதல் முற்றிலும் ஒரு புதிய வடிவத்தை எடுக்கிறது என்பதை ஒரு பெரிய விவாதக் களமாக நான் புரிந்து கொள்கிறேன். மரபு-புதுமை மோதல் என்பது மனிதர்களின் இரு வேறு சிந்தனை முறைகளுக்கு இடையிலானதாக இருந்தது. ஆனால் AI காலத்தில், இது மனித படைப்பாற்றல் மற்றும் எந்திரத்தின் வழிமுறை (Human Creativity vs Algorithmic Generation) என்ற புதிய தளத்திற்குச் சென்றுள்ளது.

விண்மீன் மின்னிதழ்

கடந்த காலத்தில் புதுமை என்பது மரபின் எல்லைகளை விரிவுபடுத்தியது. ஆனால் AI காலத்தில், கவிதை என்பது சொற்களின் நேர்த்தியான சேர்க்கையா அல்லது உயிர்ப்புள்ள மனித அனுபவத்தின் வெளிப்பாடா? என்ற ஆழமான கேள்வியை எழுப்புவதன் மூலம் மரபு-புதுமை மோதலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது. இது குறித்த விலாவாரியான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். எழுத்தாளர்களின் தேவையும் இதுவாக இருக்க வேண்டும்.

**“கவிதை மரபுகள் ஆறுகளைப் போன்றவை” என்ற உங்கள் உருவகம் அழகானது. மரபைக் காப்பதற்கும் அதை உடைப்பதற்கும் இடையில் கவிஞனின் பொறுப்பு என்ன?**

பேராசிரியர் தி.சு.நடராஜன், எழுத்தாளர் க.ந.சு. போன்றவர்களின் திறனாய்வுகளின் அடிப்படையில் நான் கவிதை மரபுகள் ஆறுகள் போன்றவை என்ற புரிதலுக்கு வந்திருக்கிறேன். சுருக்கமாக நான் இப்படி சொல்லுகிறேன்: கவிதை மரபு ஒரு குறிப்பிட்ட காலத்தின் பண்பாடு, மொழி மற்றும் சமூகத் தேவைகளில் இருந்தே பிறக்கிறது என்பதை அனைவரும் உணர்ந்திருக்கிறோம்.

ஆரம்பக்காலத்தில் அது குறுகிய இலக்கண விதிகளுடனும், வரையறுக்கப்பட்ட வடிவத்துடனும் மட்டுமே இயங்கியதையும் நாம் அறிவோம்.

காலப்போக்கில் புதிய சிந்தனைகள், பிற மொழித் தொடர்புகள், சமூக மாற்றங்கள் மற்றும் புதிய தலைமுறைக் கவிஞர்களின் கற்பனைகளைத் தன்னுள் உட்செறித்துக் கொண்டு தன்னைத் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது. கவிதை மரபும் பழமையை முற்றிலும் கைவிடாமல், புதுமையான வடிவங்களையும் ஏற்றுக்கொண்டு தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கிறது. கவிதை மரபு எனும் ஆறு கடந்த காலத்தின் உறைந்துபோன பெரிய பனிப்பாறை இல்லை. அது நிகழ்காலத்தில் பாய்ந்து, எதிர்காலத்தை நோக்கி வளமையுடன் செல்லும் பேறாறு ஆகும் என்பது எனது புரிதல். இதிலிருந்து மரபைக் காப்பதற்கும் அதை உடைப்பதற்கும் இடையில் கவிஞனின் பொறுப்பு என்ன? என்ற கேள்விக்கு எனது பதில்; ஒரு கவிஞர் எடுக்கும் முடிவு எந்த வகையாக இருந்தாலும் அது மனிதகுல சமப்பான்மையை (human equality) உருவாக்க எடுக்கப்படும் முயற்சியாக இருக்க வேண்டும் என்பதே.

**நவீன தமிழ் இலக்கியம் மற்றும் மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் உங்களைப் பெரிதும் ஈர்த்த படைப்புகள் எவை? அவற்றை உருவாக்கிய படைப்பாளர்கள் குறித்து உங்கள் பார்வையையும், அந்தப் படைப்புகள் உங்கள் வாசிப்பு அனுபவத்தில் ஏற்படுத்திய தாக்கத்தையும் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

முன்னமே சொன்னது போல நான் நிறைய வாசிப்பவனல்ல. ஆனால் மிகவும் தேர்ந்தெடுத்து வாசிப்பவன். எல்லோரையும் போல பள்ளிக்காலங்களில் அம்புலிமாமா, காமிக்ஸ் புத்தகங்கள் போன்றவற்றில் தொடங்கியவன்தான். இரும்புக்கை மாயாவி இன்றுவரை என்னை புல்லரிக்கச் செய்யும் பாத்திரம். பின்னர் அப்படியே தமிழ்வாணன், ராஜேஷ் குமார், பட்டுக்கோட்டை பிரபாகரன் போன்றவர்களின் துப்பறியும் கதைகளில் நுழைந்து பின்னர் ஆயிரத்து தொள்ளாயிரத்து என்பத்தாறு என்று ஞாபகம், பட்டுக்கோட்டை பிரபாகரனின் 'நீ மட்டும் நிழலோடு' என்ற நாவலில் எனது சமூக புனைவு வாசிப்பு ஆரம்பமானது.

பிறகு வாசந்தி, பாலகுமாரன், சுஜாதா, ஜானகிராமன், சாரு நிவேதிதா, ஜெயமோகன், போன்றோர் பக்கம் இருந்த ஈர்ப்பு 'காதுகள்' என்ற எம்.வி.வெங்கட்ராம் நாவலைப் படித்தபின் மொத்தமாக என்னைப் புதிதாக மாற்றியதை நினைவு கூர்கிறேன்.

அதன்பிறகு சிங்காரம், ஜி.நாகராஜன், சு.ரா., கி.ரா., ஆதவன், மாதவன், யூமா.வாசுகி என்று ஒரு குறுகியப் பட்டியல் இருந்தது. பிறகு ரஷ்ய இலக்கியமும் ஜெர்மானிய இலக்கியமும் முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டது. பிறகொரு கட்டத்தில் நான் கோபிகிருஷ்ணனை மட்டுமே வரிந்துகொண்டேன். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக புனைவிலக்கியத்திலிருந்து ஏறக்குறைய வெளியேறிவிட்டேன். தத்துவமும் வரலாறும் என்னை ஈர்த்தன. அந்த ஈர்ப்பு இன்றுவரை தொடர்கிறது.

என்னை ஈர்த்த நிறைய கவிதைகளும் சிறுகதைகளும் இருக்கின்றன. முக்கியமாக மொழிபெயர்ப்பு கவிதைகள் எனது உளவியல் சார்ந்த சிந்தனைக்கும் வாசிப்பிற்கும் மிகவும் உதவியாக இன்றளவும் இருக்கிறது. உண்மையில் படைப்பாளுமைகள் குறித்த தனிப்பட்ட பார்வைகள் என்று எனக்கு ஏறக்குறைய இல்லை என்பேன். ஆனால் மனதிற்கு நெருக்கமான எழுத்தாளர்கள் என்றதும் எனக்கு நினைவில் இருப்பவர்களாக கோபிகிருஷ்ணன் தவிர க.நா.சு வையும், சூடாமணியையும் அம்பையையும் சொல்வேன். போலவே, இலக்கியத்திற்கு எழுத்தாளர் அருந்ததி ராய் அவர்களையும், தத்துவத்திற்கு காயத்ரி சக்ரவர்த்தி ஸ்பிவாக் அவர்களையும் எனது வழிகாட்டிகளாக உணர்ந்திருக்கிறேன்.

எப்பொழுதும் நான் யாருக்கேனும் ஒரு நாவலை சிபாரிசு செய்வதாய் இருந்தால் அது நவல் எல் சாதாவி (Nawal El Saadawi) -யின் 'சூன்யப் புள்ளியில் பெண்' என்ற புத்தகத்தைச் சொல்வேன். இதுவொரு திட்டமிடப்படாத தற்குறிப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் நிறைய விடுபடல் இருக்கிறது. சந்தர்பம் கிடைத்தால் விரிவாகச் சொல்வேன். எனது வாசிப்பு அனுபவம் எனக்கு ஏற்படுத்திய தாக்கத்தைப் பகிர்ந்துகொள்ள முடியுமா என்று கேட்டால், எனது வாசிப்பு அனுபவம் எனக்குள் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவுகள்தான் எனது எழுத்துக்கள்.

நன்றி.



# சிலேடையில் சிக்கிய சோழம்

## கற்பனை வரலாற்று தொடர்கதை

## பகுதி 3: கங்கா என்னும் மர்மம்

**கங்கா (காங்கேயன் பசுபதி)**

**முன்கதை சுருக்கம்:**

நாகைப் பெருந்துறையில் ஒற்றன் சாத்தன் கொல்லப்பட, அவனது கையிலிருந்த சிலேடை ஓலை சோழரின் கடாரப் படையெடுப்புத் திட்டத்தின் இரகசியக் குறியீடு என்பதை வீரசோழி கண்டறிகிறாள். அச்சுவடியைக் கைப்பற்ற வந்த கடார ஒற்றனின் தாக்குதலை பூவணத்தின் விடுதியில் முறியடிக்கும் வேளையில், அச்சுவடியில் உள்ள ஆழ்கடல் கணிப்பைக் கொண்டு 'கங்கா' எனும் புனைபெயரில் இயங்கும் கவிஞன் வேறு யாருமல்ல, தளபதி வீரமாறனேதான் என்பதை வீரசோழி உணர்கிறாள்.



இனி....

**நி**லவொளி ஊடுருவிய அந்த மங்கலான அறையின் வாசலில், உருவமொன்று இருளைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தது. பளபளத்த நச்சுக்குறுவாளொன்று வீரசோழியின் முதுகைத் துளைக்கக் குறிபார்த்து நீண்டது.

வீரமாறனின் விழிகளில் ஆபத்தின் நிழல் மின்னியது. அவன் இடக்கரத்தால் வீரசோழியின் இடுப்பை வளைத்துத் தன்பக்கம் சுண்டி இழுத்தான். அதே கணத்தில், வலக்கையிலிருந்த வாள் உறையிலிருந்து வெளிப்பட்டு, பாய்ந்து வந்த குறுவாளை ஓங்கித் தட்டியது. 'கணீர்' என்ற ஒலியோடு இரும்பும், இரும்பும் மோதியதில் அனற்பொறிகள் சிறகடித்துச் சிதறின.

வீரமாறனின் பரந்த மார்போடு ஒட்டி நின்றிருந்த வீரசோழியின் நெஞ்சு கணப்பொழுது விதிர்த்தது.

பாய்ந்து வந்தவன் கடாரத்து ஒற்றன் அநங்க தேவன். தன் எதிர்பாராத தாக்குதல் வீணானதை உணர்ந்தவன், இடுப்பிலிருந்த சிறு களிமண் குடுவையைத் தரையில் ஓங்கி அடித்தான். உள்ளே காய்ந்த வேம்பிலைகளும், கடுகு எண்ணெயில் நனைத்த பஞ்சும், கரித்தூளும், சிறிதளவு படிக்காரம், கருஞ்சீரகம் இன்னும் சில பொருட்களும் கலந்திருந்தன. உடைந்த குடுவையின் வாயில் பற்றிய தீப்பொறி, அந்தக் கலவையை அடர்த்தியான வெளிறிய புகையாக்கியது. அறையெங்கும் புகை மண்டலம் படர, இருவரும் கண்களைக் கசக்கிக் கொண்டு இருமினர். வீரமாறன் அந்த ஒற்றனைத் துரத்திப் பிடித்தான். பலகணியை நெருங்கிய அநங்க தேவனின் கால் முள் பதித்த கால்விரல் இரும்புப் பிடியில் சிக்கியது. வீரமாறன் வாளை உயர்த்தினான். ஆனால் அநங்க தேவன் திரும்பி, சிறு ஈட்டியொன்றை வீசினான். அது வீரமாறனின் வாள் முனையைத் தட்டி, அவன் வாள் பலகணிச் சட்டத்தில் ஆழப் பதிந்தது. அதற்குள் அந்த ஒற்றன் பலகணி வழியே பாய்ந்து இருளில் கரைந்துவிட்டான். வீரமாறன் வாளை வலுக்கட்டாயமாக இழுத்தெடுத்தான். முனை சிறிது உடைந்திருந்தது. அந்த வாள் உடைந்த இரும்போசை, அவனுக்கு எச்சரிக்கையாக அமைந்தது. சாதாரணமானதொரு கடார ஒற்றனல்ல இந்த எதிரி என்பதை மாறனின் கூர்ந்த பார்வை துல்லியமாக உணர்ந்துகொண்டது.

புகை மெல்ல விலகியது. வீரசோழியின் கூர்மையான பார்வை வீரமாறனின் மீது நிலைத்து நின்றது. “அந்த ஓலையில் தீட்டப்பட்டிருந்த மையைக் கவனித்தேன், தளபதியாரே! அது நாகை அங்காடியில் சாதாரண மக்கள் வாங்கும் மையல்ல. சோழக் கடற்படையின் உயர்மட்டத் தளபதிகள் மட்டுமே போர்த்திட்டங்களை ரகசியமாக வரையப் பயன்படுத்தும் கடுக்காயும், அரக்கும் கலந்த பிரத்தியேக மை. அதுமட்டுமன்றி, இந்தச் சிலேடையில் ஒளிந்திருக்கும் கடல் வியூகம், கடலையே தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தளபதிக்கே சாத்தியம். சோழப் பேரரசின் பெரும்படையில் கவிதை உள்ளம் கொண்ட மாவீரன் யாராக இருக்க முடியும்?”

பெருமூச்சொன்று வெளியானது வீரமாறனிடமிருந்து. தப்பிப்பதற்கு இனி வழியேதும் இல்லை என்பதை உணர்ந்த அவனது குரலில், ஆழ்கடலின் அமானுஷ்ய அமைதி குடிகொண்டது. “உம் மதிநுட்பம் வென்றது தேவி. ஆம், நான்தான் கங்கா. சோழ நாட்டின் மீது உயிர்நாடி கொண்டவன்.”

வீரசோழி சில நொடிகள் அசையாது நின்றாள். “ஓலை உன்னுடையதல்ல என்று முன்னரே கூறினீரே. அது பொய்யா?”

“ஆம்.” எந்தத் தயக்கமுமின்றி ஒப்புக்கொண்டான் வீரமாறன். “நான் கவிஞன் என்பது தெரிந்தால் என் வாளுக்குச் சபை மரியாதை தராது என்ற அச்சம் இருந்தது. முன்னொருமுறை, நான் இயற்றிய வெண்பா தளை தவறியது. புலவர் சபையின் முன், போரில் வாள் இழந்த வீரனைவிடக் கேவலமாகத் தலைகுனிந்து நின்றேன்.”

வீரசோழி அந்த ஓலையை மீண்டும் விரித்துப் பார்த்தாள். அவளது கண்கள் இரண்டாம் அடியில் நிலைத்தன. “இதிலும் தளை தட்டுகிறது தளபதியாரே. ‘சேர்ந்தவங்கம்’ என்று நீர் பிரித்த இடத்தில் மாமுன் நிரை வந்துவிட்டது. ‘சேர்ந்த வங்கம்’ என்று பிரிக்காமல், ‘சேர்ந்தவங் கந்திரும்ப’ என்று அமைத்திருந்தால், காய்முன் நேர் வந்து தளை தப்பாதிருந்திருக்கும்.” மெல்லச் சிரித்தாள் அவள். அந்தச் சிரிப்பில் ஏளனம் இல்லை, கரிசனமே இருந்தது. “ஓர் இலக்கணப் பிழை வெறும் எழுத்துப் பிழையல்ல தளபதியாரே. சொல்ல வந்த பொருளின் வேகத்தில் மனம் தடுமாறியதற்கான சான்று அது. வாளை ஏந்தும் கைகள் எழுத்துக்களையும் இவ்வளவு கூர்மையாகக் கையாள வேண்டும் என எதிர்பார்ப்பது தவறா?”

தலை குனிந்தான் வீரமாறன். “இலக்கணத்தை விட உணர்வு முக்கியம் என்று கருதினேன் தேவி.” ஒரு கணம் தயங்கி, “ஆனால் இன்று புரிகிறது. வாள்வீச்சில் பிசகினால் உடல் காயப்படும். கவிதையில் தளை பிசகினால், படைப்பின் உயிரே காயப்படும்” என்றான்.

“தளை தவறிய வெண்பா கவிஞனை அழிப்பதில்லை தளபதியாரே. தவறை மறைக்கும் தயக்கமே கலையை அழிக்கும்.” அவளது விழிகள் அவனைக் கூர்மையாகத் துருவின. “ஆனாலும்... போரின் மறைச்செய்தியை ஏன் இப்படிச் சிலேடையில் மறைத்து எழுதினீர்?”

“என் போர்த் திட்டத்தைக் கடாரத்து ஒற்றர்களிடமிருந்து காக்கவே சிலேடையாக வடித்தேன். மாநக்கரம் தான் நம் இலக்கு என்பதை, எதிரிக்குக் காதல் கவிதையாகத் தோன்றும் வண்ணம் புனைந்தேன்.” வீரமாறனின் குரலில் குற்றவுணர்வு நிழலாடியது.

புருவம் சுருக்கினாள் வீரசோழி. அவள் கண்களில் தெரிந்த மின்னல் வியப்பல்ல, அடக்கப்பட்ட கோபமாகும். “தளபதி தன் போர்த் திட்டத்தைக்

கவிதையாக எழுதி ஒற்றனின் உயிரைப் பலிவாங்குவதா? உங்கள் அறிவின் செருக்கு, சோழ தேசத்திற்குச் சிறந்த ஒற்றனை இழந்த வடுவை மட்டும் தரவில்லை, நம் ஒற்றர் வலைப்பின்னலையே சிதைத்திருக்கிறது!"

"அது அறிவின் செருக்கல்ல தேவி." குரலில் கனிவை ஏற்றினான் வீரமாறன். "என் கவிதை அடையாளத்தை உலகம் அறிவதை விட, என் திட்டம் எதிரிக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகப் பயன்படுத்திய மாற்று வழி அது. சாத்தனுக்கு அது புரியவில்லை என்பது என் துரதிர்ஷ்டம்."

"மாற்று வழி என்றால் அது உங்கள் ஆட்களுக்குப் புரிந்திருக்க வேண்டும். அவனுக்குப் புரியாத சங்கேதம் எப்படிப் போர்த் திட்டமாகும்? உங்கள் கவிதைப் பெருமையால் சோழ நாடு சிறந்த ஒற்றனை இழந்துவிட்டது." அவள் வார்த்தைகள் சவுக்குப் போல் அவனைத் தாக்கின.

"அவன் எதிரிகளிடம் பிடிபட்டால் சங்கேதம் உடையக் கூடாது என்பதற்காகவே அப்படி எழுதினேன். ஆனால், அவன் பிடிபடுவதற்கு முன்பே உயிரிழப்பான் என்று நான் கணிக்கவில்லை..." அவனது குரலில் வேதனை தெரிந்தது.

"ஆம்... என் பிழையே. புலவர் சபையில் அன்று நான் அடைந்த அவமானத்தை விட, இன்று உங்கள் முன் நிற்கும் இந்தக் கணம் என்னை மிகவும் வதைக்கிறது. என் அறிவாற்றல் எனக்கான கவசமாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அதுவே சாத்தனின் மரணக் கண்ணியாகிவிட்டது."

அவனது குரலில் இருந்த அந்த உண்மையான குற்றவுணர்வு, அவளது கோபத்தின் தீவிரத்தைக் குறைத்தது. வாள்வீச்சில் அஞ்சாத அந்த மாவீரன், தன் தவறை எந்தத் தயக்கமுமின்றி ஏற்றுக்கொண்ட விதம், அவள் கண்களில் மெல்ல வேறொரு ஒளியாகப் படர்ந்தது.

வீரமாறன் அவளைக் கவனித்தான். விளக்கின் ஒளியில் அவளது நெற்றியில் வழிந்த சிறு வியர்வைத் துளி, கூர்மையான சிந்தனையின் அடையாளமாகத் தெரிந்தது.

பார்வையைத் தாழ்த்தினான் வீரமாறன். "இனி நான் எழுதும் எந்தச் சங்கேதமும் என் அறிவின் பெருமைக்காக இருக்காது தேவி. அதைச் சுமந்து செல்லும் ஒற்றனின் உயிரைப் பாதுகாக்கும் அளவுக்குத் தெளிவாக இருக்கும். போர்த் திட்டம் என்பது எதிரியை ஏமாற்ற மட்டுமன்றி, நம்மவர்களைக் காக்கவும் வேண்டும் என்பதை... சாத்தன் தன் உயிரைக் கொடுத்து எனக்குக் கற்றுக்கொடுத்துவிட்டான்."

"உங்கள் சிலேடையில் சிறு திருத்தம் செய்ய அனுமதிப்பீர்களா, தளபதியாரே?" என்று கேட்டவள், அவன் பதில் சொல்வதற்குள் தன் எழுத்தாணியை எடுத்தாள். அந்த ஓலையில், 'கார்த்திகைமீன் சேர்ந்தவங்கம் திரும்ப' என்ற அடிக்குக் கீழே, நுண்ணிய சுழியொன்றைப் பொறித்தாள். "இந்த ஒற்றைச் சுழி எதிரிக்கு வெறும் அணிகலன். ஆனால் நம் ஒற்றனுக்கோ, 'மீன் மறையும் நாழிகையில் வா' என்று மெல்லக் கூவும். மறைபொருள் உங்களுக்கு மட்டும் விளங்கினால் போதாது தளபதியாரே. அதைச் சுமப்பவனுக்கும் வழிகாட்ட வேண்டும். சாத்தனுக்கு இந்த ஒற்றைச் சுழி இருந்திருந்தால்..." அவள் வாக்கியத்தை முடிக்கவில்லை. அதற்கானத் தேவையும் இல்லை.

வீரமாறன் அசந்து போனான். தன் கலையையே தன்னைவிடக் கூர்மையாக அவள் வாசித்துச் செதுக்கியதைக் கண்டு அவன் நெஞ்சில் வியப்பும், மரியாதையும் ஒருசேரப் பொங்கின. ஓலையைத் திரும்பப் பெற அவன் கை நீட்டியபோது, அது அவள் விரல் நுனியில் கணப்பொழுது தயங்கி நின்றது. இருவரின் கைகளும் அந்தச் சுவடியின் மேல் மெல்லத் தீண்டிக்கொண்டன. எழுத்தாணியின் குளிர்ச்சிக்கு நடுவே எழுந்த அந்த வெதுவெதுப்பு, இருவரையும் நொடிப்பொழுது அசைவின்றி நிறுத்தியது. விளக்குச் சுடர் அவர்களது நிழல்களைச் சுவரில் ஒன்றாய்க் கலந்தது.

"கவிதைக்கும் திருத்தம் வேண்டும் என்றீரே. என் முதல் திருத்துநர் நீங்களே தேவி" என்றான் வீரமாறன், குரலில் லேசான மென்னகை பொதிந்திருக்க. வீரசோழி விரைந்து அந்த ஓலையை விட்டு விலகினாலும், தன் இதழோரம் மலர்ந்த புன்னகையை மட்டும் மறைக்க அவளால் இயலவில்லை.

இருட்டறையில் நிகழ்ந்த அந்த உரையாடல் அவர்கள் இருவருக்கும் இடையே புதியதொரு பிணைப்பை உருவாக்கியிருக்க... மறுபுறம், அந்த இருண்ட நகரத்தின் மற்றொரு முனையில் வேறொரு சந்திப்பு நிகழ்ந்தது.

அதே வேளை, அலைகள் ஓயாது ஆர்ப்பரிக்கும் வங்கக் கடற்கரையை ஒட்டிய செண்பகப் பூஞ்சோலை.

புதிய தேக்கு மரக் கட்டைகளின் நறுமணத்தோடு, உவர்ப்பான இரவுக் கடற்காற்றும் சிலுசிலுவென

வீசியது. முழுநிலவொளியில், முகிலனும் யாழினியும் தனிமையில் கூடியிருந்தனர்.

குளிர்ந்த காற்று யாழினியின் கருங்குழலை மெல்ல வருடிச் சென்றது. கடலை நோக்கி ஆழ்ந்து செவிமடுத்தாள் அவள். அலை கரையை அறைந்து மீளும் ஓசையில் அவளுக்குப் புரியாத மறைவில்லை. எந்த அலை மந்தமாக வருகிறது, எது அடியில் கிழக்கு ஓட்டத்தை மறைத்துக்கொண்டு சீறுகிறது என்பதைக் குழந்தைப் பருவத்திலிருந்தே கற்றவள் அவள்.

“அலை மேலே அமைதியாக இருக்கிறது முகிலா,” என்றாள் யாழினி மெல்லிய குரலில். “ஆனால் அடியில் நீரோட்டம் மாறத் தொடங்கிவிட்டது. பெரும் புயல் பிறக்கவிருக்கிறது.”

முகிலன் வியப்போடு அவளை நோக்கினான்.

“விண்மீன்கள் உனக்கு வழிகாட்டினால்… அலை எனக்கு வழிகாட்டும்.”

இருவரும் மை தீட்டிய வானில் சிதறிக் கிடந்த விண்மீன் கூட்டங்களை நிமிர்ந்து பார்த்தனர்.

“என் தந்தை வாள் பிடித்த வீரன் அல்ல யாழினி,” முகிலனின் குரல் தணிந்தது. “அவர் கயிறு பிடித்த மாலுமி. பாய்மரம் நடுங்கும் ஓசையைக் கேட்டே காற்று மாறப்போகிறது என்று கணிப்பார். கப்பலின் மரத்தடியில் காதை வைத்தால், அலை கீழே எங்கு ஓடுகிறது என்று அறிந்துவிடுவார்.”

யாழினி அமைதியாக அவனது விழிகளையே நோக்கிக் கேட்டாள்.

“முன்னொருமுறை ஈழப் பயணத்தில், காரிருள் பனியில் முன்னணி சோழக் கப்பல்கள் தவறான சுழல் ஓட்டத்தில் சிக்கிக்கொண்டன. அப்போது என் தந்தை தன் கப்பலைப் பக்கவாட்டாகத் திருப்பி, அலை முறியும் இடத்தைப் பிற கப்பல்களுக்குக் காட்டினாராம். மற்றவர்கள் தப்பித்துக் கரை திரும்பினர். அவர்… கடலன்னைக்கு இரையாகிவிட்டார்.”

முகிலன் வானில் ஒளிர்ந்த கார்த்திகை விண்மீனை உற்று நோக்கினான். அவனது கண்களில் நீர் திரண்டது.

“அம்மா எப்போதுமே ஒரே சொல்லைத்தான் சொல்வார்… ‘உன் தந்தை போரில் சாகவில்லை. மற்றவர்கள் வழிகாண தன் கப்பலையே அலைக்குக் கொடுத்துவிட்டார்’ என்று.”



யாழினி அவனது முரட்டுக் கரங்களைத் தன் மென்கைகளுக்குள் ஆதரவாக எடுத்துக்கொண்டாள். ஆறுதலாக அவனைத் தன் நெஞ்சோடு சாய்த்துக்கொள்ளப் போன அந்தப் புனிதமான நொடி…

அலைகளின் தாளத்தை மீறி ஒரு சலசலப்பு யாழினியின் செவிகளை எட்டியது. அலைகள் மணலைத் தொடும் சத்தத்தோடு, கனமான காலடிகள் ஈர மணலில் பதுங்கி நடக்கும் அதிர்வை அவளது பாதங்கள் சட்டெனக் கணித்தன. மென்விரல்கள் முகிலனின் கையை இறுகப் பற்றின.

“முகிலா… எச்சரிக்கை! இருளில் யாரோ நெருங்குகிறார்கள்,” என்று பதறினாள் யாழினி.

சொல்லி முடிப்பதற்குள், செண்பகப் புதர்களுக்குப் பின்னிருந்து நான்கு கரிய நிழல்கள் பாய்ந்து வந்தன. முழுநிலவின் கதிர்களில் வளைக்கத்திகள் கொடூரமாகப் பளபளத்தன. இருளில் மினுமினுத்த வஞ்சகக் கண்கள். அவர்கள் யார்? எதற்காக வந்தார்கள்? யூகிப்பதற்குள் முகிலனைச் சூழ்ந்துகொண்டனர் அந்த மர்ம மனிதர்கள்.

இருளில் ஒரு பளபளப்பு மின்ன, முகிலனின் நெஞ்சைப் பிளக்கும் வெறியோடு முன்னால் நின்றவனின் வளைக்கத்தி பாய்ந்து வந்தது!

(தொடரும்…)

# செங்கதிர்



கு.மணி

**மே**ற்குத் தொடர்ச்சி மலையின் முகடுகளில் வருசநாட்டுப் பெருங்காற்று கானகப் பெருமரங்களை உலுப்பிக் கொண்டிருந்தது. ஆண்டிபட்டி மலைத்தொடரின் சாய்வில், அடர்ந்த மருத மரங்களின் வேர்களுக்கிடையே ஒரு மெல்லிய ரத்தநாளம் போலக் கசிந்து வழியும் நீர்க்கோடுதான் மாவூற்று. கரிய பாறைகளின் இடுக்குகளிலிருந்து வற்றாது வழியும் அந்தச் சுனைநீர்தான் அந்தப் பகுதியின் ஆதி உயிர். இந்த ஊற்றுநீர் அந்த மலையின் வாயிலை விட்டு எங்கே செல்கிறது என்பது இன்றும் ஓர் அறிவியல் புதிராகவே உள்ளது.



அந்த ஊற்றுக்கண்ணுக்கு அப்பால், பாறைப் பொந்துகளையும் மூங்கில் கழிகளையும் பச்சிலை இலைகளையும் பின்னி அமைக்கப்பட்ட பளியர்களின் ‘குடி’ அமைந்திருந்தது. அங்கே சமவெளியின் நாகரிக வாசனைகளோ, மின்விளக்குகளின் மாயப் பிரகாசங்களை அவர்கள் கண்டு கொள்வதில்லை.

இரவு நேரங்களில் உடலையும் ஆன்மாவையும் சூடேற்றும் ‘தீமூட்டம்’ மட்டுமே அவர்களின் உயிருள்ள களம்.

அந்தத் தீமூட்டத்தின் புகையருகே, பாறைப் பிளவில் சம்மணமிட்டு அமர்ந்திருந்தான் கிழவன் காடன். அவனது உடம்பின் ஒவ்வொரு சுருக்கமும் இந்த மலையின் வறட்சியையும், செங்குத்துப் பாறைகளில் கொம்புத்தேன் எடுத்த வடுக்களையும் மௌனமாகப் பேசிக் கொண்டிருந்தன. கண்பார்வை மங்கிவிட்ட போதிலும், கானகத்தின் வாசனையை வைத்தே நாரவள்ளிக் கிழங்கின் முதிர்ச்சியையும், எந்தச் சரிவில் கரடி இளைப்பாறுகிறது என்பதையும் அவனது கூரிய செவிகளும் மூக்கும் காட்டின் மொழியிலேயே வாசித்துவிடும்.

அவனுக்கு எதிரே அவனது பத்து வயதுப் பேரன் வேழன் உட்கார்ந்திருந்தான். உடலில் கிழிந்த அரைக்கால் சட்டை மட்டுமே மிச்சமிருந்தது. காடன் அவனது கையில் ஒரு கூர்மையான மூங்கில் கொழுவை வைத்து விரல்களை மூடச் செய்தான்.

"வேழா... இந்தக் காடு நம்ம தாய். நாரவள்ளிக் கிழங்கைத் தோண்டும்போது தாய்மடியைக் கீறாம, பக்குவமா கொழுவை இறக்கணும். காடு நமக்குச் சோறு போடும்; ஆனா மனிதப் பயலுக காலடி பட்டா இந்த மலையே மலடாயிடும். நாளைக்குக் கார்த்திக நாளு விடியுது. சமவெளி சனம் மலையேறி வரும். அவங்க சாமிக்கு நெய்வேத்தியம் வைக்க வருவாங்க. நாம காட்டின் பிள்ளைகளா தள்ளி நின்னு சாமியைக் கும்பிட்டுட்டு, அவங்க தர்றத வாங்கிட்டு அடங்கி நிக்கோணும்" என்றான் காடன்.

அப்போது குடிசையின் வாயிலில் செங்கதிர் வந்து நின்றாள். பதினாறு வயதான அவளது கண்களில் மலையின் அமைதியும், அதே சமயம் சமவெளியின் ஏமாற்றுத்தனங்களை அடையாளம் கண்டுவிட்ட கூர்மையும் தெரிந்தன. ஆண்டிபட்டி அரசினர் மகளிர் உண்டு உறைவிடப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் அவள், விடுமுறைக்காக மலைக்குத் திரும்பியிருந்தாள். அவளது அக்குளில் ஒரு நோட்டுப் புத்தகமும் கணக்கு புத்தகம் ஒன்றும் இருந்தது.

"தாத்தா... வேழனுக்குக் கிழங்கு தோண்டச் சொல்லிக் குடுக்குறதுல தப்பில்ல. ஆனா, அவனுக்குக் காலண்டர்ல இருக்குற எண்களை எண்ணத் தெரியலியே... ஊருக்குள்ள போனா எவனாவது ஏமாத்திட்டுப் போயிருவானே. அவனுக்குக் கல்வி வேணாமா?" என்று கேட்டாள் செங்கதிர்.

காடன் அவளை நிமிர்ந்து பாராமல், வாயில் இருந்த புகையிலைக் காரத்தைக் காட்டின் புழுதியில் துப்பினான். "பள்ளிக்கூடம் போயிட்டா வயிறு நெறைஞ்சிருமா செங்கதிரு? மலையைத் தாண்டி நமக்கு என்ன இருக்கு? கார்த்திக நாளு வந்தா சக்கம்பட்டி நெசவுக்காரங்க வருவாங்க. வேலப்பனுக்கு மொட்டையடிச்சு மாவிளக்கு போடுவாங்க. அவங்க போடுற நாலு காசை வாங்கிட்டு பேசாம ஒதுங்கி நிக்கணும். அதுதான் நம்ம தலைமுறை காலமா கத்துக்கிட்ட சடங்கு"

விடியற்காலை நான்கு மணிக்கே ஆண்டிபட்டி–சக்கம்பட்டி நெசவுத் தெருக்களில் தறிகளின் சடசடப்பு அடங்கிவிட்டது. தினந்தோறும் தறிக்குழியில் அமர்ந்து பாவு நூலை எண்ணி, இழைகளைச் சேர்த்துச் சேலை நெய்யும் நெசவாளர்களுக்குக் கார்த்திகை திருநாள் என்பது உடம்பின் வலியை ஆற்றும் ஒரு புனித கிரிவலம். பஞ்சுப் புழுதியும் சாய நெடியும் உடம்பில் ஊறிப்போன அந்த நெசவாளர்கள், மாவூற்று வேலப்பனை தரிசிக்க விடியலிலேயே திரண்டனர்.

சக்கம்பட்டியின் மூத்த நெசவாளர் பொன்னுச்சாமி, தோளில் பருத்தித் துண்டை முறுக்கிப் போட்டபடி தன் மகன் முத்துவையும் மருமகன்களையும் அழைத்தார்.

"டேய் முத்து... பஞ்சாமிர்தத்தையும், தறியில முதல் பூவா நெய்த பட்டுகரை வச்ச வேட்டியையும் பத்திரமா எடுத்துக்கோ. வருசம் பூரா தறி தட்டாம ஓடணும்னா மாவூற்று வேலப்பனோட பார்வை வேணும். அந்த ஊத்துல நீராடி, முருகனுக்கு வஸ்திரம் சாத்திட்டா நெசவுல ஒரு நூலும் அறுந்து போகாது" என்றார்.

அவர்கள் தேங்காய், பழம், பச்சரிசி மாவு, வெல்லம் நிரம்பிய பைகளுடன் மாவூற்றுப் பாதையில் ஏறத் தொடங்கினர். சமவெளியின் கடின உழைப்பாளிகள் அவர்கள்; ஆனால் அந்த உழைப்பிற்கு நடுவே ஒருவித பக்திச் சடங்கு அவர்களை ஆண்டுதோறும் இந்த மலை முகடுகளை நோக்கி இழுத்து வந்தது.

அடிவாரத்தில் மலைப்பாதை தொடங்கும் இடத்தில் பளியர் குடியின் எல்லைக்கற்கள் தெரிந்தன. அங்கே மலையின் பூர்வகுடிகள் காட்டு நெல்லிக்காய்களையும், சுவைமிக்க கொம்புத்தேனையும், நாரவள்ளிக் கிழங்குகளையும் மூங்கில் கூடைகளில் பரப்பி வைத்து பக்தர்களின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

செங்கதிர் தன் தம்பி வேழனின் கையைப் பிடித்துக்கொண்டு நின்றாள். "வேழா... இன்னைக்கு யார்கிட்டயும் போயி கையேந்தி நிக்கக் கூடாது. பசியெடுத்தா குடிசையில சுட்ட கிழங்கு இருக்கு, தின்னுக்கோ. நான் சொல்லிக் குடுத்த அந்த எண்களைத் தரையில எழுதிப் பழகு" என்றாள்.

வேழன் தலையசைத்தான்; ஆனால் அவனது பார்வை மலையேறி வரும் கூட்டத்தின் பளபளக்கும் வேட்டிகளிலும், அவர்களின் கைகளில் இருந்த பித்தளைத் தட்டுகளின் மீதும் நிலைத்திருந்தது. அவனது மனதில் பசியும், சமவெளி மனிதர்கள் வீசும் அந்தப் பளபளக்கும் காசுகளின் மீதான ஒரு விசித்திரமான மிரட்சியும் கலந்திருந்தன.

பகல் பத்து மணியளவில் மாவூற்றுப் பிரகாரம் திருவிழாக் கோலம் பூண்டது. மலையடிவாரத்தின் நீர்ச்சுனை பளிங்கு போலக் கொப்பளித்து வழிய, பக்தர்கள் அதில் மூழ்கி எழுந்து ஈரத் துணியோடு சன்னதிக்கு வந்தனர். சன்னதி மணியோசை மலை முகடுகளில் மோதிப் பள்ளத்தாக்கெங்கும் எதிரொலித்தது.

"அரோகரா... மாவூற்று வேலப்பனுக்கு அரோகரா..." என்ற முழக்கம் காட்டின் அமைதியைக் கிழித்தது. ஆனால், அந்த சன்னதிக்கு அப்பால், நூறாண்டுப் பழமையான மருத மரத்தின் நிழலில் பளியர்களின் ஆதி வழிபாட்டுச் சடங்கு மௌனமாக நடந்தது.

காடனும் அவனது மகன் சின்னானும் ஒரு வெள்ளைக் கல்லை நட்டு, அதற்குச் செம்மண் பூசி, காட்டுப் பூக்களால் அலங்கரித்திருந்தனர். அது 'பழச்சி அம்மன்' பீடம். வெளியாட்கள் வேலப்பனை முருகனாகப் பார்த்தபோது, பளியர்கள் அந்தச் சுனையின் காவல் சக்தியைத் தங்கள் ஆதித் தாயாகவே வணங்கினர். காடன் ஒரு மூங்கில் குழாயில் அடைத்து வைத்திருந்த முதல் கொம்புத்தேனை எடுத்து அந்தக் கல்லின் மீது ஊற்றினான்.

"ஆத்தா பழச்சி... மலைக்கு மனுசங்க வர்றாங்க. ஆனை வழி மறிக்காம, கரடி சீறாம எம்புள்ளைகளக் காப்பாத்து. காட்டை நாங்க காயம்



விண்மீன் மின்னிதழ்

பண்ணாம வாழுறோம்; எங்களை நீதான் கைவிடாம பாக்கணும்," என்று தரையில் விழுந்து வணங்கினான். இது இரத்தமற்ற, பந்தாடல்களற்ற ஓர் ஆதி மரபு. இயற்கையிடம் இருந்து பெற்றதற்குப் பிரதியாக இயற்கையின் காலடியிலேயே சமர்ப்பிக்கும் கானகச் சடங்கு.

ஆனால், சன்னதியின் வாசலில் வேறொரு காட்சி அரங்கேறியது. சாமி தரிசனம் முடித்து வந்த சக்கம்பட்டி பக்தர்கள் பிரசாதங்களை உண்டுவிட்டு, படிகளில் அமர்ந்திருந்த பளியர் சிறுவர்களின் கைகளில் பிரசாதம் சில்லறைகளை கொடுக்கத் தொடங்கினர்.

செங்கதிரின் சொல்லை மறந்து, பசியின் உந்துதலால் வேழனும் படிக்கட்டுகளின் ஒரு மூலையில் போய் அமர்ந்துவிட்டான். அவனது விரிந்த பிஞ்சு உள்ளங்கையில் பக்தர்கள் வீசிய ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் நாணயங்கள் குவிந்தன. அந்த உலோக நாணயங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் 'கிலுங் கிலுங்' என்ற சத்தம் அவனுக்கு ஏதோ மாய உலகத்தின் வாசனையைக் காட்டியது.

அப்போது சமவெளியைச் சேர்ந்த ஒரு மளிகைக் கடை வியாபாரி வேகமாகப் படிக்கட்டுகளில் இறங்கி வந்தார். கோவில் வாசலில் தேங்காய் வாங்க அவருக்குச் சில்லறை தேவைப்பட்டது.

மடி நிறையச் சில்லறைகளை அள்ளி வைத்து விளையாடிக் கொண்டிருந்த வேழனைக் கண்டதும் அவர் சட்டென்று நின்றார். தன் சட்டைப் பையிலிருந்து அழுக்கடைந்த, கசங்கிய ஒரு ஐம்பது ரூபாய் தாளை எடுத்து வேழனின் முகத்துக்கு நேரே நீட்டினார்.

"டேய் தம்பி... எங்கிட்ட சில்லறை இல்ல. இந்தா இந்த ஐம்பது ரூபாயை வச்சுக்கோ. உங்க சாமிகிட்ட தேங்காய் உடைக்கப் பத்து ரூபாய் காணிக்கை குடுக்கணும். இந்த ஐம்பது ரூபாயில பத்து ரூபாய் போக, மீதி நாற்பது ரூபாயைச் சில்லறையா எடுத்துக் கொடு, சீக்கிரம்!" என்றார் அதிகாரத் தொனியில்.

வேழன் அந்த ஐம்பது ரூபாய் தாளைப் பார்த்தான்; பின் தன் மடியில் கிடந்த சில்லறைக் குவியலைப் பார்த்தான். அவனது பிஞ்சு மூளைக்குள் உலகம் இருண்டுபோனது.

அவனுக்கு 'ஐம்பது' என்றால் என்னவென்று தெரியாது. 'பத்து' என்ற சொல்லின் எல்லை புரியவில்லை. 'மீதி நாற்பது' என்பது அவனது

கற்பனைக்கும் எட்டாத ஓர் அசாத்திய புதிர். அவனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான்: பாறையில் தேனீக்கள் எத்தனை இருக்கின்றன, சுனையில் மீன்கள் எப்படி நீந்துகின்றன என்பது மட்டுமே. எண்களின் மாய உலகமும், சமவெளியின் கூட்டல் கழித்தல் தந்திரங்களும் அவனது கானக அறிவுக்கு அப்பாற்பட்டவை.

வியாபாரி அவசரப்படுத்தினார். "என்னடா அப்படி முழிக்கிற? சொன்னது காதுல விழல? பத்து ரூபாயை எடுத்துக்கிட்டு மிச்சம் நாற்பது ரூபாயைக் கொடுடான்னா பேய் மாதிரி பாக்குற!" என்று குரலை உயர்த்தினார்.

வேழனின் கண்கள் மிரண்டன. கைகள் நடுங்கின. மடியில் இருந்த நாணயங்களை அள்ளினான்; அதில் ஒன்று, இரண்டு, ஐந்து எனப் பல எண்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனால் எது ஒன்று, எது இரண்டு, எது ஐந்து என்று அவனுக்குப் பிரித்தறியத் தெரியவில்லை. எல்லாமே பளபளக்கும் வட்ட உலோகங்கள், அவ்வளவுதான். அந்த வியாபாரி கோபத்தில் அடித்துவிடுவாரோ என்ற அச்சத்தில், தன் மடியில் இருந்த சில்லறைக் குவியலை அப்படியே இரண்டு கைகளாலும் அள்ளி, அந்த ஐம்பது ரூபாய்க்காக அவரிடம் மொத்தமாக நீட்டினான். அதில் அறுபது ரூபாய்க்கும் மேல் சில்லறை இருந்தது!

அடிவாரத்தில் நின்று தம்பியைத் தேடி வந்த செங்கதிர், இந்தக் காட்சியைக் கண்டதும் மின்னல் பாய்ந்தது போல ஓடிவந்தாள்.

வியாபாரி அந்தச் சில்லறைக் குவியலை அள்ளித் தன் பையில் திணிக்க முற்பட்ட அந்தக் கணத்தில், செங்கதிர் குறுக்கே புகுந்து வேழனின் கைகளைத் தட்டிவிட்டாள். சில்லறைகள் படிக்கட்டுகளில் சிதறி "சலசல"வென உருண்டோடின.

"நில்லுங்க!" என்று செங்கதிர் அலறினாள். அவளது கண்கள் கோபத்தில் கனன்றன.

வியாபாரி அதிர்ந்து போய், "என்னம்மா... நான் அவன்கிட்ட ஐம்பது ரூபாய் குடுத்து சில்லறைதான கேட்டேன்... அதுக்கு ஏன் இப்படி எகிறுற?" என்றார்.

"சில்லறை கேட்டீங்களா... இல்ல இந்தக் கொழந்தையோட அறியாமையை வச்சு ஏமாத்துனீங்களா?" என்று செங்கதிர் வெடித்தாள். "ஐம்பது ரூபாயைக் குடுத்துட்டு நாற்பது ரூபாய் கேக்குறீங்க. இவன் இன்னும் பள்ளிக்கூடத்துப் படியையே மிதிக்காத பளியர் காட்டுப் பிள்ளை! இவனுக்குப் பத்து எது, நாற்பது எதுன்னு தெரியாதுங்கிறது உங்க கண்ணுக்குத் தெரியலையா? அவன் பயத்துல மடியில் இருந்த மொத்தக் காசையும் அள்ளிக் குடுக்கும்போது, அதுல அறுபது ரூபாய்க்கு மேல இருக்குதுன்னு தெரிஞ்சும் கையை நீட்டுறீங்களே... இதுதான் உங்க சமவெளி நாகரிகமா?"

சுற்றியிருந்த சக்கம்பட்டி நெசவாளர்களும் பக்தர்களும் அந்த இடத்தில் கூடினர்.

செங்கதிர் தன் தம்பியை இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். வேழன் பயத்தில் அக்காவின் சேலை முந்தானைக்குள் முகத்தைப் புதைத்து நடுங்கிக் கொண்டிருந்தான்.

"பாத்தீங்களா பெரியவர்களே..." என்று செங்கதிர் கூட்டத்தைப் பார்த்து உடைந்து அழுதாள். "மாசம் தோறும் கார்த்திகைக்கு வந்து எங்க மலையில இருக்குற வேலப்பனை வணங்குறீங்க. எங்க பிள்ளைகளுக்குப் புண்ணியத்துக்குச் சில்லறையை தாறீங்க. ஆனா, அந்தப் பிள்ளைக்குக் கையில விழுந்த காசுல பத்து எது, நாப்பது எதுன்னு எண்ணத் தெரியலையே... ஒரு ஐம்பது ரூபாய் தாளைக் காட்டி அவனோட மொத்த உழைப்பையும், மடியில் கிடந்த சில்லறையையும் பறிச்சுட்டுப் போற அளவுக்கு இங்க அறியாமை இருட்டு சூழ்ந்து கெடக்குதே! இந்த படிக்கட்டுல நாங்க பிச்சைக்காரங்களா இருக்குற வரைக்கும், எங்களை ஏமாத்துறதுக்கு ஆயிரம் வியாபாரிங்க வருவாங்க. எங்களுக்குத் தேவை உங்க சில்லறைக் காசுகள் இல்ல... என் தம்பிக்கு எண்களை எண்ணத் தெரிய வைக்கிற கல்வி!"

செங்கதிரின் வார்த்தைகள் படிக்கட்டுகளில் மோதி, ஒரு தீப்பொறியைப் போல அங்கிருந்தவர்களின் மனசாட்சியை உலுக்கியது. அந்த வியாபாரி வெட்கித் தலைகுனிந்து, தன் ஐம்பது ரூபாய் தாளை எடுத்துக்கொண்டு கூட்டத்தில் நழுவி மறைந்தார்.

சக்கம்பட்டியின் மூத்த நெசவாளர் பொன்னுச்சாமி மெதுவாக முன்னே வந்தார். தறி நெய்து பழக்கப்பட்ட அவரது கைகள் நடுங்கின. அவர் வேழனின் அருகில் மண்டியிட்டு அமர்ந்தார். கீழே சிதறிக் கிடந்த நாணயங்களில் ஒரு பத்து ரூபாய் நாணயத்தை எடுத்தார்.

"தாயி செங்கதிரு..." என்று தழுதழுத்த குரலில் சொன்னார் பொன்னுச்சாமி. "தறியில பாவு நூலை எண்ணி ஓட்டுற எங்களுக்கு, இந்த மலையோட பிள்ளைகள் கணக்குத் தெரியாம ஏமாறுறதைப் பாக்கிறப்போ நெஞ்சு வெடிச்சுடும் போல

இருக்குதும்மா. நாங்க செஞ்சது தர்மம் இல்ல; அறியாமையில உங்களை மூழ்கடிச்ச அநீதி. சில்லறையை வீசிட்டுப் போனா புண்ணியம் வரும்னு நெனச்சோம்... ஆனா, உங்க வாழ்க்கையோட கணக்கு அறுந்து போய்க் கெடக்குறதை இன்னைக்கு நீ கண்ணுல விரல் விட்டு ஆட்டி காட்டிட்ட."

பொன்னுச்சாமி எழுந்து நின்று, தன் தோழர்களான நெசவாளர்களைப் பார்த்தார்.

"தம்பிகளா... இனிமே கார்த்திகை நாளுல மாவூற்றுக்கு வரும்போது நாம சில்லறைக் காசுகளை இந்த படிக்கட்டுல இருக்கிற பசங்களுக்கு தரக்கூடாது. நம்ம சார்பா, இந்தப் பளியர் குடியில இருக்குற அத்தனை பிள்ளைகளுக்கும் நோட்டுப் புத்தகம், சிலேட்டு, பென்சில், பள்ளிக்கூடத்துக்கான சீருடை எல்லாத்தையும் நாமளே வாங்கித் தருவோம். வேழனை ஆண்டிபட்டிப் பள்ளிக்கூடத்துல சேர்க்குறதுக்கான அத்தனை செலவையும் நம்மளே ஏத்துக்கிடுவோம். இங்க ஒரு கொழந்தை கூட எண்களைத் தெரியாம ஏமாந்து நிக்கக் கூடாது!"




விண்மீன் மின்னிதழ்

கூட்டத்தில் இருந்த நெசவாளர்களும் நெகிழ்ச்சியோடு அதை ஆமோதித்தனர். பல தலைமுறைகளாக நீடித்த யாசகத்தின் பிணைப்பு, அன்றைய பொழுதில் சமத்துவத்தின், கல்வியின் பிணைப்பாக உருமாறியது.

மாலை மங்கத் தொடங்கியது. மாவூற்றின் கரிய பாறைகளின் மேல் செவ்வானத்தின் பொன்னிற ஒளி படர்ந்திருந்தது. சக்கம்பட்டி நெசவாளர்கள் மலைப்பாதையில் மெல்ல இறங்கிக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்களின் நெஞ்சில் வழக்கமான கிரிவலக் களைப்பு இல்லை; ஒரு புதிய விடியலை நோக்கிய கூட்டுப் பொறுப்புணர்வின் அமைதி படர்ந்திருந்தது.

குடிசையின் முன்னால், காடன் மூட்டிய தீமூட்டம் தகதகவென எரிந்து கொண்டிருந்தது.

செங்கதிர் ஈர மணலில் ஒரு குச்சியால் எண்களைப் பெரிதாக வரைந்து காட்டிக் கொண்டிருந்தாள்:
10... 20... 30... 40... 50...

வேழன் தன் பிஞ்சு விரல்களை அந்த மணல் எண்களின் பள்ளங்களில் வைத்து, கூர்ந்து கவனித்துச் சொன்னான். "அக்கா... நாப்பதுக்கு அப்புறம்தான் ஐம்பது வருதுல்ல? பத்து போயிட்டா நாற்பது மிஞ்சும், அப்படித்தானே?"

செங்கதிர் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு சிரித்தாள். "ஆமாடா வேழா... இனிமே உன்னை இந்த உலகத்துல எந்தக் கொம்பனாலும் ஏமாத்த முடியாது."

பாறை விளிம்பில் அமர்ந்திருந்த கிழவன் காடன், தன் மங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு அந்த மணல் எண்களைப் பார்த்தான். அவனது உதடுகள் கானகத்தின் ஆதிப் பிரார்த்தனையை முணுமுணுத்தன

"ஆத்தா பழச்சி... காடு நமக்குச் சோறு போடும்; ஆனா இந்த உலகத்துல மனுசனா வாழ இந்த எண்களும் எழுத்தும்தான் வழி காட்டும்னு இன்னைக்கு என் பேத்தி நெரூபிச்சிட்டா. பளியன் காட்டுக்குள்ளயே அடங்கிப் போயிட மாட்டான்... இனி எண்களைக் கொண்டும் உலகத்தை அளப்பான்!"

இரவின் குளிர் மாவூற்றை மெல்லத் தழுவியது. பாறைகளின் வழியே கசிந்து பாயும் அந்தச் சுனைநீரின் சலசலப்பில், பசியின் முனகலோ அல்லது அறியாமையின் கையேந்தலோ இனி இல்லை; எண்களின் வெளிச்சத்தோடு மலையுச்சியிலிருந்து சமவெளியை நோக்கி நடைபோடத் தயாராகிவிட்ட ஓர் ஆதி குலத்தின் கம்பீரமான வரலாற்றுப் பாடல் மிக ஆழமாய் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

# இந்தியர் வீதி

## அத்தியாயம் – 2

கண்ணன் விஸ்வகாந்தி

ஒரு கனவு நனவானது. ஆசைகளும், கனவுகளும் அலைக்கழிக்க, அமெரிக்க மண்ணில் காலடி எடுத்து வைத்தேன். விமானம் நின்றதும், லக்கேஜ் பகுதிக்குச் சென்றேன். கன்வேயர் பெல்ட்டில் பல வடிவங்களில், வண்ணங்களில் சூட்கேஸ்கள் சுற்றிக்கொண்டு இருந்தன. கொட்டை எழுத்தில் எனது பெயரை எழுதி வைத்ததால், எனது சூட்கேஸைக் கண்டு பிடிப்பது எளிதாக இருந்தது. சக்கரங்கள் இருந்ததால் தள்ளிச் செல்வது எளிதாக இருந்தது. நேராகக் குடியுரிமை சோதனைப் பகுதிக்குச் சென்றேன். மிகப்பெரிய கூட்டமிருந்தது. பல வரிசைகளில், முதல் முறையாக பார்க்கும் பல தரப்பட்ட முகங்கள். உலகின் அத்தனை மூலைகளில் இருந்தும், தங்களின் கனவு நாடான அமெரிக்காவிற்கு வந்து இறங்கியிருந்தனர். நான் நின்ற வரிசை சற்றே நகர்ந்தது. இருபது மணி நேரப் பயணத்திற்குப் பிறகு, நீண்ட வரிசையில் லக்கேஜ்களோடு நிற்பது நிச்சயமாக பெரிய தண்டனை. வயதானவர்களும், நோயாளிகளும் என்ன செய்வார்கள் என்று யோசனை எழுந்தது.

எனது முறை வந்தது. வெள்ளை வெளேரென்று இருந்தவர் தனது கண்ணாடி வழியாக என்னை ஊடுருவிப் பார்த்தபடியே, பாஸ்போர்ட்டிலிருக்கும் எனது படத்தையும் பார்த்தார்.

“What is the purpose of your visit?”

“How long you are going to stay?” என்று சில சம்பிரதாயமான சில கேள்விகளைக் கேட்டார்.

எனது பதிலில் திருப்தி அடைந்தவராக, பாஸ்போர்ட்டில் முத்திரை குத்திவிட்டு, திருப்பிக் கொடுத்தார். நன்றி சொல்லி விட்டு சோதனைகளை முடித்து விட்டு, வாசலுக்கு நடக்க ஆரம்பித்தேன். எல்லாக் கதவுகளும் தானாக விலகி வழிவிட்டது, ஏதோ ஆங்கிலப் படம் போலிருந்தது. வாசலில் ஏராளமான இந்திய முகங்கள். நிறைய டாக்ஸிகள். ஹூஸ்டனில் இந்திய ஜனத்தொகை சற்று அதிகம் தான். இந்தியாவுக்கு சற்றே அருகிலிருந்த தட்பவெப்ப நிலையாக இருக்கலாம்.

முன்பே சொல்லி அனுப்பியபடி, எனது பெயர் தாங்கிய பதாகை வைத்திருந்தவரை நோக்கிச் சென்றேன். கம்பெனி பெயரைச் சொல்லியவுடன், சூட்கேஸ்களை வண்டியின் பின்புறம் வைத்து விட்டு, அமரச் சொன்னார். நன்றாக உடுத்தியிருந்தார். வண்டி அம்சமாக இருந்தது. எல்லாமே லெதர் சீட்டுகள். நல்ல மணம் வந்தது. முதல் முறையாக ஒரு ஆடம்பரமான காரில் பயணம் செய்தேன். மனசு மிகவும் சந்தோஷமாக இருந்தது. சில வினாடிகளில் வேகமெடுத்து 59 ஹைவேயில் பறக்க ஆரம்பித்தது. வழியில் ஹூஸ்டன் நகரம், வண்ண வண்ண விளக்குகளால் ஜொலித்தது. பிரம்மாண்டமான கட்டிடங்கள். காரிலிருந்து முழுமையாக பார்க்க முடியாதபடி உயரமாக இருந்தன.

ஆலன் சகோதரர்களால் 1836-ல் நிர்மாணிக்கப்பட்ட ஹூஸ்டன் நகரம், இடையே கொஞ்ச காலம் டெக்சாஸின் தலைநகரமாகவும் விளங்கியது. 1850-களில் அமைக்கப்பட்ட ரயில் பாதைகள், டெக்சாஸின் பண்ணைப் பொருட்கள் மற்ற இடங்களுக்கும் செல்ல வசதி அமைத்துக் கொடுத்தது. 1900-களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயில், பல ஆயில் நிறுவனங்கள் அமைய வழியமைத்தது.

1914ல் அமைக்கப்பட்ட ஆழ்நிலை கப்பல் போக்குவரத்துக்கான பாதை, இந்நகரத்தை ஒரு மிகச் சிறந்த துறைமுகமாக மாற்றியது.

1940-களில் நடந்த இரண்டாம் உலகப்போர் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவியது. பெரும்பாலும் ரப்பர்.

1943-ல் அமைக்கப்பட்ட டெக்சாஸ் மெடிக்கல் சென்டர், உலகத்தின் மிகப்பெரிய மெடிக்கல் சென்டராக மாறியது.




விண்மீன் மின்னிதழ்

1961-ல் நாசா தனது ஜான்சன் விண்வெளி மையத்தை இங்கு அமைத்ததும், ஹூஸ்டன் விண்வெளி நகரமானது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நகரத்தில் எனது அமெரிக்கப் பயணம் தொடங்குவது எனது மனதுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தது.

இருபது நிமிடங்களுக்குப் பிறகு, இந்தியர்கள் அதிகமாக வசிக்கும் சுகர்லேண்ட் என்னும் பகுதியிலிருந்த கிரீண்லேண்ட் அபார்ட்மெண்ட்டுக்கு வந்து சேர்ந்தோம்.
நவம்பர் மாதமாக இருந்தாலும், குளிர் ஓரளவுக்கு தாங்கக்கூடிய அளவிலியே இருந்தது. இந்தியாவில் வாங்கிய ஸ்வெட்டர் உதவியது.

வேணு மற்றும் சாம்பசிவம்(சாம்பா) ஆகிய இருவரும் வரவேற்று அழைத்துச் சென்றார்கள். அவர்களுடன் மூன்றாவது ரூம்மேட்டாக தங்கப் போகிறேன் என்று புரிந்தது. இருவரும் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு தமிழ் தெரியாது. எனக்கு தெலுங்கு வராது. ஆங்கிலம் தவிர்க்க இயலாத ஒன்றானது. அவர்கள் சமைத்த நூடுல்ஸ்ஸை சாப்பிட்டு விட்டு, களைப்பில் அப்படியே உறங்கி விட்டேன்.

அடுத்த நாள் எழுந்த போதுதான் தெரிந்தது, அது காலையில்லை, மதியம் என்பது. கண்மண் தெரியாமல் தூங்கி இருக்கிறேன்.

முதல் அதிர்ச்சி, பாத்ரூமில் ஹேண்ட் சவர் இல்லை. காகிதம் தான் உருளையில் சுற்றப் பட்டிருந்தது. சற்று அருவருப்பாக இருந்தது. இதற்குப் பழக சற்று காலம் ஆகலாம் என்று நினைத்துக் கொண்டேன்.

மீண்டும் நூடுல்ஸ். “முதல் வேளையாக, அபார்ட்மென்ட் அலுவலகத்தில் தெரியப்படுத்த வேண்டும்” என்றான் வேணு. சனிக்கிழமை விரைவில் மூடி விடுவார்கள் என்பதால், ஏறக்குறைய ஓடினோம். எனது பாஸ்போர்ட் விவரங்களை பெற்றுக் கொண்டு, சில இடங்களில் கையெழுத்து இடச்சொன்னார்கள். போனும் எஸ்எஸ்எண்ணும் வந்தவுடன், மீண்டும் வந்து அப்டேட் செய்யச் சொன்னார்கள். வெள்ளைக்காரர்கள் நடத்தினாலும், தங்கியிருந்த பெரும்பாலோர் இந்தியர்கள். எங்கள் கம்பனியில் இருந்தே பலரும் தங்கியிருந்தனர்.

பக்கத்தில் இருந்த குரோகர் என்னும் சூப்பர் மார்க்கெட்டுக்குச் சென்றோம். நடக்கும் தூரத்திலேயே கடை இருந்தது வசதி. கார் இல்லாததால், நடந்தே சென்றோம்.

ஒரு பெரிய மேட்டை ஏறிக் கடக்க வேண்டியிருந்தது. முதல் முறையாக இவ்வளவு பெரிய கடையைப் பார்த்தேன். ஒரு மனிதனுக்குத் தேவையான அத்தனை பொருட்களும் இருந்தன. இந்தியாவிலிருந்து கொஞ்சம் பணத்தை டாலராக மாற்றிக் கொண்டு வந்திருந்தேன். பார்க்கும் எல்லாப் பொருட்களின் விலையையும் இந்திய ரூபாய் மதிப்பில் மாற்றிக் கணக்கிட்டு, தேள் கொட்டியது போல, எடுத்த பொருட்களையெல்லாம் திரும்ப பத்திரமாக அதே இடத்தில் வைத்து விட்டு நகர்ந்து விட்டேன். ஒரு டாலர் 45 ரூபாய். பாங்க் அக்கௌன்ட் வரும் வரை, சமாளிக்க வேண்டும். ரூமுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு, பொருட்களை அங்கிருந்த டிராலியில் வைத்துத் தள்ளியபடியே வந்தோம்.

டிராலியை, வாசலில் அதனுடைய இடத்தில் விட்டு விட்டு, பொருட்களைக் கையில் சுமந்து கொண்டு அபார்ட்மெண்ட் வந்து சேர்ந்தோம். சிலர் டிராலிகளை அபார்ட்மெண்ட் வரையிலும் கொண்டு வந்து, அநாதையாக விட்டுச் சென்றிருந்தனர். கடையின் ஊழியர்கள் அவ்வப்போது வந்து டிராலிகளை எடுத்துச் சென்றனர். இவ்வாறு செய்வது பெரும்பாலும் இந்தியர்களாகவே இருந்தனர்.

வேணுவின் காலிங் கார்டை உபயோகித்து, அபார்ட்மெண்ட் அலுவலகத்தில் இருந்த மஞ்சள் நிற போன் வழியாக, அப்பா மற்றும் அம்மாவிடம் பேசினேன். அழைப்பை சுருக்கமாக முடித்துக் கொண்டேன்.

அடுத்த நாள் ஞாயிறு. மிகவும் லேட்டாக எழுந்தோம். ஹுஸ்டன் டவுன்டவுனிலிருக்கும் நலம் உணவு விடுதியில் மதிய உணவு என்பது திட்டம். அதே அபார்ட்மெண்ட்டில் தங்கியிருந்த, வேணுவின் நண்பர் சீனிவாஸ், தனது காரில் அழைத்துச் சென்று வர சம்மதித்தார். அவருக்கு ஆந்திராவில் குண்டூர் பகுதி. அமெரிக்கா வந்து பல வருடங்கள் ஆகி விட்டது. கிரீன் கார்டு வைத்திருந்தார்.

பதினோரு மணிக்குக் கிளம்பினோம். அரை மணி நேரத்தில் ஹுஸ்டன் டவுன்டவுன். அமெரிக்கர்கள் பிஸினஸ் சம்பந்தமான பெரும்பாலான அலுவலகங்களை நகரங்களில் அமைத்து, அப்பகுதியை டவுன்டவுன் என்று அழைத்தார்கள்.

அந்த கான்கிரீட் காட்டில், எங்கு பார்த்தாலும் கழுத்தை சுளுக்க வைக்கும், பல உயரமான கட்டிடங்கள். எல்லாமே உருக்கு மற்றும் கண்ணாடியால் ஆன கலவை.

ஹூஸ்டன் ஓபரா ஹவுஸ், டொயோட்டா விளையாட்டுத் திடல், 12 ஏக்கரில் அர்பன் பார்க் மற்றும் மார்க்கெட் ஸ்கொயர் பார்க் ஆகியவற்றுடன் அழகாக காட்சி அளித்தது. அண்டர்கிரௌண்டில் ஆறு மைல் தொலைவுக்கு வாக்வே இருந்தது. ஏகப்பட்ட உணவுக் கடைகள். உலகின் எல்லா நாட்டு உணவு வகைகளும் கிடைத்தது.

நலம் உணவகம் டவுனின் மத்தியப் பகுதியில் இருந்தது. ஒரு தமிழரால் நடத்தப் பட்ட உணவகம், தனது சுவைக்காக, அமெரிக்கா முழுவதும் புகழ் பெற்ற ஒன்றாக இருந்தது.

பெரும்பாலும் ஞாயிறு மதியம் பஃபே அடிப்படையில் இருந்தது. விலைதான் சற்று அதிகம். பதினைந்து டாலர்கள்.

சாலட் மற்றும் வெஜ் கிளியர் சூப்பிலிருந்து ஆரம்பித்தோம். காலையில் சாப்பிடாததால், சரியான பசி. இட்லி, குட்டி மசால் தோசை, வெஜ் பிரியாணி, சாதம், சாம்பார், வத்தக்குழம்பு, ரசம், தயிர், வடை, ஊறுகாய், அப்பளம் என அருமையான தமிழ் நாட்டுச் சாப்பாடு. விமானத்தில் இலை, தழைகளை சாப்பிட்டதற்கு, வீட்டு சாப்பாடு போல சுவையாக இருந்தது. ஏராளமான கேக் மற்றும் ஐஸ்கிரீம், பழத்துண்டுகள். ரவுண்டு கட்டி அடித்தோம். எனது பங்கினைக் கொடுக்கையில், சீனி தடுத்து விட்டார்.

பக்கத்திலிருந்த இந்திய பலசரக்குக் கடையில், குவார்ட்டர்(25 காசு நாணயம்) கொண்ட கட்டுகள் மற்றும் காலிங் கார்டுகள் வாங்கிக் கொண்டேன். வேணு ஊறுகாய் மற்றும் பொடிகள் வாங்கினார்.

திரும்புகையில் வண்டியில் தூங்கியபடியே வந்தேன். அபார்ட்மெண்ட்டுக்கு வந்தவுடன், அவருக்கு நன்றி சொல்லி விட்டு, தூங்க ஆரம்பித்தோம். அடித்துப் போட்ட மாதிரி தூங்கி விட்டு, மாலை ஆறு மணியளவில் எழுந்தேன்.

எல்லொருக்கும் ஞாயிறன்று துணி துவைக்கும் வைபவம். துவைக்கும் அளவுக்கு என்னிடம் எதுவும் இல்லை. வேணுவுடன் அபார்ட்மெண்ட் வளாகத்தில் இருந்த துணி துவைக்கும் இடத்திற்குச் சென்றேன். ஏகப்பட்ட இயந்திரங்கள். எல்லாமே காயின் போட்டால் துவைக்கும் இயந்திரங்கள். துவைத்து அதுவே உலர்த்தியும் கொடுப்பதால், வேலை எளிது.

நாற்பத்தைந்து நிமிடங்கள் என்ன செய்வதென்று தெரியாமல், அபார்ட்மெண்ட் வளாகத்தில் இருந்த, ஜிம்மிற்குச் சென்றோம். டிரெட் மில் என்னும் ஓடும் இயந்திரங்கள் நிறைய இருந்தன. சைக்கிளிங்

மற்றும் வெயிட் லிப்டிங் இயந்திரங்கள் சிலவும் இருந்தன. பழக்கமில்லாததால், டிரெட் மில்லில் நடப்பதே சிரமமாக இருந்தது. சிலர் வேகமாக ஓடிக்கொண்டிருந்தனர். அரை மணிநேரத்தில் மீண்டும் துணி துவைக்கும் இடம். துணிகளை அதற்குரிய பையிலிட்டு எடுத்துக் கொண்டு, அறைக்கு வந்து சேர்ந்தோம்.

இரவு உணவிற்கு உப்புமாவும், ஆம்லெட்டும். தேவையான வேலைகளைச் செய்தபடியே எனது வேலை சார்ந்த அனுபவங்களை கேட்டபடியே இருந்தார் சாம்பா. நானும் வெள்ளந்தியாக எனது வேலை சார்ந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டேன். என்ஜினீயரிங் முடித்து விட்டு, யுபிஎஸ் சர்வீஸ், பிறகு மென்பொருள் சொல்லித்தரும் ஆசிரியர் பணி, இறுதியாக ஒரு சாப்ட்வேர் கம்பெனியின் ஆறு மாதங்களாக டெவலப்பர் வேலை என எல்லாவற்றையும் கதையைப் போலச் சொன்னேன்.

அடுத்த நாள் கம்பெனி அலுவலகம் சென்றோம். நடந்து செல்லும் தூரத்தில் இருந்ததால், வசதியாக இருந்தது.

கம்பெனிக்கு ராஜ், ரங்கா என்று இரண்டு உரிமையாளர்கள். நாங்கள் சென்ற போது, இருவருமே தங்களது அறையில் இருந்து வெளியே வந்து, அனைவருடனும் காபி அருந்திக் கொண்டிருந்தார்கள். ராஜ் சுமாரான உயரமும், சுருட்டை முடியும், இறுக்கமான முகமும் கொண்ட, கறாரான மனிதராகத் தெரிந்தார். ரங்கா தனது கைகளில் எலுமிச்சை நிற டென்னிஸ் பந்து போன்ற ஒன்றை வைத்து நசுக்கியபடியே பேசினார். ஐந்தரை அடி உயரம், கேசுவலான உடை, ஜாலியான, பிரண்ட்லியான தோற்றம். பார்த்ததுமே எனக்கு ரங்காவைப் பிடித்து விட்டது.

எனது வேலை அனுபவங்கள் மற்றும் குடும்பம் பற்றி சற்று நேரம் பேசினோம். ரங்கா வேணுவை அழைத்து, "நாளைக்கு இவரை அழைத்துச் சென்று எஸ்எஸ்என் அப்ளை பண்ணிடு. அப்படியே பேங்க் அக்கவுண்ட் ஓப்பன் செஞ்சி கொடுத்துடு. என்னோட ஃபோர்டு கார எடுத்துக்கோ" என்றார்.

அடுத்த நாள் சற்று நேரமாக எழுந்து தயாராகி விட்டேன். எங்களுக்கு அருகிலிருந்த எஸ்எஸ்என் அலுவலுகம் வெஸ்ட்கீமர் ரோட்டில் இருந்தது. அபார்ட்மெண்ட்டிலிருந்து பதிமூன்று மைல் தொலைவு. கொஞ்ச தூரம் சென்றதும், ஐ-69 பிடித்து இருபது நிமிடங்களுக்குப் பிறகு அலுவலகத்தை வந்தடைந்தோம். முன்னரே போனில் பதிவு செய்து விட்டு வந்திருக்கலாம்.

நீண்ட வரிசையில் காத்திருந்தோம். SS-5 படிவத்துடன் எனது கடவுச்சீட்டு மற்றும் ஐ-94, விசா ஆகியவற்றைக் காண்பித்து அப்ளை செய்தேன். இரண்டு வாரங்களில் வீட்டு முகவரிக்கு வந்து விடும் என்றார் கவுண்ட்டரிலிருந்த பெண்மணி. இந்த அடையாள அட்டை இலவசம் என்பது ஆச்சரியமான விஷயம். ஒரு முக்கியமான வேலை முடிந்த சந்தோஷம் எனக்கு. வேணுவுக்கு நன்றி சொன்னேன். மதியத்திற்குள் திரும்பி விட்டோம்.

அடுத்த முக்கியமான வேலை வங்கிக் கணக்கு. அபார்ட்மெண்ட்டுக்கு அருகிலிருந்தால் நல்லது. நடந்தே சென்று விடலாம். அதனால் அருகிலிருந்த பர்ஸ்ட் ஹாரிசன் பேங்க்கில் சேமிப்புக் கணக்கு தொடங்கச் சென்றிருந்தேன். எனது கடவுச்சீட்டு மற்றும் ஐ-94, விசா ஆகியவற்றைக் காண்பித்தேன். எஸ்எஸ்என் வந்தவுடன் ஜெராக்ஸ் காப்பி சமர்ப்பித்து விடுகிறேன் என்று சொல்லி வங்கிக் கணக்கு ஆரம்பித்து விட்டேன். டெபிட் கார்டு மற்றும் செக் புக் ஒரு வாரத்தில் வந்துவிடுமென்று சொன்னார் கவுண்டரில் இருந்த வெள்ளையர்.

இரண்டு வேலைகள் முடிந்ததால் அன்றைய தினம் மிகவும் சந்தோசமாகக் கழிந்தது.

விண்மீன் மின்தமிழ

அடுத்து என் முன் நின்ற சவால் டிரைவிங் லைசென்ஸ். சைக்கிளைத் தவிர வேறேதும் ஓட்டாதவன், நேரடியாகக் கார் லைசென்ஸ் வாங்கப் போகிறேன் என்பதே பெரிய சவாலாகவும், நகைச்சுவையாகவும் இருந்தது.

என்னைப் போன்று புதிதாக அமெரிக்கா வந்தவர்கள் அபார்ட்மெண்ட்டில் கணிசமாக இருந்தனர். அனைவருக்கும் இது ஒரு சவாலாகவே இருந்தது. இந்திய லைசென்ஸ் உரிமம் சில மாநிலங்களில், அதுவும் சில மாதங்களுக்கு வேலிட் ஆக இருந்தது.

இதற்கென்றே டிரைவிங் பள்ளிகள் நடத்தும், இந்திய வட மாநிலத்தவர்கள் இருந்தனர். வலதுபுறம் ஓட்ட வேண்டும் என்பதும், தவறு செய்தால் மிகக் கடுமையான தண்டனைகளும் இருந்ததால், லைசென்ஸ் கிடைப்பது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும். ஆனால் மிகவும் அவசியமான ஒன்று. எல்லா இடங்களிலும் லைசென்ஸ் ஒரு அடையாள அட்டையாக இருந்தது. அதுவுமில்லாமல் கார் இல்லாமல், எதுவும் செய்ய முடியாது என்பதே கசப்பான உண்மை.

ஏறக்குறைய ஒரு மாதத்திற்கும் மேலாக டிரைவிங் கற்றுக் கொண்டேன். பல டிரைவர்கள் ஒரு இடத்தில் அசெம்பிள் ஆவார்கள். மாணவர்களை அழைத்துக்



கொண்டு, ஒரு தூரப் பயணம். அதிக டிராஃபிக் இல்லாத ஏதோ ஒரு ஹைவேயுக்கு அழைத்துச் சென்று, காரை ஓட்டச் சொல்வார்கள். ஒருவருக்கு பதினைந்து நிமிடங்கள் கிடைக்கும். நேராக ஓட்டுவோம். ஓட்டி முடித்தவுடன் அவர் பின்னால் அமர, அடுத்தவர். குறைவான நேரமே ஓட்டுவதால், எனக்கு தடுமாற்றமாகவே இருந்தது. அதிகமாகத் தவறுகள் செய்தேன். திட்டு வாங்கினேன். ஒரு மணி நேரத்திற்கு முப்பது டாலர்கள். மிகவும் விலை அதிகமான ஒரு பயிற்சி.

கம்பெனியிலிருந்து எல்லோருக்கும் ஒரு சம்பள அட்வான்ஸ் கொடுத்து இருந்ததால் சமாளிக்க முடிந்தது. ஒரு மாதம் கழித்து, எனக்குப் பயிற்சி அளித்த ஓட்டுநர் ஒரு வழியாக ஆறு மைல் தொலைவில் கெஸ்னர் ரோட்டில் இருந்த, டிரைவிங் லைசென்ஸ் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்.

எனக்கு மிகவும் பயமாக இருந்தது. கைகால்கள் நடுங்கின. சில ஃபார்ம்களை பூர்த்தி செய்து, கட்டணம் செலுத்திய பிறகு, ஓட்ட வேண்டிய இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

டிரைவிங் இன்ஸ்பெக்டர் ஐம்பது வயது மதிக்கத்தக்க வெள்ளையர். கனமான குரலில்,"how are you doing today?" என்றார்.

"Doing good. Thanks" என்று சொல்லி விட்டு, ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து ஸ்டியரிங் வீலைப் பிடித்தேன்.

இதயம் வெளியே வந்து விடுமளவுக்கு வேகமாக துடித்தது எல்லா கண்ணாடிகளையும் பார்த்து விட்டு, வண்டியை எடுத்தேன். மிக மிக மெதுவாக ஓட்டினேன். பத்து நிமிடங்களுக்குப் பிறகு, திடீரென ஹைவேயில் ஓட்டச் சொன்னார். வேகமும் அதிகம். மெதுவாக ஓட்டினால், பின்னால் வருபவர்கள் இடித்து விடுவார்களோ என்று பயம். திடீரென அவர் தனது காலடியில் இருந்த பிரேக்கை அழுத்தினார். இல்லையெனில் இடித்திருப்பேன். அப்போது எனக்கு ரிசல்ட் தெரிந்து விட்டது. ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, ஆரம்பித்த இடத்திற்கு வந்து சேர்ந்தோம். ரிவர்ஸ் எடுத்து சரியாக பார்க்கிங் செய்வது மிகப் பெரிய சவால். இறங்கியவுடன் வலதுகை கட்டை விரலை கீழே காட்டி, "Fail" என்றார்.

இந்த ஒரு மாதமும் வேலை சார்ந்த இன்டர்வியூக்கு தயாராவதில் கழிந்தது. எஸ்எஸ்என் கைக்குக் கிடைத்தது. பேங்க்கிலிருந்து டெபிட் கார்டு மற்றும் செக் புக் வந்து சேர்ந்தது. ஒரு பெரிய சாதனை என்று மனசு சந்தோஷப் பட்டது. வார இறுதிகளில் காலிங் கார்டு வழியாக அப்பா, அம்மாவிடம் பேசினேன்.வேலை எப்போது கிடைக்கும் என்பதே அப்பாவின் கவலையாக இருந்தது.

பக்கத்தில் இருந்த சில உணவகங்களில் சாப்பிட்டோம். மெக்டொனால்ட்டில் வெஜ் பர்கர் கிடைக்கவில்லை. உள்ளிருந்த பேட்டியை எடுத்து குப்பையில் வீசி விட்டு, வெறும் பன்னை சாப்பிட்டேன். பெரும்பாலும் பிரெஞ்ச் பிரைஸ் மற்றும் கோக் சற்று ஆறுதலாக இருந்தது. சப்வேயில் உண்பது முதலில் மிகவும் கடினமாக இருந்தது. வெறும் பன்னையும் இலை, தழைகளையும் உண்பது போலிருந்தது. போகப் போக பழகி விட்டது.

ஒரு வார இறுதியில் நண்பர்கள் பியர்லேண்டிலிருந்த மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் செல்லலாம் என்று முடிவானது. இந்த முறையும் சீனிவாஸ்தான் உதவினார். அவருடைய காரில் ஞாயிறன்று காலை பதினோரு மணிக்குக் கிளம்பினோம். அங்கிருந்து 27 மைல்கள், 40 நிமிடங்கள். மேப்பை பிரிண்ட் அவுட் எடுத்துக் கொண்டோம். I-69, highway no.6 south எடுத்து, முப்பது நிமிடங்களிலேயே வந்து சேர்ந்தோம். மிகவும் பெரிய, பிரபலமான கோயில். சிறப்பான தரிசனம். கேண்டீனில் மிளகாய் பஜ்ஜி, தயிர் வடை, பூரி என்று நிறைய சாப்பிட்டோம். நிறைய அழகான இந்திய முகங்களைக் காண முடிந்தது. சற்று நேரம் கோயிலைச் சுற்றி விட்டு, அங்கிருந்து கிளம்பினோம். அடுத்த நாள் காலை ஹூஸ்டன்

டவுன் டவுனில் இருந்த ஒரு கம்பெனியில் நேர்காணல் இருந்தது.

வேணுவுக்கு வேறு ஒரு கிளையண்ட் உறுதியாகி இருந்தது. நானும் சாம்பாவும் மற்றும் வேறு ஒரு பெண்ணும் சேர்ந்து சென்றோம். பேருந்திலேயே செல்ல முடிவெடுத்து, காலையில் நேரமாக எழுந்து தயாராகி பேருந்து நிறுத்தத்திற்குச் சென்றோம். தங்கியிருந்த இடத்திலிருந்து குறைவான பேருந்துகளே இருந்தன. குவார்ட்டர் என அழைக்கப்படும் 25 காசு நாணயம் போட்டு, டிரான்ஸ்ஃபர் டிக்கெட் எடுத்துக் கொண்டு, வேடிக்கை பார்த்தபடி பயணம் செய்து, அரைமணி நேரத்தில் ஹூஸ்டன் டவுன்டவுன் அடைந்தோம். நாங்கள் செல்ல வேண்டிய கம்பெனி அருகிலேயே பேருந்து நிறுத்தம் இருந்ததால், அதிகமாக நடக்க வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது.

கண்ணாடியால் வேயப்பட்ட ஒரு பிரம்மாண்டமான கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் எலிவேட்டரில் சென்று, ரிசப்ஷனில் இருந்த இந்தியப் பெண்ணிடம் விவரங்கள் தெரிவித்த பிறகு, அழைப்பிற்காக காத்திருந்தோம். மூவரும் ஒவ்வொருவராக அழைக்கப் பட்டோம். எனது முறை வந்தவுடன் உள்ளே சென்றேன். இரண்டு மத்திம வயதுடைய இந்தியர்கள் கோட், டையுடன் அமர்ந்திருந்தனர். பெரும்பாலான கேள்விகள் விஷுவல் பேசிக் என்னும் மென்பொருளில் எனது அனுபவம் பற்றியே இருந்தது. அதையே இரண்டு வருடங்கள் சொல்லிக் கொடுத்ததால், எல்லாக் கேள்விகளுக்கும் தடையின்றி பதில் சொன்னேன். இரண்டு நாட்களில் பதில் சொல்வதாக, ரிசப்ஷன் பெண் சொன்னாள். மதியம் அருகிலிருந்த இந்திய உணவகத்தில் மதிய உணவு முடித்து விட்டு, பேருந்து நிலையத்தில் காத்திருந்தோம். எங்களின் அதிர்ஷ்டம் காரணமாக, சற்று நேரத்தில் பேருந்து வந்தது. எங்கள் நேர்காணல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு வீடு வந்து சேர்ந்தோம்.

அடுத்த நாள் மூவரையும், ராஜ் அழைப்பதாகச் சொன்னதால், எங்கள் கம்பெனி அலுவலகம் சென்றோம். ராஜ் மட்டுமே இருந்தார். ரங்காவைக் காணவில்லை.

ராஜ் எங்கள் மூவரையும் அவரது அறைக்கு அழைத்துப் பேசினார்.

என்னைப் பார்த்து "How come they selected you?. You are not a fit for the position. Looks like, you don't have any hands on experience. I am not going to send you" என்றார்.

எங்கள் அறையில் நான் பகிர்ந்து கொண்ட அனைத்து விஷயங்களும் ராஜிக்குத் தெரிந்திருந்தது. அனைவருக்கும் முன்பு இவ்வாறு பேசியதால், அவமானத்தால் சுருங்கிப் போனேன். ஏசி அறையில் வேர்த்துக் கொட்டியது. என்னை வெளியே அனுப்பி விட்டு, மற்ற இருவருரிடமும் சற்று நேரம் பேசிக்கொண்டு இருந்தார். சற்று நேரத்தில், நான் அறைக்கு வந்து விட்டேன்.

அந்தப் பெண் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிந்தேன். அடுத்த நாள் காலை வழக்கம்போல கம்பெனிக்கு, நானும் சாம்பாவும் சென்றோம். மீண்டும் அடுத்த நேர்காணல் எப்போது கிடைக்குமோ என்ற கவலை இருவரிடமும் இருந்தது.

ராஜ் வெளியே வந்து , என்னை வரச் சொன்னார். ராஜ் மற்றும் ரங்கா இருவரும் அறையில் இருந்தனர். ராஜ் தெளிவான தமிழில், உறுதியான குரலில் பேசினார்: "இன்னும் ஒரு வாரம் டைம் தர்றோம். விசாவைக் கேன்சல் செய்யப் போறோம். தயாரா இருங்க". எனக்கு ஒன்றும் புரியவில்லை. தரை நழுவியது. தலை சுற்ற ஆரம்பித்தது. என்னையே பிடித்து இழுத்துக் கொண்டு, "சார், இன்னும் ஒரு சான்ஸ் குடுங்க. நிச்சயம் கத்துக்குவன். தியரி நல்லா வரும். இரண்டு சின்ன புராஜக்ட் இங்கேயேப் பண்றேன். கொஞ்சம் உதவி பண்ணுங்க. அப்பா, அம்மா ரொம்ப எதிர்பார்க்கறாங்க" என்றேன் அழுகையை அடக்கியபடி.

"இல்லிங்க. நாங்க முடிவு செஞ்சிட்டம். நீங்க இந்தியா திரும்பிப் போனதுதான் பெஸ்ட் ஆப்ஷன்" என்றார் ரங்கா.

எழுந்து இருவரிடமும் கை குலுக்கி விட்டு வெளியே வந்தேன். சாம்பாவுக்கும் அதிர்ச்சி.

அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்கவில்லை. சாவியை வாங்கிக் கொண்டு, அறைக்கு வந்து சேர்ந்தேன். ஏதோதோ எண்ணங்கள் மனதில் ஓடின. அப்பா, அம்மாவிடம் எப்படி சொல்வது? மீண்டும் அனைவரின் முகத்திலும் எப்படி விழிப்பது? அன்றிரவு முழுவதும் கண்களுக்கு ஓய்வின்றி அழுது கொண்டே இருந்தேன்.

- தொடரும்

# எது நகைச்சுவை?

## பாலாஜி பாஸ்கரன்



எது நகைச்சுவை? எல்லாமே நகைச்சுவை என்றால் எதுதான் வாழ்வு?

நகைச்சுவை உணர்வு வாழ்வை சிக்கல்களில் இருந்து விடுவித்து இலகுவாக நகர்த்த நமக்கு உதவும். அது இன்றியமையாதது. இன்னும் சொல்லப்போனால் மனிதர்களுக்கு மட்டுமே உரித்தான உணர்வு என்றும் சொல்கிறார்கள். சமீபத்தில் ஒரு பாண்டா கரடி விழுந்து விழுந்து சிரித்த காணொளி பார்த்ததிலிருந்தும், சில குரங்குகள் சிரிப்பது போன்ற காணொளிகள் பார்த்ததிலிருந்தும், நகைச்சுவை உணர்வு உயிர்களுக்குப் பொதுவானது என்றும், வாழ்வின் இன்றியமையாத தேவை என்றும் உணர்கிறேன்.

ஆனால் சில உணர்வுப்பூர்வமான செயல்களை நகைச்சுவையாக்குவதை தவிர்க்க வேண்டும் என்று கருதுகிறேன். குறிப்பாகத் தமிழை நகைச்சுவையாக்குவதை ஏற்றுக் கொள்ளவே கூடாது. தூய தமிழில் யாராவது பேசினால் அவரை எள்ளி நகையாடவே விரும்புகிறோம். அதன் பின்னால் உள்ள உளவியல் நம்மால் இயலாததை அவர் செய்கிறார். அது நமக்கு வரவில்லை, ஆதலாம் வன்மம் வளர்கிறது. அப்போது அவரை விட நாம் பெரியவர்கள் என எப்படி தோள்பட்டையைத் தூக்குவது? அவரை மட்டம் தட்டுவதில்தான் அது சாத்தியமாகிறது.




இதன் முக்கிமான தோற்றுவாயாக தமிழ்த் திரைப்படங்களைக் கருதுகிறேன். பெரும்பாலான தமிழ்த் திரைப்படங்கள் இதுவரை தமிழாசிரியர்களைக் காட்சிப் படுத்திய விதம் ஏற்றுக் கொள்ளவே இயலாத ஒன்று. ஒரு பள்ளிக்கூடம், கல்லூரி போன்ற கதையமைப்பு என்றாலே அங்கே ஒரு தமிழாசிரியர் இருப்பார்; அவரை எல்லாரும் ஏளனம் செய்யும் ஒரு கோமாளியாகவே காட்சிப்படுத்தி வந்திருக்கிறது. அவரை கதாநாயகனும் அவர் நண்பர்களும் அவமானப்படுத்துவதாகவும், பட்டப்பெயர்கள் கொண்டு அழைப்பதாகவும் காட்சிகள் வைப்பதுண்டு. வேறெந்த மொழிக்காரர்களும் தங்கள் மொழி ஆசிரியரை இந்தளவுக்கு கேவலப்படுத்துவார்களா என்று தெரியவில்லை.

ஆக, இப்படி தமிழ், தமிழாசிரியர், தூய தமிழில் பேசுபவர்கள் என எல்லாரையும் நகைச்சுவை என்ற பெயரில் ஏளனம் செய்தும், இழித்து மட்டம் தட்டிப் பேசியும் வந்ததின் விளைவு என்ன? தமிழே அல்லாத வெற்றுச் சொற்கள் பல்கிப் பெருகிவிட்டன. அன்றாடம் செய்யும் ஒரு செயலைக் கூட இன்னொருவரிடம் தொடர்ந்து தமிழில் சொல்ல இயலவில்லை.

தமிழில் பேசவோ வேறேதும் தமிழ் பற்றி கருத்துகளைப் பதிவு செய்யவோ எண்ணும் போது ”ஆமாம் இவரு பெரிய புலவரு” எனக் ‘கலாய்’ என்றொரு புதிய சொல்லின் மூலம் அவமானப் படுத்தப்படுகிறோம். ‘சான்சே இல்ல’, ‘வேற லெவல்’, ‘பக்கா மாஸ்’, ‘தெறி’, ‘வைபு’, ‘கலாய்’ போன்றவை தமிழர் உணர்வுகளை வெளிப்படுத்தும் சொற்களாக மாறி விட்டன.

நாம் நினைத்ததை நம் மொழியில் சொல்லக் கூட சொற்களை சிந்திக்காமல், எதோ ஒரு பொருளற்ற சொல்லைச் சொல்லி, நம் சிந்தனையையெல்லாம் முடக்கி, எதையும் தெரிந்து கொள்ள விரும்பாமல் அவசர அவசரமாக எதையும் அணுகி அடைந்து விடத் துடிப்பதின் விளைவு தமிழ்நாட்டின் தற்போதைய நிலையாக இருக்கிறது.

தமிழர்களை எல்லாம் ஆளுகின்ற, ஆட்சி நிர்வாகம் நடத்தி முக்கிய முடிவுகளும் சட்டங்களும் இயற்றுகின்ற சட்டமன்றத்தில் பேசுகிற பேச்சுகளையெல்லாம் கேட்கின்ற போது இவர்கள் இத்தனை நாள் தமிழ்வழிக் கல்வியில்தானே படித்து வந்திருப்பார்கள்? தமிழில்தானே பேசியிருப்பார்கள்? எண் தெரியவில்லை; எழுத்து தெரியவில்லை என்றால் அவர்கள் எல்லாம் இதற்கு முன் என்னவாகத்தான் இருந்திருப்பார்கள்? எப்படி குடும்பத்தில் பேசியிருப்பார்கள், கடையில் ஒரு பொருள் வாங்கியிருப்பார்கள், மற்ற மனிதர்களிடம் எப்படி பேசியிருப்பார்கள்? என்று பெரிய குழப்பமும் வேதனையும் மிஞ்சுகிறது.

எண்களைச் சொல்வதில் குழப்பம் எப்படி வரும்? கணியன் பூங்குன்றனார் என்ற பெயர் திருக்குறள், திருவள்ளுவர் போல் தமிழர்கள் எல்லோரும் நன்கறிந்த பெயர்தானே? எழுதச் சொன்னால் கூட கணியனா கனியனா என்று பிழை வரலாம்? ஆனால் பேசுவதில் எப்படி காணியாம் பூங்கொன்றன் வருகிறது? இவர்கள் தெனாலி படத்தில் கமல்ஹாசன் சொல்வது போல ஸ்டைலுக்காக தமிழைக் கெடுத்து வைத்திருக்கிறார்களா? அல்லது இவர்கள் இத்தனை ஆண்டுகளாக கற்ற கல்வியின், வாழ்ந்த வாழ்வின் மொத்த அறிவே இவ்வளவுதானா? என்ற வருத்தமும் மேலிடுகிறது.

ஆக மொத்தத்தில் தமிழையோ, தமிழில் பேசுபவனையோ நகைச்சுவையாக ஏளனம் செய்யத் தொடங்கியதின் விளைவு பெரிய சீரழிவில் கொண்டு போய் நிறுத்தும் என்பதற்கு தற்போதைய நாட்டு நடப்பே சாட்சி.

# நிஸ்வாவின் நிழலில்
# பகுதி-14
# மண்ணும் ஜின்னும்!!!

**இளங்கோ ராமசாமி**



ஆதி காலந் தொட்டே தங்களது வளங்களையும், உழைப்பையும், மனித வளத்தையும் எதிரிகளிடம் இருந்து காப்பதே மனித சமூகத்தின் தலையாய நோக்கமாக இருந்து வந்திருக்கிறது.

அதனால் தான் கடலையும், பெரும் நதிகளையும், விண்ணை முட்டும் மலைகளைகளையும் இயற்கை அரண்களாகப் பெற்ற சமூகங்கள் மிகப் பெரும் நாகரீகங்களாக உருவெடுத்தன.

அத்தகைய இயற்கை அரண்கள் இல்லாத சமூகங்கள் பெரும் கோட்டைகளையும், கொத்தளங்களையும் பலவிதமான நூதன ஆயுதங்களையும், புதுமையான போர்ப் பயிற்சிகளையும் பயன்படுத்திப் பேரரசுகளைக் கட்டியெழுப்பினர்.

கடந்த அத்தியாயத்தில் நாம் “சப் பானி ஃகாமிஸ்” என்ற எவரும் நெருங்க முடியாத ஒரு மலை மடிப்பிற்குள் உள்ளடங்கிப் பதுங்கியிருக்கும் புராதான கிராமத்தைப் பற்றிப் பேசிச் சிலாகித்தோம். அலைபேசிகள், விளக்குகள், காலணிகள், கடிகாரங்கள், திசை காட்டும் கருவிகள் என அதி நவீன வசதிகள் இருக்கும் இக்காலத்தில் கூட அக்கிராமத்திற்குக் கால் நடையாக மட்டுமே அதுவும் உடல் வலு உடையோர் மட்டுமே சென்று திரும்ப முடியுமெனில் இருநூறு முன்னூறு ஆண்டுகளுக்கு முன் அங்கு வீடு கட்டி, விவசாயம் செய்து பிழைத்துக் கிடந்த மக்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள்.

மறு புறம் இன்றும் கொடும் பாலை மணற் குன்றுகளுக்கு நடுவே கூடாரங்களில் வாழும் ஓமானி சமூகங்களும் இருக்கின்றன. அந்த நிலப்பரப்பிற்குப் பரிட்சையமற்றவர்களால் ஒரு போதும் அம்மக்களின் துணையின்றி அவர்களது வாழ்விடத்திற்குள் கால் வைத்து மீள முடியாது. அவர்களாக விருப்பப் பட்டாலொழிய புதியவர்களால் அவர்களை அந்தப் பெரும் வெளியில் நெருங்கக் கூட இயலாது.

இதுபோன்ற எந்த இயற்கை அரணும் இல்லாத சமவெளிப் பகுதிகளிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சமூகங்கள் தழைத்துச் செழித்து வளர்ந்திருக்கின்றன. அச்சமூகங்களில் ஒன்று இன்றும் வேர்பிடித்து உறுதியாக நிலைத்து நின்று ஓமானின் முக்கிய நகரங்களுள் ஒன்றாக சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

பஹலா என்ற இந்தப் புராதான நகரம் தன்னை நாடி வரும் விருந்தினர்களுக்குத் திகட்டத் திகட்ட அமானுஷ்யமான கதைகளைப் படைத்து விருந்தோம்புகிறது. “ஜபல் ஷாம்ஸ்” ல் இருந்து கீழே இறங்கினால் "ஹம்ரா” என்ற சிறு நகரத்தை அடைவோம். அந்த ஊரில் இருந்து இடது புறம் சென்றால் "நிஸ்வா” வை அடையலாம். அவ்வழியாகவே நாம் “மிஸ் ஃபாத்தையும்”, “ஜபல் ஷாம்ஸ்” ஐயும் அடைந்தோம்.

திரும்பச் செல்லும் வழியில் வலது புறம் திரும்பினால் பத்து நிமிடத்தில் பழம் பெரும் நகரமான "பஹலா” நம்மை வரவேற்கும். நகரத்தினுள் நுழையும் போதே ஓங்கு தாங்காகப் ப்ரம்மாண்டமான தொரு கோட்டை நம்மை அண்ணாந்து பார்க்க வைத்துக் கட்டிப் போடும். 9000 சதுர மீட்டர்கள் பரப்பளவிற்குப் பரந்து விரிந்து கிடக்கும் மண்ணாலும், கற்களாலும் கட்டப்பட்டுள்ள இக்கோட்டையின் “அல் கஸாபா” என்ற பகுதி கிறிஸ்து பிறப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்போ அல்லது அவர் பிறப்பிற்குப் பிந்தைய 200 ஆண்டுகளுக்குள்ளோ கட்டப் பட்டிருக்கக் கூடும்.

ஓமானின் மிகப் பெரிய கோட்டையான இதனுள் மேலும் இரு பகுதிகள் உள்ளன. “பைத் அல் ஜபல்” என்ற மலை வீடு 18 ஆம் நூற்றாண்டு வாக்கிலும் “பைத் அல் ஹடித்” என்ற புதிய வீடு 19ம் நூற்றாண்டிலும் கட்டப் பட்டிருக்கின்றன.



அரபியில் “பைத்” என்றால் “வீடு” என்றும் “ஹடித்” என்றால் “புதியது” என்றும் அர்த்தம். இப்படி கிட்டத்தட்ட 2500 ஆண்டு வரலாற்றைத் தாங்கி நிற்கும் இக்கோட்டையில் கால் பாவி நடப்பதும் இந்நகரின் கதைகளைக் கேட்டு ரசிப்பதும் ஒரு தனித்தன்மையான அனுபவத்தைக் கொடுக்கும்.

1987 ஆம் ஆண்டு “யுனெஸ்கோ” இந்த பஹாலா கோட்டையை ஓமானின் முதல் புராதானச் சின்னமாக அறிவித்தது. இதன் மிகவும் மோசமான சிதிலமடைந்த நிலையைக் கருத்தில் கொண்டு 1988 ஆம் ஆண்டு இதனைப் பாதுகாக்கப் பட வேண்டிய புராதானக் கட்டமைப்பு என்றறிவித்தது. மிக விரிவான திட்டமிடல் மற்றும் புதுப்பிக்கும் பணிக்குப் பின்னர் 2004 ஆம் ஆண்டு திட்டம் நிறைவடைந்து இக்கோட்டை புத்துயிர் பெற்றது.

உண்மையில் பஹலா கோட்டையைவிட 12 கி.மீ சுற்றளவும் சில இடங்களில் 10 மீட்டருக்கும் அதிகமான உயரமும் கொண்ட அதன் பெரும் மதில் சுவரே வியந்தோதப் பட வேண்டிய பெருமைக்குறியது. இம்மதிற்சுவர் நெடுகிலும் ஆங்காங்கே குறிப்பிட்ட இடை வெளிகளில் 36 கண்காணிப்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவற்றோடு ஏழு பெரும் கோட்டைக் கதவுகள் இருந்தன. இன்று மூன்று நுழைவாயில்கள் மட்டுமே எஞ்சி இருக்கின்றன. சுற்றுச் சுவரின் பல பகுதிகள் மற்றும் பல கண்காணிப்புக் கோபுரங்கள் காலச் சுழற்சியில் பராமரிப்பின்றிக் கரைந்து காணாமல் போய் விட்டன.

இந்த நீண்ட மதிற்சுவருக்குப் பின் பேரீட்சை மரத் தோப்புகளும், விளை நிலங்களும், வாய்க்கால்களும், சந்தையும், மசூதிகளும், குடியிருப்புப் பகுதிகளும் அமைந்திருந்தன. இப்படி அச்சுவர் கோட்டையை மட்டுமின்றி பஹ்லா வாழ் மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்தது.

என்னதான் உயர்ந்த மதிற் சுவர்களும் கண்காணிப்புக் கோபுரங்களும், படை பரிவாரங்களும் காவலுக்காக நிறுவப் பட்டிருந்தாலும் அவை மட்டுமே பஹலாவின் பாதுகாப்பிற்குப் போதுமானவையாக இல்லை.

இயற்கை அரண்கள் எதுவும் இல்லாத பஹலாவின் ஆதி குடிகள் தங்களைக் காத்துக் கொள்ளப் பல விதமான புனை சுருட்டுக்களைத் திரித்து விட்டிருக்கின்றனர். அதில் முதன்மையானது அவ்வளவு பெரிய மதிற் சுவரும், ஃபலஜ் என்ற நீர் பாசன வாய்க்காலும் ஒரிரவில் “ஜின்” எனப் படும் பூதங்களால் கட்டமைக்கப் பட்டவை என்ற கதையே.

“மைத்தா” என்ற சகோதரி மதிற்சுவரையும் "கைத்தா” எனும் சகோதரி நீர்ப்பாசன வாய்க்காலைக் கட்டியதாகவும் நம்பும் மக்கள் இன்றும் இருக்கின்றனர் எனில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இக்கதை எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும்? இதனாலேயே பஹலா, ‘மந்திர நகரம்’ எனப் பொருள்படும் "மதீனத் அல் செஹ்ர்” என்றழைக்கப்பட்டது.

மேலும் இருள் கவிந்த பிறகு வீட்டை விட்டு வெளியே செல்லும் மனிதர்கள் கழுதைகளாக மாறிவிடுவர் என்பதும் இந்நகர எல்லைக்குள் ராப் பொழுதுகளில் ஆடு, மாடுகளைக் கொன்று புசிக்கும், நெருப்பைக் கக்கும் ஓநாய்கள் உலவியதாகவும் மக்கள் நம்பினர்.

ஊரின் மையத்தில் இருக்கும் சந்தையில் ஒரு மிகப்பெரிய சபிக்கப் பட்ட மரம் இருந்ததாகவும் ஒரு கதை உலவுகிறது. ஒரு சக்தி வாய்ந்த மந்திரவதியால் சபிக்கப்பட்ட அம்மரத்தைத் தொட்டவர்கள் வாழ்வு நாசமாகும் என்றும் விரைவில் நோய்வாய்ப்பட்டு இறந்து போவர் என்றும் நம்பப்பட்டது. குறிப்பாக வெளியூர்காரர்கள் அந்த மரத்தின் நிழலைத் தொடுவதும் பெரும் தீங்கை விளைவிக்கக் கூடும் என்பது போன்ற கதைகள் உலா வந்தன.

தங்களது இறை நம்பிக்கைகளுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்ட ஒரு மந்திரவாதி மிகக் கொடூரமான முறையில் கொல்லப் பட்டிருக்கிறான். துர் மரணம் அடைந்த அவன் ‘ஜின்’னாக மாறி இந்நகரில் இன்றும் உலா வருவதாக நம்பப்படுகிறது. அப் பழம் பெரும் கோட்டை புதுப்பிக்கப் பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் பகலில் புத்தம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்புகள் இரவு நேரத்தில் தொடர்ந்து சிதைக்கப் படுவதாகத் தொழிலாளர்கள் புலம்பித் தள்ளியாதாக இன்றும் காற்றில் கதைகள் அலைந்து கொண்டிருக்கின்றன.

அர்த்த ராத்திரியில் மாட்டின் காம்புகளில் இருந்து கண்ணுக்குத் தெரியாத அருவத்தால் பால் பீய்ச்சப் படும் ஒலி கேட்பது, ஆங்காங்கே நள்ளிரவில் தீப்பிழம்புகள் பற்றியெரிவது, நடு ஜாமத்தில் கல் மழை பொழிவது, வீடுகளிலும் தோப்புகளிலும் இருக்கும் பொருட்கள் உருட்டிவிடப் பட்டுக் கலைந்து கிடப்பது எனப் பஹலாவில் நிகழ்ந்த அமானுஷ்மான விஷயங்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.




இப்பொழுது கேட்பதற்குச் சிறு பிள்ளைத் தனமாக இருந்தாலும் அந்தக் காலத்தில் இருட்டிய பிறகு வீட்டை விட்டுத் தனியே வெளியே செல்லத் துணிவோரைக் கட்டிப் போட இக் கதைகள் பெருமளவில் உதவியிருந்திருக்க வேண்டும். குறிப்பாகக் குழந்தைகளையும், பெண்களையும். அது மட்டுமின்றி “பஹலா” வைத் தாக்கத் திட்டமிட்ட எதிகளின் மனோ திடத்தைக் குறைப்பதற்கும் இக்கதைகள் பெருமளவில் கைகொடுத்திருக்கக் கூடும்.

யாரோ ஒரு தாத்தனோ, பாட்டியோ கிளப்பி விட்ட பேய்க்கதையொன்று வைரலாகிவிட ஆளாளுக்குத் தங்கள் கற்பனைக் குதிரையை விரட்டு விரட்டென விரட்ட “பஹலா” சுவையான மந்திரக் கதைகள் உலாவும் மர்மதேசமாகிப் போயிருக்கிறதென்பதே இப் பெரியார் தாசனின் அனுமானம்.

உண்மையில் பஹலாவின் வலிமை அதன் மண்ணில் இருந்தும் நீரில் இருந்தும் பிறந்தது. பஹலாவின் மட்பாண்டங்கள் அரபு தேசத்தில் மிகப் புகழ் பெற்றவை. வெறும் மண்ணை நீரில் குழைத்து கற்களை அடுக்கிக் கட்டப்பட்ட பல நூற்றாண்டுகளைக் கடந்து நிற்கும் வீடுகளும், கோட்டையும், மதிற் சுவர்களும் இம் மண்ணின் பெருமையை இன்றும் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.

பஹலாவின் “அல் முதர்” ஹம்ராவின் “அல் சர்பூக்” மற்றும் மஸ்கட்டின் “ அல் ஹஜாரியா” என விதவிதமான மண் வகைகளைப் பயன்படுத்திக் குடிநீர்ப் பானைகள், சமையல் பாத்திரங்கள், பேரீட்சை மற்றும் இதர உணவுப் பொருட்களைப் பத்திரப் படுத்தி வைக்கும் கலங்கள், அலங்காரப் பொம்மைகள், தட்டுகள், நினைவுப் பரிசுகள், சாம்பிராணித் தூபங்கள் என வித வித மான மட்பாண்டங்கள் தயாரிக்கப்பட்டு அமீரகம், கத்தார், சவுதி அரேபியா எனப் பல அரபு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இன்றும் இங்கு இயங்கி வரும் ஒரு புராதான மட்பாண்ட தொழிற்கூடம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கள் வரலாற்றையும் செயல்பாடுகளையும் ஒரு சிறு கட்டணம் வாங்கிக் கொண்டு செயல்முறையில் விளக்குகின்றது. மேலும் நீங்கள் ஒரு ரியால் செலுத்தினால் அந்நிறுவனத்தினர் உங்களுக்கும் ஒரு சிறு பானை வனையும் அனுவத்தை உருவாக்கிக் கொடுக்கின்றனர். பஹலாவைக் கடக்கும் சுற்றுலாப் பயணிகள் தவற விடக் கூடாத அனுபவம் இது.
மற்றபடி பிற ஓமானி நகரங்களைப் போலவே பஹலாவின் பழமையான சூக்கும், 16 ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்ட மிகப் புகழ்பெற்ற பெரிய மசூதியும் இந்நகரின் முக்கியத் தலங்களாகும்.
இவற்றையெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு பஹலாவில் இருக்கும் எண்ணற்ற பண்ணை வீடுகளில் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஓரிரவு அங்கு தங்கலைப் போட்டு அரேபிய உணவு, சுடுவான், இசை, சீஷா, நீச்சல் குளம் எனக் களித்துக் கிடந்தால் நிஸ்வாவின் பயணம் கிட்டத்தட்ட முழுமையடைந்து விடும்.





இப்படிப் பஹலாவின் கதையானது அம்மண்ணைச் சலித்தெடுத்து, அந்நிலத்தில் ஊறி வரும் நீரில் குழைத்து, கற்களைகையும், கதைகளயும் அடுக்கி, அவை சரிந்து விடாது நிற்க மண்பூச்சுப் பூசி தங்கள் தொழில் நுட்பத்தால் எல்லைகள் கடந்து வர்த்தகத்தை விஸ்தரித்துப் பொருள் ஈட்டிப் பெரும் புகழ் பெற்று இன்றும் வாழும் ஒரு மூவாயிரம் ஆண்டு கால நெடிய வரலாறு.

நல்ல விருந்திற்குப் பிறகு ஆழ்ந்த நித்திரையில் வீழ்ந்து எழுந்தால் மறுநாள் காலை உங்களை “ஜிப்ரீன்” என்ற மற்றொரு அழகிய கோட்டைக்கு அழைத்துச் செல்வதாகத் திட்டம்.

பதினைந்தாவது அத்தியாயமான "மயக்கும் ஜிப்ரீன்” என்ற கோட்டைப் புராணத்துடன் இக் குறும் பயணம் ஒரு முடிவிற்கு வரப் போவதை முன்னறிவித்து நவம்பர் மாத “வீண்மீன்” மூலம் உங்களைச் சந்திக்கும் வரை உங்களிடம் இருந்து மீண்டும் ஒரு முறை தற்காலிகமாக விடை பெறுகிறேன்.

அதுவரை பஹலாவின் மந்திரக் கதைகளுக்குள் ஆழ்ந்து உங்கள் பால்யத்தில் நீங்கள் கடந்து வந்த புனை சுருட்டுக்களை மீட்டெடுக்க முயற்சி செய்யுமாறு வேண்டுகிறேன். அம்முயற்சி சர்வ நிச்சயமாக உங்களைக் குதூகலப் படுத்தும். உங்கள் நினைவிற்கு வரும் சிறந்த கதைகளை விண்மீனுக்கு அனுப்பி நீங்கள் பெற்ற இன்பத்தை பிறருக்கும் பகிர்ந்திட வேண்டுகிறேன்!!!

(தொடரும்)

# சிலோன் வைத்தியர்

### முரா. இரக்ஷன் கிருத்திக்



அன்னைக்கு பள்ளிக்கூடம் லீவுதான். இருந்தாலும் கூட, வீட்லயே அடைஞ்சு கிடந்தேன். காலை பலகாரத்த தின்ன குடுத்துட்டு "வெய்யிலுல திரியாம, பொறுப்பா வீட்டுல இருந்து புஸ்தகத்த எடுத்து வாசிக்கணும்" என்கிற கட்டுப்பாட்டோடதான் வேலைக்கு போயிருந்தாள் அம்மா. ஏகப்பட்ட யோசனைக்கு பெறவு புத்தகத்த கையிலதான் எடுத்திருந்தேன்.

"மூர்த்தி, மூர்த்தி..." என்றவாறு வீட்டுக்குள்ள நுழைஞ்சான் செந்தில். நான் என்னானு அவனை ஏறிட்டதும் "எங்க தாத்தாவுக்கு நெறய ஓந்தான் (ஓணான்) வேணுமாம். புடிச்சு கொடுத்தா, ஓந்தான் ஒன்னுக்கு எட்டணா தரேன்னு சொல்லுதாரு" என்றான்.

செந்திலோட தாத்தா ஒரு நாட்டு வைத்தியர். எங்க சுத்து வட்டாரத்துல வேதக்கண்ணு வைத்தியருன்னா ஓரளவுக்கு எல்லாருக்கும் தெரியும்தான். அவரது வைத்தியத்தின் தனித்தன்மையே ஓந்தானை பிடிச்சுட்டு வந்து, அதன் தலையை வெட்டி, தோல உரிச்சு, குடல நீக்கி சுத்தம் பண்ணி இஞ்சி, பூண்டு, மிளகு சேத்து உரலில் போட்டு குத்தி, சாறு பிழிஞ்சு, அந்த சாத்த நாட்டுச் சாரயத்துல கலந்து குடிக்கக் கொடுப்பார். சாறு பிழிஞ்சேடுத்தச் சக்கையைத் தட்டி வடையாகவோ, வறுவல் போலவோ செஞ்சித் தின்னக் கொடுப்பார். குடிப் பழக்கம் இல்லாதவங்களுக்கு இலேகியமாக கூட செஞ்சிக் கொடுப்பார்.

"குறுக்கு, கை, கால் குடைச்சல்னு எப்பிடிப்பட்ட சீக்குக்கும் இது தான் ஒசத்தியான மருந்து." அப்படின்னும் சொல்லிக்குவாரு. தினமும் அசலூர்ல இருந்து முட்டி வலி, குறுக்கு வலி, கை, கால் உளைச்சல், குடைச்சல்னு ஏதாவது ஒரு தீராத பிரச்சனையைச் சொல்லிக்கிட்டு வேதக்கண்ணுவ தேடி ஊருக்குள்ள ஆளுங்க வந்துகிட்டேதான் இருப்பாங்க.

விண்மீன் மின்னிதழ்

"மண்ணெண்ண வைத்தியன்கிட்ட மருந்து சாப்புட்ட பெறவு குறுக்கு உளைச்சல் செத்த தேவல போல இருக்கு" அப்படின்னு ஊர்க்காரங்க சொல்லக் கேட்டிருக்கேன். சின்ன குழந்தயளுக்கு காய்ச்சல், சளி அதிகமாக இருக்கையில செவுலுல கோலிக்குண்டுபோல வீக்கம் கண்டு இருக்கும், அத 'எச்சி' -ன்னு சொல்லுவாங்க. அப்பிடி இருந்தா, மண்ணெண்ணைய கையில தொட்டு செவுலுல தடவி விடுவார். தினமும், இப்பிடி எச்சி கண்ட பிள்ளையளோட தாய்மாருவ, அவுகளது பிள்ளையள கொண்டாந்து தடவிட்டு போவாங்க. இப்பெல்லாம், இந்த மாதிரி வைத்தியத்த யாரும் எட்டிக்கூட பாக்கதுல்ல. காய்ச்சல், சளிக்கு இங்கிலீசு வைத்திய முறையில ஊசிக் குத்துறதாலயே இந்த வீக்கமும் அமுங்கிப் போயிருது.

தொண்ணூறு வரைக்கும் இந்த வைத்தியம் எடுபட்டுச்சு. இதனாலயே வேதக்கண்ணுவ தேடிக்கிட்டு ஊருக்குள் புது ஆளுங்க வர்றப்ப... "மண்ணெண்ணெய் வைத்தியர் வூடு எங்கன இருக்கு?" அப்படின்னு கேக்குற ஆளுங்களும் உண்டும் " சிலோன் வைத்தியர் வூடு எது?" -னும் கேட்டும் வருவர். வைத்திய தொழிலால் வேதக்கண்ணுவிடம் பண ஓட்டம் கொஞ்சம் கூடவே இருந்து, நிறைய பேத்துக்கு வட்டிக்கு விட்டுருந்தாரு. ஊருல மத்தவய்ங்க ஐந்து வட்டி, பத்து வட்டி, மீட்டர் வட்டின்னு வாங்குனாலும், இவர் மூனு பைசா

வட்டிக்குத்தான் கொடுத்தாரு. அதோடு மாசம் மாசம் வட்டியக் கேட்டு கடனாளியோட வாசப் படியேறி வந்து நின்னுகிட்டு தொந்தரவு தரமாட்டார். அசலத் திருப்பிக் கொடுக்கையில ஒன்னு ரெண்டு மாச வட்டியைக் எறக்கிக் கொடுத்தாலும் மனசு கோணாது ஏத்துக்கிடுவாருதான்.

ஒரு தடவ எங்க அப்பாகூடஅவருட்ட வட்டிக்கு காசு வாங்கிட்டு வட்டியோட அசலையும் திருப்பிக் குடுத்தா நெனப்பு இருக்கு. வேதக்கண்ணுவுக்கு வேதமுத்துன்னு சொல்லுத கூடப் பொறந்த சகோதரர் ஒருத்தர் இருந்தார். அவர் புனித மிக்கேல் ஆதிதூதரைக் கடவுளாக ஏத்துக்கிட்டு கும்பிட்டு வந்தார். ஊரில் அவரது வயதுக்காரர் ‘மெக்கேலு’-னும் விடலைப்பயலுக ‘மெக்கேல் தாத்தா’ அப்படின்னுதான் கூப்பிடுவாங்க.

அவரு மட்டும் தனது தம்பியைத் தேடி ஆளுங்க வர்றத பாத்துப்புட்டா போதும் “இந்த புளுகுமூட்டை பெயல இன்னும்மா ஊரு நம்புது. இந்த பொசக்கெட்ட சனங்களுக்கு எப்பதான் புத்தி வரப்போகுதுன்னு தெரியல. நான் சாவுறதுக்குல, இந்த நாயி ஊருல செருப்படிப்பட்டு, மானங்கெட்டு நிக்கத ஒரு ஒருக்காவது பாத்துரணும்னு நினைக்கேன். அது நடக்காது போலயே.” என்று ஆதங்கப் படுவார்.

“என்ன தாத்தா, கூடப்பிறந்த தம்பின்னு பாக்காம நெஞ்சிக்குள்ள இம்புட்டு வன்மத்த வச்சிருக்க?”-ன்னா. “யாரு, நானா நெஞ்சில வன்மத்த வெச்சிருக்கேன். எல்லோரும் வேதக்கண்ணுவ சிலோன் வைத்தியருன்னு கூப்பிடறதால, அவன் சிலோன்ல படிச்சிப் பட்டம் வாங்கிப் பெரிய வைத்தியனான்னு நெனச்சுக்கிட்டயளாக்கும். அவன் வைத்தியனான கதைய சொல்லுதேன், கேட்டுட்டு, புரவாட்டி பேசுங்க.” அப்படின்னு பழங்கதை ஒன்னச் சொல்லுவார்.

“நாடு விடுதலைக்கு முன்ன கொழும்புக்கு பொழப்புத் தேடி நெறய பேரு போனாங்க. அந்த சனங்களோட சனமா நாங்க அண்ணன், தம்பி ரெண்டு பேரும் போனோம். என்னையும் சேத்து, எங்களோட கொழும்புக்கு வந்தவங்க எல்லாரும் தேயிலைத் தோட்டத்துலதான் வேலை பாத்தோம். இந்த தேயிலைத் தோட்டத்து வேலையும் அங்கே போனதுமே எங்களுக்குச் சுலபத்துல கெடச்சிடல. வெகு சிரமத்துக்கு பெறவு தான் கிடைச்சது. வேல கெடைக்க மட்டும் சோத்துக்கே திண்டாடினோம்.

அந்த நேரத்துல வேதக்கண்ணுவும் இன்னும் சில பேரு சேந்துகிட்டு களிமண்ணை சின்ன சின்ன உருண்டைகளாக பண்ணி வச்சுக்கிட்டு அத இலேகியம்னு சொல்லி, தன்னை பெரிய வைத்தியனப்போல காட்டிக்கிட்டு, மேலுக்கு முடியாம வர்ற சிங்கிள சனங்களுக்கு மருந்து குடுக்கத் தொடங்கிட்டாங்க. தெய்வ சித்தமா, அவங்க மருந்து குடுத்த ஆட்களுக்கு ஒன்னும் ஆகல, எல்லாருக்கும் சொவமாயிட்டு. அந்த சனங்களும் இவங்களப் பெரிய வைத்தியன்னு நம்ப ஆரம்பிச்சிட்டாங்க. சனங்க கும்பல் கும்பலா வந்து வைத்தியம் பாத்துட்டும் போனாங்க. இதுல, சாமர்த்தியமா செஞ்ச காரியம் என்னன்னா, களிமண் உருண்டைய, மாத்திரைன்னு சொல்லிக் கொடுத்துட்டு, நாக்குல படாம விழுங்கணும்னு சொல்லிடுவாங்க. அந்த அப்பாவி சனங்களும் இவங்க சொன்னத நம்பி அப்படியே விழுங்கிடும்ங்க. பொதுவாகவே சீக்கு கண்ட மனுசங்களுக்கு மருந்து, மாத்திரையவிட நாம குணமாயிடுவோம்ங்கிற நம்பிக்கை இருந்தாலே போதும் எப்பேர்ப்பட்ட சீக்கும் குணமாயிடும். மனுச அங்கத்துல எதாச்சும் பாதிப்பு இல்லாம இருக்குற பட்சத்துலகூட பருவ மாற்றத்தால திடுதிப்புன்னு மேலுக்கு முடியாம போவலாம். இந்த மாதிரி, ஆகையில மருந்து எடுத்துகிட்டாலும் சரி, எடுக்காட்டியும் சரி மனுஷ ஒடம்பு தன்னிச்சையாகவே சரி செஞ்சுக்கிடும். இதையே அவங்களுக்கு சாதகமாக்கிக்கிட்டு மக்களுட்ட பணத்தைக் கறக்க ஆரம்பிச்சிட்டாங்க. பெறவாட்டி எல்லாருக்கும் தேயிலைத் தோட்டத்துல வேலைக் கெடச்சது. உடன, இவனோட சேந்தவங்க எல்லாரும் வைத்திய தொழில விட்டுட்டு தோட்ட வேலைக்கு போயிட்டாங்க. இவன் மட்டும் வைத்திய தொழில்ல நல்ல வருமானம் வர்றதப் பாத்துட்டு தோட்ட வேலைக்கு வரமாட்டேன்னு சொல்லிட்டான். வயித்து பசிக்கு பொய் சொன்னதுக்குகூட மாப்பு குடுக்கலாம். ஆனா, இம்புட்டு காலமும் ஏமாத்துறதயே தொழிலா பண்ணிட்டு இருக்கான் பாரு, அந்த ஒன்னுக்குதான் என்னால அவனுக்கு மாப்பு கொடுக்க முடியல” என்பார்.

எது எப்படியோ இப்போதைக்கு செந்திலோட காட்டுல மழைதான். அடிக்கடி அவனது தாத்தாவோட சட்டைப் பையில இருந்து காசு களவாண்டுட்டு வந்து ஐஸ், கடல மிட்டாய், பொறி உருண்ட, உப்புக்கடலன்னு பலகாரங்கள் வாங்கித் தின்னுவான். பள்ளியில இருந்து சுற்றுலாப் போவதாக சொன்னால் வீட்டுல காசு வாங்காதே முதல் ஆளாக கொடுத்துருவான்.

ஒரு தடவ எங்கப் பள்ளியில இருந்து சுற்றுப்பயணம் செல்வதாக சொன்னாங்க. “வர விருப்பம் உள்ளவங்க, அவரவர் வீட்டுலருந்து இருவது ரூவா வாங்கிட்டு வாங்க” -ன்னு சொன்னாங்க. மறுநாளே செந்தில் அவனுடைய வீட்டுல பணம் வாங்கியாந்து

சுத்துப்பயணத்துக்கு கொடுத்துட்டான். நான், எனது வீட்டுல பணம் கேட்டதுக்கு "சுத்துப்பயணம் போவதுக்கு, உனக்கு நல்ல துணிமணி இல்ல. நீ சுத்துப்பயணம் போகணும்னா, புது சட்டை, டவுசர் வாங்கணும், எனக்கு நாப்பது ரூவா செலவாகும் அதனாலே, போவ வேணாம்" என்று அம்மா சொல்லிட்டார். அப்போதெல்லாம் வேதக்கண்ணுவுக்கு பேரனா பொறந்திருக்கலாமென்று தோன்றும். அடிக்கடிக்கு செந்தில் என்னைக் கல்யாணிப்புரம் சாங்கோ டெண்ட் கொட்டகைக்கு படம் பார்ப்பதற்கு அழைச்சிட்டு போவான். எங்கள் ஊரான ஒத்தவேம்புல இருந்து கல்யாணிப்புரம் நான்கு கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். என்னை மொத மொதல பேருந்துல அழைச்சுட்டு போனது அவன்தான். கல்யாணிப்புரம் ஆயான் கிழப்பு கடைக்கு (ஹோட்டல்) அழைச்சுட்டு போயி இட்லி, தோசை, ஆப்பம் வாங்கித் தருவான். எங்க சுற்று வட்டாரத்தில் ஆயான் கிழப்பு கடை சாம்பாருக்கு இணையான சாம்பார் இல்லன்னு சாப்பிட்டவங்க ஒய்யாரமாக பேசிக்கிடுவாங்க. நான் ரெண்டு, மூனு தடவைக்கு மேல செந்திலோட தயவுனால சாப்புட்டு இருக்கேன். சாம்பார் பிரமாதமாக இருந்தது. ஆனால், எனக்கு என்னவோ முந்தின நாள் செஞ்ச சாம்பார மறு நாள் சூடு பண்ணித் தந்ததப் போலதான் புளிப்பாக இருந்தது. ஆனாலும், சுத்துப்பட்டு ஊர்க்காரங்க பேருந்து ஏறிக் கல்யாணிப்புரம் வந்து ரெண்டு இட்லிய வாங்கி எலையில வச்சுகிட்டு ஒரு வாளிச் சாம்பாரையும் காலிப் பண்ணிடுவாங்க. ஆயானும் சளைக்காது அண்டாவுல இருக்கும் சாம்பார கோரி (மொண்டு) வந்து வச்சுக்கிட்டே இருப்பார். ஒருக்காலும், மூஞ்சிய கோண மாட்டார். வீட்டுக்கு தெரியாம செந்திலோட சினிமாவுக்கு போயிட்டு வந்தது அம்மாவுக்கு தெரிந்து விளக்குமாறால அடி வாங்கின அனுபவமும் உண்டு.

ஒரு தரம் செந்திலின் தாத்தா எங்க ஊர்ல இருந்து ஒரு அஞ்சாறு கிலோ மீட்டர் தொலவுல இருந்த ஊர்ல வயசுக்கு வந்த இளம் பெண் ஒருத்திக்கு கண்டிருந்த நோய் குணமாக வேண்டி மருந்து கொடுத்துட்டு வந்துள்ளார். மறுநாளும் மருந்து கொடுப்பதற்கு போனார். அவர் ஊர் நுழைவு வாயலை சேர்ந்தப்போ ஊருக்குள்ள சங்கு ஊதும் சத்தம் கேட்டிருக்கு. உடனே "யாரு செத்துப்போனா?" என்று எதிரே வந்த ஒருத்தர வழிமறிச்சுக் கேட்டுருக்காரு. அவரு இவர் முந்தின நாள் மருந்து குடுத்துட்டு வந்த அந்த பொண்ணோட பேர சொல்ல வேதக்கண்ணுக்கு திக்கென்று ஆயிட்டு. அப்படியே ஊருக்குத் திரும்பி வந்துட்டார். வந்தவர், வீட்டின் முன் பக்கக் கதவை வெளிப்பக்கமாக பூட்டிட்டு பொறவாசல் வழியே வீட்டுக்குள்ள போயி உள் கொண்டியைப் போட்டுட்டு படுத்துக் கிடந்தார். ஒரு வாரத்துக்கு வீட்ட விட்டு வெளில காலடி வைக்கல. அவசிய தேவைக்குக்கூட ராத்திரி நேரத்துலதான் வெளியே சுத்தினார்.

ஓந்தான் பிடிச்சுக் கொடுத்தா காசு கெடைக்கும்ங்குற ஆசையில அம்மாவின் பேச்சைக் கண்டுகிடக்காம ரெண்டு கண்ணிக் குச்சிய தூக்கிக்கிட்டு செந்திலோடு ஓந்தான் வேட்டைக்குக் கிளம்பிட்டேன்.

இதுக்கு முந்தியும் ஓந்தான் மூலமா காசு பாக்கிற ஒத்த வழியையும் சொல்லிக் குடுத்திருக்கான் செந்தில். அதாவது, "ஓந்தான அடிச்சுக் கொன்னு புதைச்சுட்டு மூனு நாள் கழிச்சு போயித் தோண்டிப் பாத்தா துட்டு கெடைக்கும்" என்றான். நான் எப்படி துட்டு வரும்னு கேட்டதுக்கு "சீதையை இராவணன் தூக்கிட்டு போனதும், இராமர், சீதையை தேடிக் காடு, மேடெல்லாம் சுத்தித் திரிஞ்சப்போ ராமருக்கு தண்ணித் தாகம் எடுத்திருக்கு, அப்ப வழியில ஒரு ஓந்தானைப் பாத்த ராமர் அதுகிட்ட தண்ணீர் கேட்டிருக்காரு. அந்த ஓந்தான் இராமருக்கு மோண்டு கொடுத்திருக்கு. அடுத்து அணில சந்திச்சு தண்ணிக் கேட்டிருக்காரு. அது ராமருக்கு இளநீர் பறிச்சு கொடுத்திருக்கு. இராமர் அணிலோட ஒத்தாசைய பாராட்டி அதனோட முதுவு மேல பாசமாக வருடிக் கொடுத்துட்டு போனாராம். அதுதான் அணிலோட முதுவுல மூனு கோடு இருக்குதாம்" என்றவன் "ஓந்தான புதைச்ச இடத்தில இராமரே காசு வைப்பாரு" என்றான். வெளியூருல இருக்க செந்திலோட அத்தை மகன் செஞ்சிப் பாத்தப்ப அவனுக்கு இருபது காசு கெடச்சதாட்டு செந்தில் சொன்னான்.

நானும் அவனும் ஒண்ணாச் சேந்து ஒத்த ஓந்தானைப் புடிச்சு கொன்னு பொதச்சுட்டுப் போனோம். மூனு நாள் தள்ளி வந்து ஓந்தானைப் பொதச்ச எடத்துல தோண்டிப் பாத்தோம். ஓந்தான் மட்டுமே அழுகின நிலையில இருந்துச்சு, ஒத்த காசில்ல. காசு இல்லையே? என்றதுக்கு "நாம ஓந்தானக் கொன்னு பொதச்ச விஷயத்த சித்திரக்குப்தன் இன்னும் இராமருக்கு கணக்கு சொல்லியிருக்க மாட்டார்ன்னு நினைக்கேன்" என்றான். எங்க போயி இதையெல்லாம் தெரிஞ்சிட்டு வருவான்னு தெரியாது. மாசத்துக்கு ஒருக்காச் சிங்காரத் தோப்புல இருக்க அவனோட அத்தை வீட்டுக்குப் போயிட்டு வருவான். அவ்வாறு போயிட்டு வரும்போதெல்லாம் இப்புடி எதையாவது புதுசு புதுசா அளந்து விடுவான்.

ஓந்தானைக் கொன்னு பொதச்ச இடத்தில் காசு இல்லாம போனது. செந்தில் என்னை விட்டுட்டு தனியா போயி காசை எடுத்துட்டு எங்கிட்ட நாடகம்

ஆடுறானோ! என்ற சந்தேகம் தோணிட்டு எனக்கு. செந்தில் தானே சொன்னான், ஓந்தானை கொன்னு பொதச்சா காசு இருக்குன்னு, செந்திலோட அத்தை மவனுக்கு கிடைச்ச காசு எங்களுக்கு மட்டும் எப்புடி இல்லாம போச்சு? என்கிற கேள்வி மனசுக்குள்ள உறுத்திக்கிட்டே இருந்து. அந்தக் கேள்விதான் எனக்குள்ள இப்படி ஒரு வஞ்சக எண்ணத்தையும் விதைச்சு விட்டது.

மறுநாளு காலயில நான் சீமைக்கருவேல முள் காட்டுக்கு மலம் கழிக்க போனேன். தொண்ணூறு சமயத்தில் எங்க ஊருல எல்லாரும் திறந்தநிலை மலம் கழிப்பைத்தான் செஞ்சிட்டு வந்தோம். நான் கழிச்சுப்புட்டு பூனை மலம் கழிச்சுப்புட்டு அதை மண்ணு அள்ளி போட்டு மூடிட்டு போறதுபோல நானும் எனது மலத்தை மூடி வச்சிட்டு வீட்டுக்கு கிளம்பலாம்னு நெனச்சப்ப ஒரு பொல்லாத புத்தி தோணுச்சு. அதைச் செஞ்சு முடிக்க வேண்டி, ஒத்தப்படியா ஏழு மணல் திட்டை வரிசையா குவிச்சேன். ஆக, மொத்தம் எட்டு மணல் திட்டுகள் உருவானது. அத ஒத்தப்படியா முற்றிலும் போலியாக இன்னும் ஒரு வரிசை மணல் திட்டுகளை உண்டாக்கினேன்.

அதுக்கப்பறம், வீட்டுக்குப் போயி கால் அலாம்பிகிட்டு செந்திலை தேடி அவன் வீட்டுக்கு போனேன். “கந்தசாமி தோட்டத்துல நிலக்கடல புடுங்குறாங்க. அங்க போனா கடலச் சாப்புடலாம்.” என்று சொல்லி அவனுக்குள் கடலை தின்னணும்கிற நினைப்ப உண்டாக்கி அழைச்சிட்டுப் போனேன். தந்திரமாக நான் மலம் கழிச்சு மூடி வெச்சிட்டுப் போயிருந்த அதே வழியில ஒன்னும் தெரியாத மாதிரி அழைச்சிட்டுப் போனேன். அவன் நடக்கப் போறத அறியாம என் கூடவே வந்துக்கிட்டு இருந்தான். சம்பவ இடம் வந்ததும், நான் கூட்டிவெச்சிருந்த மணல் திட்டை காட்டி “யாரோ மணலக் குவியலா கொட்டி வச்சிட்டு போயிருக்காக, நாம கலைச்சுப் போட்டுருவோமா?” என்றேன். அவன் உசுப்போட “சரி” என்றான். எறக்குறைய நான் நெனச்சது நடந்து போச்சுங்குற சந்தோசத்துல, புளுகு மணல் திட்டை காட்டி “இங்கிட்டு இருக்கற மணல் திட்ட நான் கலைக்கேன். நீ அங்கிட்டு இருக்கிற மணல் திட்ட கலைச்சுப்போடு.” என்றேன். செந்தில் எனது சூழ்ச்சம் தெரியாததால மறுக்காம அந்த மணல் திட்டின் கிட்ட போயி ஒவ்வொன்னா கலைக்க தொடங்கினான். நானும் எனது மணல் திட்டை ஒவ்வொன்னா கலைச்சேன். செந்தில் அவனது திட்டுகளை வேக வேகமாக களைத்துக்கொண்டிருந்தான். அந்த கடைசி மணல் திட்டை அழிப்பதற்காக அதை நோக்கி பயங்கர ஆக்ரோசமாக துள்ளி குதித்தான். நான் விபரீதத்தை இமைக்காம பாத்துக்கிட்டு இருந்தேன்.

கால் வச்ச வேகத்துல தடால்னு சறுக்கி விழுந்தான். அவன் உடம்பு பூராம் பீ அப்பிகிடுச்சு. அதைப் பாத்து நான் விழுந்து விழுந்து சிரிச்சேன். அவன் அழுதுகிட்டே வீட்டப் பாத்து ஓட்டம் புடிச்சான்.

என் அம்மா கையில் துடைப்பத்தை வச்சுகிட்டு ஊரெல்லாம் தேடுதான்னு கொக்கலி மண்டையன் வந்து சொன்னான்.

அன்னிக்கு பகல் முழுக்க நான் வீட்டுக்குத் போகல. வேலைய முடிச்சுட்டு வீட்டுக்குத் திரும்பி இருந்த அப்பா என்னைக் காணாதது குறித்து அம்மாவிடம் எம்புள்ளைய எங்கேன்னு விசாரிச்சார், நான் பண்ண கூத்தையெல்லாம் சொல்லிப்புட்டு “நான் அடிப்பேன்னு பயந்துட்டு இன்னும் வீட்டுக்கு வரல” என்றார் அம்மா. இரவு ஆனதால, வேற வழி கெடக்காம வீட்டுக்கு திரும்பிட்டேன் நான். வீட்டு வாசப்படியில காலெடுத்து வெச்சப்போ… “ சின்ன வயதில் நான் அவனது தந்தையை பீயில தள்ளி உருட்டினேன். இப்ப, என் மகன் அவனோட மகன பீயில தள்ளி உருட்டியிருக்கான். இது அந்தப் பய அப்பனுக்கு புரிஞ்சிருக்கும். சின்ன புள்ளையன்னா, அப்டித்தான் இருப்பாங்கன்னு. நீ என் மவன அடிக்க ஊரு முழுக்க தேடித் திரிஞ்சிருக்கே. காலையில போனவன் இன்னும் சோறு திங்க வரலேங்குறே. புள்ளய தேடாம இருக்க? உன்னை என்ன சொல்லுறதுன்னு தெரியல?” என்று ஏசிட்டு என்னை தேடுவதற்கு கிளம்பினார்.

அப்போ, நா வீட்டுக்குள்ள பைய பூந்தத பாத்துட்டு… “ம்… புள்ள வந்துட்டான். இப்ப ஒன்னும் சொல்லாத. போயி சோத்த குடு” என்றார். எங்கிட்ட ஒன்னுமே பேசாம வந்து சோறு வச்சுத் தந்தாரு அம்மா. நான் சோத்தை தின்னுபுட்டு படுக்கைக்குப் போனேன். பாத்திரத்த அலம்பி வச்சுட்டு, என் எடத்துல வந்து படுத்துக்கிட்டு “நீ அந்தப் பையன் மேல பீய அள்ளி வீசல, எம்மேலதான் வீசிட்ட” என்றார்.

“….”

“செந்திலோட அம்மா என்னைப் பாத்து என்ன புள்ள வளர்த்திருக்கன்னு சொல்லுதப்ப, எனக்கு எப்படி இருந்துச்சு தெரியுமா? நானே அந்த பீயில புரண்ட மாதி இருந்துச்சு” என்றார். என்னால, அம்மாவிடம் ஒன்னும் பேச முடியல.

அந்த சம்பவத்துக்குப் பிறகு செந்தில் ஒரு வாரமா எங்கிட்ட பேசல. அதுக்கப்பறம், இன்னிக்குதான் என்னைய பாக்க வந்திருக்கான். நெடு நாள் கழிச்சு நாங்க ரெண்டு பேரும் பழையபடி ஒண்ணா சேந்த சந்தோசத்துல அம்மா சொன்னதக் காத்துல பறக்க விட்டுட்டு அவனோட போனேன்.

# வட்டம்

**அப்பு சிவா**



**வெ**ளிய அங்கயே நில்லு, புகுந்த வீடு வரும்போது முதல்ல வலது கால் எடுத்து வைக்கணும்னுகூட தெரியாதா உனக்கு?” என்ற குரலைக் கேட்டு அரண்டுபோனாள் கவிதா. கவிதாவைச் சுற்றியிருந்த, இதுவரை நிஜ சந்தோஷத்தில் இருந்த, கூடவே வந்த உறவினர்கள் பயத்தை மறைத்துக்கொண்டு அசட்டுச்சிரிப்பு சிரித்தனர். உள்ளே மகாராணி போல நாற்காலியில் உட்கார்ந்தபடி சத்தமிட்டது மாமியார் கமலா.

இப்படியாகத்தான் ஆரம்பித்தது கவிதாவின் புகுந்தவீடு படலம். வீட்டில் திருமண ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தபோது முதலில் வெட்கம் வந்தது. பயம் என்பது சுத்தமாக இல்லை. கூட இருந்த தோழிகள் இன்னமும் அதையும் இதையும் கிண்டலாக பேசி வெட்கத்தை அதிகரிக்கவே செய்தனர். ஊரில் நடக்காத விஷயமா நடக்கப்போகிறது என்று கவிதாவுக்கு கோபம் கூட வந்தது. வாசலில் அதிகாலை கோலம் போடச்சென்றால்கூட, யாருமே இல்லை என்றாலும்கூட வெட்கத்தையும், சிறு புன்சிரிப்பையும் முகம் இயல்பாக சுவீகரித்துக்கொண்டது.

பெரியவர்கள்தான் பயத்தை சிறுகச் சிறுக மனதில் புகுத்தியது. கணவன் வீட்டில் எப்படி நடந்து கொள்ளவேண்டும், என்ன என்ன சங்கடங்கள் வரும், அதையெல்லாம் எப்படி முகம் சுளிக்காமல் சமாளிக்கவேண்டும் என்றெல்லாம் ஓயாமல் பாடம் எடுத்தனர். மெல்லமெல்ல பயம் உருவாகியது. மாமியாரைப் பற்றிய உருவகங்கள் கேள்விபட்டு கொஞ்சநஞ்சம் இருந்த துணிச்சலும் கவிதாவுக்குகாணாமல் போயிற்று. கணவன் பாபுவின் அம்மா கமலா சரியான சிடுமூஞ்சி என சொல்லி வைத்திருந்தார்கள். வயதானாலும், சரியாக நடக்கமுடியவில்லை என்றாலும் அவரது திமிர் மட்டும் குறையாமல் இருக்குமாம்.

சமயங்களில் பாபு ‘என்ன டிரஸ் எடுக்க வேண்டும், எந்த கல்யாண மண்டபம், என்ன மாதிரியான உணவு வகைகள்’ என்பதை சாக்காக வைத்து வீட்டுக்கு ஃபோன் செய்வான். வீட்டில் அப்பாவுடன், அம்மாவுடன் பேசிவிட்டு சிறிதுநேரம் ஃபோனை வைக்காமல் தயங்குவான். அதைப்புரிந்து கவிதாவிடம் ஒருசில நிமிடங்கள் ரிஸீவரைக் கொடுப்பார்கள். அப்போதும் சுற்றியே நிற்பார்கள் ஆதலால் வெறுமனே ‘உம்’ கொட்டிக் கேட்டுக்கொள்வாள் கவிதா. பாபுவின் தந்தை சிறு வயதிலேயே தவறிவிட, தனி ஆளாக பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கியவர் தன் அம்மா எனவும் அதனால் சற்றே முரட்டுச் சுபாவம் கொண்டவர் எனவும், ஆனாலும் குணத்தில் தங்கம் எனவும் அவன்தான் சொல்லியிருந்தான். அந்த ஒரு விஷயம் அவர் மேல் மரியாதை ஏற்பட காரணமாக இருந்தது. அதனாலேயே அவர் என்ன சொன்னாலும், எப்படி கொடுமை செய்தாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும் என திருமணத்திற்கு முன்பே முடிவு செய்து வைத்திருந்தாள் கவிதா.



ஆனாலும் பொறுமையின் கடைசி எல்லைவரை ஆழம் பார்ப்பதாகவே இருந்தது கணவனின் வீடு.

பாபுவின் தம்பி கணேஷ், படிப்பு முடிந்து வேலை தேடிக்கொண்டிருப்பவன். பெரும்பாலும் சோஃபாவில், தரையில் என தூங்கியே கழிப்பான். ஆனாலும் வேலைக்குச் செல்பவன் போலவே சரியாக நேரத்துக்கு சாப்பாடு, தினம் இரு உடைகள் என அழிச்சாட்டியம் செய்வான். வீட்டில் ஒரு வேலையும் செய்ய மாட்டான். சமயங்களில் கூடவே நண்பர்கள் என சிலரைக் கூட்டி வந்து வீட்டையே இரண்டு பண்ணுவான். அவர்கள் போனதும் தலைகீழாக இருக்கும் வீட்டை ஒழுங்கு செய்வதில் நாளே ஓடிவிடும். இத்தனைக்கும் துணிகளைத் துவைத்து அப்பாடாவென அயரும்போதுதான், "அண்ணி, இந்த ஒரு டிரஸ் மட்டும் அவசரம், இதையும்…" என தினமும் எதாவது தூக்கிப் போடுவான்.

பாபுவின் தங்கை தாரணி கல்லூரியில் படிப்பவள். தாவணிகள் மறைந்து கல்லூரிகளில் சுடிதார் போட ஆரம்பித்த காலம் அது. வகைவகையான சுடிதார்களை வாங்கிக் குவிப்பாள். அடிக்கடி மாற்றிப் போடுவாள். துவைத்து மாளாது. பொழுதுக்கும் டிவி, அதைவிட்டால், காதில் எதையோ மாட்டிக்கொண்டு பாட்டு என்றே காலம் கடத்துவாள். அந்த பாட்டு கேட்கும் கருவியை பிடுங்கிவிட்டால் அப்படியே மூச்சை விட்டுவிடுவாள் போலத்தோன்றும். நண்பர்களுடன் ஃபோனில் பேசும்போது மட்டும் ஊரே பார்க்கும் அளவுக்கு சிரித்துச் சிரித்துப் பேசுவாள். கவிதா அருகில் வந்துவிட்டாலோ சுவிட்ச் ஆஃப் ஆனது போல அந்தச் சிரிப்பு மறைந்துவிடும். வீட்டுக்குள் அவள் மற்றவர்களிடம் சிரித்து பேசியோ, வேலைகள் செய்தோ கவிதா பார்த்ததே இல்லை.

எதையும் பாபு காதில் போட்டுக் கொள்ளமாட்டான்.

முடிந்தவரை எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்திருந்தாள் கவிதா. ஆனால் சில நாளிலேயே தன் மனநிலையே பாதித்திருக்குமோ என குழம்பும் அளவுக்கு தான் கொடுமைகளை அனுபவிப்பதை அவளால் உணர முடிந்தது.

அனைவர் துணிகளையும் அவள் ஒருத்தியே மடிக்கவேண்டும். மாமியாருக்கு பீரோ இருந்தாலும் முக்கியமில்லாத, போடவே போடாத துணிகளை கொண்டு வந்த கவிதாவின் பீரோவில் வைக்கச்சொல்லி கட்டாயப்படுத்துவார்.

சிலநாளிலேயே அதை எடுக்கச் சொல்லி கேட்பார். வாங்கும்போது பீரோவில் வைத்து கிழித்து விட்டதாகவும், அழுக்கு செய்ததாகவும் கண்டிப்பார். வேண்டுமென்றே தோட்டத்துக்கு வெறும் காலுடன் நடந்து சென்று செம்மண் அப்பிக்கொண்டு வந்து வீடு முழுதும் தடம் பதிப்பார். கவிதாவைக் கூப்பிட்டு 'வீடு இப்படிதான் வச்சுக்கறதா' என சத்தமிடுவார். கவிதாவின் வீட்டார் வந்தாலோ அவர்களிடம் ஜென்ம விரோதி போலவும், வேண்டா விருந்தாளி போலவும் பேசுவார். கூடவே மூட்டை மூட்டையாக கவிதாவைப் பற்றிய புகார்களும் ஒலிபரப்பாகும்.

எவ்வளவு அழகாக சமைத்தாலும் அதில் கண்ணாடி லென்ஸ் வைத்து குற்றம் தேடுவார் மாமியார். அப்படித்தான் ஒருநாள் பிரியாணியை ஒரு வாய் சாப்பிட்டுவிட்டு தட்டை தூக்கி எறிந்தார்.

"என்னதான் சமைக்கிறா உன் பொண்டாட்டி? வாய்ல வைக்கமுடியலை" என்று பாபுவிடம் சத்தம்போட,

"அம்மா, இது கடையில் வாங்கி வந்தது" என்று பாபு தயங்கியபடி சொல்ல, அப்போதும் விடாமல், "கடைக்காரனும் இவளைப் போலவே சமைக்கிறான் பாரு" என்றாரே பார்க்கலாம். தலை வெடிக்கும்போல் இருந்தது கவிதாவுக்கு.

தன் படிப்பை வைத்து வேலையில் இணைந்து சற்றே நிம்மதியாக ஒதுங்கிவிடலாம் என்றால், "நீ என் ராணி, வேலைக்கு எல்லாம் போகாம ஹாயா வீட்ல இரு, நான் சம்பாதிச்சு போடுறேன்" என்று ரொமான்ஸ் பண்ணுவதாக நினைத்துக் கொண்டு அசமந்தமாக பேசுவான் பாபு.

ஒருநாள் அப்படித்தான், கவிதா மாடியில் துணி காயவைத்துவிட்டு இறங்கும்போது ஃபோனில் யாரிடமோ மாமியார் கமலா பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்து மெல்லப் படியிலேயே நிதானித்தாள்.

"வேலைக்குப் போறதா சொன்னாளாம்... ஆமா... வேலைக்குப் போனா இஷ்டத்துக்கு இருக்கலாமில்ல, பாபுகிட்டச் சொல்லிட்டேன், வேலை அதுஇதுன்னு சொன்னா அப்படியே அவங்க வீட்ல விட்ருன்னு, ஆமா... நீ சொல்றது சரிதான்... ஆள்மயக்கி போலதான் இருக்கா... சேலை கட்ற தினுசு என்னா, அந்த மேக்கப் என்னா... ஒண்ணும் சொல்றமாதிரி இல்லடி, நீ செய்ததுபோல சொந்தத்தில் கட்டியிருந்தாச் சொல் பேச்சு கேட்கும், இது ஒரு கெரகம், இங்க வந்து உசுர வாங்குது, ஒரு வேலை செய்யறதில்ல, நல்லா டிவி பாக்குது, தூங்குது, எனக்குன்னு வந்து வாச்சிருக்கு பாரு"

கோபம் உச்சம் ஏறியது கவிதாவுக்கு. மனம் விம்ம, சத்தமில்லாமல் மாடிக்குச்சென்று உட்கார்ந்து தனியே அழுதாள். ஒரு நாள் எல்லாவற்றையும் தூக்கிப்போட்டுவிட்டு சாமியாரிணி ஆகிவிடுவோம் என்றுகூட தோன்றியது.

கமல், மனிஷாகொய்ராலா நடித்து ஒரு புதிய படம் வந்ததாக விளம்பரம் பார்த்தாள். அதில் வருவதுபோல கை விரலை வைத்து மாமியார் தொண்டையில் இறக்கிவிடலாமா, அல்லது வயதான மேக்கப் போட்டு வந்து கணேஷ் முகத்தில் குத்தலாமா, கூடவே தாரிணியை தலைகீழாக தொங்கவிட்டு ஊஞ்சலாட விடலாமா என்றெல்லாம் அவள் மனதில் தோன்றியது.

பாபு வேலை விஷயமாக வெளியூர் சென்றிருந்த ஒரு நாளில் அதற்கான வாய்ப்பு கிடைத்தது. முழு வில்லியாக மாறினாள் கவிதா. அவள் முகம் மாறி சிவந்த லைட்டிங் போட்டது போல கோரமாக இருந்தது. பாபுவின் சொந்தத்தில் ஒரு திருமண நிகழ்வு. கட்டாயம் வீட்டில் ஒருவர் போயே ஆகவேண்டிய சூழல். மாமியார் கமலா போகமுடியாமல் டல்லாக இருக்க, கவிதாவை போய்வரச் சொன்னார்கள். வீட்டில் மாமியார் மட்டும் இருக்க, அவருக்கு பிடிக்காத காளான் பிரியாணியை செய்து அதனோடு சற்றே பூச்சி மருந்தைக் கலந்து வைத்தாள் கவிதா. கமலாவை கடைசியாக ஒருதடவை பார்த்துவிட்டு சாப்பிடச் சொல்லிவிட்டு, வெளியேறி ஆட்டோ பிடித்தாள்.

திருமண நிகழ்வுக்கு அரைமணிநேரம் பயணிக்க வேண்டும். வழியில் இயல்பான கவிதா விழித்து வில்லியைத் தூரத்தள்ளினாள். 'எப்படியும் போலீஸ் கேஸ் ஆகும், எந்தவகையிலாவது துப்புதுலக்கி, கண்டுபிடித்து கவிதாவை விலங்கிட்டு சாலையில் நடக்க வைத்துக் கூட்டிச்செல்வார்கள்' என்பதெல்லாம் மனத்திரையில் சினிமாவாக ஓட, பயம் பிடித்து அவசர அவசரமாக ஆட்டோவை வீட்டுக்குத் திருப்பினாள்.

அங்கே,

பிரியாணி பாத்திரம் காலியாக இருந்தது. திகீரென்று இருந்தது கவிதாவுக்கு. உள்ளே மாமியாரின் படுக்கையறைக்கு ஓடினாள். கமலா தன் படுக்கையில் இருந்து கீழே விழுந்து கிடந்தார். சுத்தமாக பேச்சு மூச்சு இல்லை. உடல் சற்றே சில்லிட்டு இருப்பதாக தோன்றியது. கவிதாவின் சப்தநாடியும் ஒடுங்கிய சமயம் அது.

படபடவென வெளியேறி ஒரு ஆட்டோ பிடித்து மருத்துவமனைக்கு கொண்டு சென்று அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தாள்.

ஒருமணிநேரம் உள்ளே சிகிச்சை நடந்தது. வெளியே கவிதாவின் முகம் இருண்டு, வாழ்க்கையே கேள்விகுறியாக தோன்றி சுழன்ற நேரம் மருத்துவர் அழைப்பதாக நர்ஸ் வந்து சொன்னார்.

“டாக்டர்…” என்று தயங்கியபடி நின்றாள் கவிதா.

“உங்களைத்தான் பாராட்டணும்மா, சரியான நேரத்தில் கொண்டுவந்து சேர்த்தீங்க, இன்னும் கொஞ்சநேரம் தாமதிச்சிருந்தா காப்பாத்தியிருக்க முடியாது. இப்போ ஓகே… அவங்க கண்முழிச்சதும் நீங்க போயி பார்க்கலாம்”

“வந்து… மருந்து, வந்து… அதாவது…” என்று கவிதா குழற…

“ஹார்ட் அட்டாக்தான்மா, மெடிசின் எடுத்துக்கணும் இனிமே, வயசாவுது இல்லையா, ஜாக்கிரதையாதான் இருக்கணும். மருந்து எல்லாம் எப்படி கொடுக்கணும்னு நர்ஸ் சொல்லுவாங்க” என்றார் அவர்.

பாபுவை தொடர்புகொள்ள முடியவில்லை. அவன் பணிபுரியும் அலுவலகத்திற்கு ஃபோன் செய்து தகவல் கொடுத்துவிட்டு திருதிருவென உட்கார்ந்திருந்தாள் கவிதா. கமலா கண் விழித்து கூப்பிடுவதாக சொன்னார்கள். பாவமாக படுத்திருந்தவர் கவிதாவின் கையை பிடித்துக்கொண்டார்.

“கவிதா…” அவ்வளவு மென்மையாக அவர் பேசி கவிதா கேட்டதே இல்லை.

“சொல்லுங்க அத்தே” பயத்துடன் பேசினாள் கவிதா.

“எப்படி எனக்கு அட்டாக் வரும்னு உடனே வந்த? என் மேல அவ்வளவு பாசமா?”

“வந்து… ஆங்… இருக்காதா அத்தே, நீங்க எனக்கு இன்னொரு அம்மா மாதிரிதானே…”

“ஆமா, நான்தான் சினிமா மாமியார் மாதிரி உங்கிட்ட நடந்துகிட்டேன். எவ்வளவு கொடுமை செய்தேன், ஆனா உன் மனசில் தோணியிருக்கு பாரு… உடனே போன வண்டியைத் திருப்பி வரணும்னு சொல்லியிருக்கு பாரு… நீ வரலைனா இந்நேரம் போட்டோவா மாறி மாலை போட்ருப்பாங்க இல்ல?”

“அச்சோ, அப்படியெல்லாம் பேசாதீங்க அத்தை… என்னால் தாங்கமுடியாது”.



விண்மீன் மின்னிதழ்

“உன்னைப்போயி நான்… இனிமே நான் உன்னை திட்டவே மாட்டேன்… நீ ஆசையா செய்து வச்ச பிரியாணியை ஒருவாய்கூட சாப்பிடாம கோபமா தூக்கி குப்பையில் போட்டுட்ட பாவி நான்… என்னை தெய்வம் மாதிரி காப்பாத்தியிருக்கிற மகாலட்சுமி நீ…” என பேசிக்கொண்டே இருந்தார் கமலா.

இதோடு கதை முடிந்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால்…

டிவியில் இந்தியன் 2 ட்ரெய்லரில் “ஓடமுடியாது ஒளியமுடியாது” என கமல் சொல்வது சத்தமாக வெளியே வரை கேட்டது. அதையும் மீறி…

“வெளிய அங்கயே நில்லு, புகுந்த வீடு வரும்போது முதல்ல வலது கால் எடுத்து வைக்கணும்னுகூட தெரியாதா உனக்கு?” என்ற குரலைக் கேட்டு அரண்டுபோனாள் ஸ்வேதா. ஸ்வேதாவைச் சுற்றியிருந்த, இதுவரை நிஜ சந்தோஷத்தில் இருந்த, கூடவே வந்த உறவினர்கள் பயத்தை மறைத்துக் கொண்டு அசட்டுச்சிரிப்பு சிரித்தனர். உள்ளே மகாராணி போல நாற்காலியில் உட்கார்ந்தபடி சத்தமிட்டது மாமியார் கவிதா.

இப்படியாகத்தான் ஆரம்பித்தது ஸ்வேதாவின் புகுந்தவீடு படலம்.

# மண்டாடி

## பரிவை சே. குமார்



மண்டாடி என்றால் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லும்போது, கடலின் தன்மையையும் காற்றையும் கணித்து, தனது படகையும் அதில் இருக்கும் மீனவர் குழுவையும் வழி நடத்தக்கூடிய தலைமை நிலையில் இருப்பவர் ஆவார். இந்தப் படத்தில் ஒரு இக்கட்டான சூழலில், பாய்மரப் படகுப் போட்டியின் போது தன்னால் பயிற்றுவிக்கப்பட்ட அணியை வழிநடத்தி வெற்றி வாய்ப்பை உயிரைப் பணயம் வைத்துப் போராடி பெற்றுத் தருகிறார் 'மண்டாடி'யான சூரி.

போட்டி சம்பந்தமான சினிமாக்களைப் போன்ற, தோல்வியும் இறுதி வெற்றியுமான கதைதான் என்றாலும் எடுத்துக் கொண்ட களம் வித்தியாசமானது. இதுவரை இப்படியானதொரு களத்தில், அதுவும் முழுக்க முழுக்க கடலுக்குள் விறுவிறுப்பாய் ஒரு போட்டியை படமாக்கியதாய் தெரியவில்லை. சிறப்பான காட்சி அமைப்புகளே இந்தப் படத்தை மற்ற போட்டி சம்பந்தமான படங்களில் இருந்து வித்தியாசப் படுத்தியிருக்கிறது.

தமிழ் சினிமாவில் நகைச்சுவை நடிகராக அறிமுகம் ஆகி, நாயகனாய் ஜெயித்தவர்கள் சிலரே. அந்தச் சிலரில் முக்கியமானவராய் ஆகியிருக்கிறார் சூரி. அவருக்கு ஏதோ மச்சமிருக்கும் அதான் ஜெயிச்சிட்டாரு என்றெல்லாம் போகிற போக்கில் சொல்லிவிட முடியாது. விடுதலை, கொட்டுக்காளி, மாமன் என அவர் தேர்ந்தெடுத்த கதைகளும் அதற்கான உழைப்புமே அவரை மண்டாடியில் கூடுதல் உழைப்பைக் கொடுக்க வைத்திருக்கிறது. அதில் அவர் மிகப்பெரிய வெற்றியைச் சுவைத்து முன்னணி நாயகர்களின் வரிசையில் போய் அமர்ந்திருக்கிறார்.

தமிழ்த் திரையுலகம் எப்போது வித்தியாசமான களங்களையும் , புதுமையான காட்சி அமைப்புக்களையும் வாரி அணைத்துக் கொள்ளும் என்பது இந்தப் படத்தின் மூலம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ரத்தத்தையும், வன்முறையையும், பாலியல் காட்சிகளையும், போதை ஆட்டங்களையும், துப்பாக்கிச் சத்தங்களையும்தான் தமிழ்ச்சமூகம் விரும்புகிறதென ஆட்டம் போடுவோர் மத்தியில், கிறுக்குப் பயலுகளா இப்படி அழகியலாய் கதை சொன்னால் மக்கள் கொண்டாடுவாங்கடா என நிரூபித்திருக்கிறது மண்டாடி படக்குழு.



படத்தின் இறுதிக் காட்சியில் பாய்மரப் படகு சுழலில் சிக்குவதைப் போல் துப்பாக்கிச் சத்தமும், ரத்தமுமாய் வந்த சர்தார் 2 சிக்கிச் சின்னாபின்னமாகியிருக்கிறது.

சூரியோட உழைப்புக்கு முதலில் வாழ்த்துச் சொல்ல வேண்டும். படத்தின் ஆரம்பக் காட்சியில் இறுகிய முகத்துடன் சென்னையில் வேலை செய்வதாக இருக்கட்டும், தன்னிடம் அடைக்கலமாய் வந்த தனது ஊரைச் சேர்ந்த மாரிக்காக இருபது வருடங்களுக்குப் பிறகு சொந்த ஊருக்கு வந்து வில்லனுடன் மோதுவதாக இருக்கட்டும், தான் செய்யாத குற்றம் என்றாலும் அதில் தனக்குப் பங்கு இருப்பதால் அதை நினைத்து வருந்துவதாக இருக்கட்டும், இறுதிக் காட்சியில் மண்டாடியாய்

கடலுக்குள் போராடுவதாய் இருக்கட்டும் எல்லா இடத்திலும் நமக்கு வெண்ணிலா கபடிக்குழு புரோட்டா சூரி தெரியவே இல்லை. காளிதான் கண் முன்னே நிற்கிறார். மனிதர் தனக்கான இடத்தை நோக்கிப் பயணிக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார் என்பது படத்தைப் பார்க்கும் போது நமக்குப் புரியும். அவரின் கஷ்டங்களெல்லாம் அவருக்கு இப்போது வெற்றி என்னும் கோப்பையைக் கையில் கொடுத்திருப்பதுடன் தமிழின் முன்னணி நாயகனாகவும் நிறுத்தியிருப்பதில் சூரிக்கு இருக்கும் மகிழ்ச்சியே நமக்கும். வாழட்டும்... வளரட்டும்.

பெரும்பாலான போட்டிப் படங்களில் நாயகனுக்கு இருக்கும் முக்கியத்துவம் நாயகிக்கு இருப்பதில்லை. காதலியாய் இருக்கும் போதும் சரி, அப்பாவின் மரணத்தின் போது தனது காதலனை திட்டித் தீர்க்கும் போதும் சரி, வேறொருவனின் மனைவியாக ஆனபின் ஊருக்குத் திரும்பி வந்த காதலனை வெறுத்து கோபத்தை வெளிப்படுத்துவதிலும் சரி, இறுதிக் காட்சியில் உன்னால் முடியும் எனத் தன்னம்பிக்கை கொடுப்பதிலும் சரி, அடித்து ஆடியிருக்கிறார் ஏஞ்சல் ராக்கம்மாவாக வரும் மஹிமா நம்பியார். அட்டகாசமான நடிப்பு.

தனது முன்னாள் காதலியின் முன் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்பதெல்லாம், அதுவும் வயதுக்கு வந்த அவளின் மகனுக்கும் , தனது நண்பனான அவளின் கணவனுக்கும் முன்னே 'தாயி...' என மன்னிப்புக் கோரி நிற்பதெல்லாம் தமிழ் சினிமாவுக்குப் புதிது. கிராமத்தில் பிறந்து உறவுகளுக்கு மத்தியில் வாழ்ந்தவர்களுக்கு இந்தக் காட்சியில் துக்கம் தொண்டையை அடைத்து, கண்ணீரை வெளியேற்றும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்தில்லை. அந்த அனுபவத்தை நான் உணர்ந்தேன். தன் முன்னே மன்னிப்புக் கேட்டுவிட்டு அவன் நகர்ந்ததும் அவள் உடைந்து அழுவதும், ஆதரவாய் நிற்கும் கணவனின் மடியில் தலை சாய்த்து ஆதரவு தேடுவதும், மகன் ஆறுதலாய் கைகளைப் பிடித்துக் கொள்வதும் ஆஹா கவிதை.

வில்லன் சாட்டைப்புலியாக சுஹாஸ், நண்பனாய் இருந்து எதிரியாய் மாறி இறுதிவரை மோதிக் கொண்டே இருக்கிறார். அவருக்கு குரல் ஒரு சில சமுதாயப் பிரச்சினைகளில் மட்டும் வாய் திறந்து அரசியல் பேசும் வெற்றிமாறன் போலும். குரல் நன்றாகப் பொருந்திப் போகிறது. அரசியலில் மகளுக்கு ஒரு இடம் கிடைக்கும் என எதிர்பார்த்து அதில் வெல்லமுடியாமல் போன சத்தியராஜ், இந்தப் படத்தில் அவருக்கான இடத்தை சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார். அவருடைய நடிப்பு சிறப்பு.

படத்தில் நடித்த மற்ற அனைவரும் தங்களது கதாபாத்திரத்தை உணர்ந்து மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். இசை ஜி.வி.பிரகாஷ் பாடல்களும் பின்னணி இசையும் சிறப்பு. இந்தாளு நாயகனாய் ஆகிறேன் எனத் திரியாமல் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அனிருத், சாய் போன்றோரின் தொல்லைகளில் இருந்து சில படங்களிலாவது நாம் தப்பிக்கலாம். பாடல்களில், சண்டைகளில் எல்லாம் பாத்திரங்களைப் போட்டு உருட்டாமல் ராஜா இசைக்குப் பக்கத்தில் உட்கார வைக்கிறார்.

படத்தின் வெற்றிக்கு முக்கியக் காரணம் கடல் காட்சிகள்தான்... கரையோரத்தில் வைத்து காட்சிகளை எடுத்து முடிக்காமல் ஆழ் கடல் பகுதிகளுக்குச் சென்று படமாக்கியிருக்கிறார்கள். அதுவும் பாய்மரப் படகுப் போட்டியின் போது அவர்களுக்குள் நடக்கும் மோதல், கடலில் தோன்றும் சுழி, காற்றுக்குத் தகுந்தவாறு பாயை மாற்றுதல், கயிறு மாற்றுதல் என அட்டகாசம் பண்ணியிருக்கிறார்கள்.

ஒளிப்பதிவு எஸ்.ஆர்.கதிர், அட்டகாசம்... அதுவும் கடல் காட்சிகளில் மனிதர் அடித்து ஆடியிருக்கிறார். பிரதீப்பின் படத்தொகுப்பு கச்சிதம்... படத்தின் சண்டைக் காட்சிகளை பீட்டர் ஹெய்னுடன் இணைந்து ஸ்டண்ட் சிவா மற்றும் மகேஷ் மாத்யூ ஆகியோர் செய்திருக்கிறார்கள். முக்கியப் போட்டிக்கு முன் பயிற்சி படகுப் போட்டிக்குப் பின் வில்லனுடன் சூரி மோதும் சண்டைக்காட்சியும் இறுதிக் காட்சியில் படகில் இருந்தபடி மோதும் காட்சிகளும் அட்டகாசம்.

எல்ரெட் குமார் மற்றும் வெற்றிமாறன் தயாரித்திருக்கும் இப்படத்துக்கான கதையை மதிமாறன் புகழேந்தி, ஆர்.மோகன வசந்தன் மற்றும் திறல் சங்கர் ஆகியோர் எழுதியிருக்கிறார்கள். படத்தின் இயக்குநர் மதிமாறன் புகழேந்திக்கு இப்படம் உச்சம். இனி எடுக்கும் படங்களை இதற்கு மேல் உச்சமாகக் கொடுக்க அவர் அதிகம் உழைக்க வேண்டியிருக்கும். முகவைப் பட்டணம் என்ற ஊரில் நடக்கும் கதைக்களமாக இருந்தாலும் அதிகமான மக்கள் கூட்டமில்லாத தொண்டி கடற்பகுதியில்தான் படம் முழுவதும் எடுக்கப்பட்டிருக்கிறது. கடலும் படகுமாய் திரையில் விரியும் போது அட்டகாசமாய் தெரிகிறது தொண்டிக் கடல்.

மண்டாடி பார்க்க வேண்டிய படம்.

கசங்கிய மனதில்
காயங்களின் சுருக்கம்
கண்ணீர் ஆறுதல் சொல்கிறது
யாரோமேல் பழி சுமத்தி.

-------------

அணைத்துக் கொள்
அணிந்து கொள்
அருகாமை அனலில்
நாணம் உருகும்படி கொல்.

**கமலா. ரா**

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

WE BRING BOOKS TO HOME

WWW.GALAXYBS.COM



Whatsapp 9994434432

